கானத்திடை வேங்கைஎழக் கண்ணினர்கள் அன்றே" (590)

### யோகம்

இது கோள்களின் சேர்க்கையைக் குறிக்கிறது. இது விஷ்கம்பம் முதல் வைத்ரிதி முடிய 27 யோகங்களாகும்.

### கரணம்

ஒரு திதியின் முதற்பகுதிக்கு ஒரு கரணமும், பிற்பகுதிக்கு ஒரு கரணமுமாக முப்பது திதிகளுக்கு அறுபது கரணங்கள். திதி, நட்சத்திரம், யோகம் இவை முடியும் காலத்தையே இத்தனை நாழிகையென்று பஞ்சாங்கம் குறிப்பிடுகின்றது.

### மாதம்

மாதத்தைத் திங்கள் என்பது தமிழர் மரபு. பன்னிரண்டு இராசிகளையுடைய இராசிச் சக்கரத்தைச் சூரியன் ஓர் ஆண்டில் சுற்றிவருகிறது. ஒவ்வோர் இராசியிலும் சூரியன் ஒரு மாத காலம் தங்குகிறது. இதனைச் சூரியமான மாதம் அல்லது சவுரமான மாதம் (ஏறத்தாழ 30 நாள்) என்பர். 27 நட்சத்திரங்களையுடைய இராசிச் சக்கரத்தைச் சந்திரன் ஒருமுறை சுற்றிவரும் காலத்திற்குச் 'சந்திரமான மாதம்' (27½) என்று பெயர். ஒரு சந்திரமான மாதத்திற்குள், வளர்பிறையும் அதன் இறுதியான பௌர்ணமியும், தேய்பிறையும் அதன் இறுதியான அமாவாசையும் ஏற்பட்டுவிடும். சூரியனும் சந்திரனும் ஒரே நட்சத்திரத்தில் காணப்படுவது அமாவாசை. அமாவாசைக்கு மறுநாளிலிருந்து புதிய மாதம் தொடங்கும் ஏதேனும் ஒரு சூரியமான மாதத்தில் 'இரண்டு பௌர்ணமிகள்' அல்லது 'இரண்டு அமாவாசைகள்' ஏற்பட்டால் அதற்குச் 'சூன்ய மாதம்' என்று பெயர்.

ஒரே நாளில் எட்டுத் தேர்களைச் செய்யும் ஆற்றலுடைய தச்சன், ஒரு திங்களில் ஒரு தேர்ச்சக்கரத்தின் காலை மட்டும் கடைந்து செய்தால் அது எவ்வளவு வலிமை உடையதோ அவ்வளவு வலிமை உடையவன் அதியமான் என ஔவையார், நெடுமான் அஞ்சியின் வலிமையைப் பாடுகின்றார். எனவே புறநானூற்றுக் காலத்திலேயே தமிழகத்தில் திங்களைக் கொண்டு காலம் கணிக்கும் ஆற்றல் பெற்றிருந்தனர் என்பது பெறப்படுகின்றது.

> ''திங்கள் முன்வரின் இக்கே சாரியை'' (எழுத்.உயி.46)
> ''திங்களும் நாளும் முந்து கிளந்தன்ன'' (மேலது.84)

என்ற தொல்காப்பிய நூற்பாக்கள் 'இகர ஈற்றுத் திங்கட் பெயர்', 'ஐகார ஈற்றுத் திங்கட் பெயர்' ஆகியவற்றிற்குச் சந்தி விதியைக் கூறுகின்றன. இகர ஈற்றில் முடியும் மாதப் பெயர்கள் வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, மார்கழி, மாசி, பங்குனி என்னும் ஒன்பதும் ஆகும். எஞ்சிய சித்திரை, கார்த்திகை, தை என்னும் மூன்றும் ஐகார வீற்றையுடைய மாதப் பெயர்கள். இவை 'ஆடிக்குக் கொண்டான்', 'சித்திரைக்குக் கொண்டான்' என்றாற் போன்று வரும். இகர ஈறு, ஐகார ஈறு என்ற இவ்விரு எழுத்திலேயே எல்லாத் திங்கட் பெயரும் முடிவதைப் பார்க்கும்போது தொல்காப்பியர் காலம் முதல் இப்போதைய திங்கட் பெயர்கள் வழங்கி வருவதை அறிய முடிகிறது.

பாரி மகளிர் தம் தந்தையையும், அரச செல்வத்தையும் இழந்து நலிவுற்றிருந்த காலத்திலே திங்கள் தோன்றக் கண்டு, தமது முந்தைய மாதத்து நிலையை எண்ணி, நிகழ்கால நிலைக்கு வருந்துவதனை,

> ''அற்றைத் திங்கள் அவ்வெண் நிலவின்
> எந்தையும் உடையேம்; எம்குன்றும் பிறர் கொளார்
> இற்றைத் திங்கள் இவ்வெண் நிலவின்
> வென்று எறிமுரசின் வேந்தர்எம்
> குன்றும் கொண்டார்; யாம் எந்தையும் இலமே'' (112)

என்ற புறப்பாட்டுக் கூறுகின்றது. இங்கே 'அற்றைத் திங்கள்', 'இற்றைத் திங்கள்' என்பன மாதங்களைக் குறிக்க திங்கள் என்ற பெயர் வழங்கப்படுதலும், திங்களை நோக்கி மாதப் பாகுபாடு கொள்ளுதலும் புலப்படுதல் எனலாம்.

கண்ணகிக்கு இமயத்தில் எடுத்த சிலையைக் கங்கையில் நீராட்டியபின் செங்குட்டுவன் கங்கைக்கரைப் பாடியில் வீற்றிருந்து, அங்கு வந்த மாடல மறையோனுடன் உரையாடிக் கொண்டிருந்தான். கதிரவன் அந்திவானை நெருங்கவே செக்கர்வானில் வெண்பிறை எழுந்தது. அதனைக் கண்ட கணி வஞ்சி நகரை விட்டு வந்து இன்றோடு 32 மாதங்கள் ஆயின எனக் கூறுகின்றான். இதனை,

''பகல்செல முதிர்ந்த படர்கூர் மாலை
செந்தீப் பரந்த திசைமுகம் விளங்க
அந்திச் செக்கர் வெண்பிறை தோன்ற
பிறைஓர் வண்ணம் பெருந்தகை நோக்க
இறையோன் செவ்வியின் கணிஎழுந்து உரைப்போன்;
எண்-நான்கு மதியம் வஞ்சி நீங்கியது
மண் ஆள் வேந்தே! வாழ்க!'' (சிலப்.27:144-150)

என்ற பாடலடிகளிலிருந்து அறிய முடிகின்றது. எனவே பிறையின் தோற்றம் நோக்கித் திதி, பக்கம், மாதம் அறிந்தனர் என்பது தெரிகின்றது. முழு நிலவின் தோற்றம் கொண்டு மாதம் கணக்கிடப்பட கதிரவனைக் கொண்டு காலம் பிரிந்த தன்மை அறியப்படுகிறது. சூரியனைக் கொண்டே காலம் பகுத்தறியப்பட்டது.

உவா நாளின் பிறையின் தோற்றம் முதற்கொண்ட பதினான்கு நாட்கள் 'முற்பக்கம்' என்றும் நிறைமதி நாளின்பின் வரும் பதினான்கு நாட்கள் 'பிற்பக்கம்' என்றும் வழங்கப் படுகின்றன. அதோடு 'எண் நாள் திங்கள்' 'பெரும்.*11-12*; புற.*118*), எனும் வழக்கு எட்டாம் நாள் காணும் பிறையைக் குறித்தலினால், பிறைத் தொடக்கமாகத் திங்களின் தொடக்கமும் கொள்ளப் பெற்றது என்பதைக் குறிக்கின்றது.

### மாதத் தொடக்கம்

திங்கள் அமாந்தமாய் முடிவுற, பிறைத்தொடக்கமாக அடுத்த திங்களின் நாட்களைக் கணக்கிட்டுள்ளனர்.

''பங்குனி உயர் அழுவத்துத்
தலைநாள் மீன்நிலை திரிய'' (புற.229:5-6)

என்பது பங்குனி மாதத்தின் முதல் பதினைந்து நாட்களில் அம்மாதத்திற்குச் சிறப்பான உத்தர நாள், உச்சியிலிருந்து

சாய்தலைக் குறிப்பிடுகிறது. இதனாலும் அமாந்த முறை வழக்கம் புலனாகிறது.

## மாதப் பெயர்கள்

ஒவ்வொரு மாதத்தும் நிறைமதி நாளில் சந்திரனோடு சேரும் நட்சத்திரப் பெயரைக் கொண்டு மாதப் பெயர்கள் அமைந்திருக்கின்றன. சங்கப் பாடல்களிலும் பிற இலக்கியங் களிலும் பயின்று வரும் சில குறிப்புகள் அதனை மெய்ப்பிக்கின்றன. சங்க இலக்கியங்களில் திங்கட் பெயர்கள் சுட்டப்பட்ட போதிலும் அனைத்துத் திங்களின் பெயர்களும் இடம் பெறவில்லை.

### சித்திரை

ஒவ்வோர் ஆண்டிலும் இந்திர விழாவானது சித்திரை மாதத்தில் சித்திரை நாளில் வரும் பௌர்ணமியன்று நடத்தப்பட்டதைச் சிலம்பின்வழி (64) அறியமுடிகிறது.

### வைகாசி

மணிமேகலை மணிபல்லவத் தீவிலுள்ள கோமுகிப் பொய்கையில் அமுத சுரபியைப் பெற்றது புத்த தேவனுக்கு உரிய நாளான வைகாசி விசாகத்தில் (மணி.11:40-43). முன்பு அமுத சுரபிக்கு உரியவனாயிருந்த ஆபுத்திரன் மறுபிறப்புத் தோற்றம் செய்ததும் வைகாசி மாதத்து விசாக நாளில்தான் (மணி.12:23-26). இவ்விரண்டிடங்களிலும் வைகாசித் திங்கள் இடம் பெறுகின்றது.

### கார்த்திகை

கார்த்திகை மாதத்தில் கார்த்திகை நட்சத்திரத்துடன் பௌர்ணமி சேர்ந்து வருவதால் கார்த்திகைத் திருவிழா கொண்டாடப்பட்டு வருகிறது. எனவே கார்த்திகைத் திருநாள் சுட்டப்படும் இடங்கள் கார்த்திகை மாதத்தையும் சுட்டுவதாகப் பொருள் கொள்ள இயலும்.

> ''இலைஇல மலர்ந்த முனைஇல் இலவம்
> கலிகொள் ஆயம் மலிபுதொகுபு எடுத்த
> அம்சுடர் நெடுங்கொடி பொற்பத் தோன்றி'' (அக.11)

என்ற அடிகள் மலர்களின் தோற்றமானது கார்த்திகை விளக்குகளை ஒத்திருந்தது என்றுணர்த்துவது, கார்த்திகைத் திருநாளன்று மக்கள் கார்த்திகை விளக்குகளை ஏற்றி வைத்து விழாவாகக் கொண்டாடினர் என்பதைப் புலப்படுத்துகிறது.

முழுநிலவுடன் கூடிய அறுமீன் சேர்ந்து விளங்குகின்ற நடு இரவில் தெருக்கள் தோறும் மக்கள் விளக்குகளைத் தொங்கவிட்டுக் கார்த்திகைத் திருநாளினைக் கொண்டாடினர் என்பதை,

''குறுமுயல் மறுநிறம் கிளர மதிநிறைந்து
அறுமீன் சேரும்அகலிருள் நடுநாள்
மறுகு விளக்குறுத்து, மாலை தூக்கி
பழவிறல் மூதூர்ப் பலருடன் துவன்றிய
விழவுடன் அயர, வருகதில் அம்ம'' (141:7-11)

எனவரும் அகநானூற்று அடிகள் புலப்படுத்துகின்றன.

கார்த்திகை விழாவின்போது மக்கள் குன்றின்மீது விளக்குகளை ஏற்றி வைத்துக் கொண்டாடினர் (185) என்பதையும் இந்நூல் சுட்டுகிறது.

கார்த்திகை மாதத்தில் ஆகமத்தின்படி திருநாள் செய்து சிவனைப் பணிந்த அளவில் மலைமேல் ஓர் ஒளி உண்டாகி அதில் சூரிய ஒளியாய்ச் சுவாமி எழுவார் என்று அருணாசலப் புராணம் கூறுவதனைக் 'கார்த்திகைத் திங்களிற் றிருநாளாகமத்தின்படி நடத்திக் கனற் கண்ணானைத்' (5:54) என வரும் பகுதி காட்டுகின்றது. மேலும், இந்நூலில் 'கார்த்திகைக்குக் கார்த்திகை' (2:81) என்ற பகுதியிலும் கார்த்திகைத் திங்கள் பற்றிய குறிப்பு வருகின்றது. ஆண்டுதோறும் கார்த்திகைத் திங்களில் கார்த்திகை உடுமீன் வருநாளில் திருவண்ணாமலையில் இறைவன் சோதிப் பிழம்பாய்க் காட்சி தருவார் என்பதனை,

''வளர்கார்த்திகை மாதந்தோறும் ஒருகார்த்திகை நாடண்ணிலே
பளகானதில் லாவன்பர்கள் பிரிவாகவே யேத்தித் தொழக்
கிளர்மாமலை தனிலேயொளி கெழுசோதி காட்டா நின்றநின்
அளவார்தெரி பவரையனே அருணாசலா அருணாசலா''

என்ற பாடல் பக்திப் பெருக்கு ஊற்றெடுக்குமாறு அமைகின்றது. இந்நூலின் 8ஆம் பாடலிலும் கார்த்திகை, திங்கள், நாள் பற்றிய குறிப்பு வருகின்றது.

**ஆவணி**

நாராயணன் பிறப்பு பற்றிக் கூறும் 'எம்பிரான் சதகத்தில்' (48, 49) ஆவணி மாதம் பற்றிய குறிப்புக் காணப்படுகிறது.

**ஐப்பசி**

'ஐப்பசி ஓண விழாவும் அருந்தவர்கள்' (சம்.தேவா. 2:47.2) என்பதில் ஓண விழா நடைபெறுகின்ற செய்தியைப் பற்றிக் கூறும்போது ஐப்பசி மாதம் பற்றிய குறிப்பும் வருகின்றது.

**மார்கழி**

மார்கழி மாதம் மதிநிறைந்த நாளில் பாவை நோன்பினை மேற்கொள்பவர்கள் நீராடத் தொடங்குதலை,

> ''மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்நாளால்
> நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர்'' (திருப்.1)

என்ற அடிகள் காட்டுகின்றன. பின்னரும்,

> ''வாழ உலகினில் பெய்திடாய் நாங்களும்
> மார்கழி நீராட மகிழ்ந்து - எல்ஓர் எம்பாவாய்!'' (திருப்.4)

என்று மழையை வேண்டும்போது மார்கழி மாதம் சுட்டப்படுகின்றது. அப்பாவை நோன்பு மார்கழி நிறைமதி நாளில் மிருகசீரிட நாளில் தொடங்கப்படுவதால் 'மார்கழி நீராடல்' என ஆண்டாள் குறிப்பிடுகிறார். 'மாலே மணிவண்ணா மார்கழிநீர் ஆடுவான்' என்ற அடியிலும் மார்கழித் திங்கள் இடம் பெறுகின்றது.

**தை மாதம்**

தைமாதம் நீராடி நோன்பு நோற்றலைச் சங்கப்பாடல்கள் குறிப்பிடுகின்றன. பரிபாடல் திருவாதிரையில் அந்தணர் விழா தொடங்கியதையும், அப்பொழுது முதுபார்ப்பினிமார் நோன்பு முறை காட்டக் கன்னிப்பெண்கள் 'அம்பாவாடல்' என்னும் தைநீராட்டம் தொடங்குதலையும் விளக்குகிறது. இங்கே திருவாதிரை என்பது மார்கழியில் மதிநிறைந்த மிருகசீரிட நாளுக்கு அடுத்த நாள் பூர்ணிமாந்த முறையில் பார்ப்பின் ஆதிரைத் தையின் தொடக்க நாள். எனவே

தையில் தொடங்கும் நீராடல் 'தைநீராடல்' எனப்பட்டது. தைநீராடி மகளிர் நோன்பு இயற்றுதலை,

''தையின் நீராடிய தவம் தலைப்படுவாயோ'' (59)

எனக் கலித்தொகை குறிப்பிடுகின்றது.

தைத்திங்களில் நோன்பு இயற்றுவார் அமர்ந்திருப்பது போல் குரங்குகள் மழையில் நனைந்து அமர்ந்திருப்பதாக நற்றிணை,

''வான்பெயர் நனைந்த புறத்த நோன்பியர்
தையூன் இருக்கையில் தோன்றும் நாடன்'' (22)

என்று குறிப்பிடுகிறது. மேலும், இந்நூல்,

''தைத்திங்கள் தண்கயம் படியும்
பெருந்தோட் குறுமகள்'' (80)

என்ற அடிகளிலும் தைத்திங்கள் பற்றிக் கூறுகின்றது. மேலும் தைத்திங்கள் பற்றி ஐங்குறுநூற்றில்,

''நறுவீ ஐம்பால் மகளிர் ஆடும்
தைஇத் தண்கயம் போலப்
பலர்படிந் துண்ணும் நின்பரத்தை மார்பே'' (84)

என்ற அடிகளில் வருகின்றது. திருப்பாவை சுட்டிய இப்பாவை நோன்பு திருப்பாவையை அடுத்து வரும் நாச்சியார் திருமொழியில் 'தை ஒரு திங்களும் தரை விளக்கி' (1) வந்தமை என மார்கழி, பௌர்ணமியில் தொடங்கி, தை மாதம் முழுவதும் நோன்பு இயற்றுதலைப் புலப்படுத்துகிறது.

மாசி

ஆண்டாள் மார்கழி நிறைமதியில் தொடங்கிய பாவை நோன்பைத் தை மாதப் பௌர்ணமி வரையில் நிகழ்த்தி, மாசி முன்னாளாம் தைமதி நிறைநாளில் காம நோன்பு தொடங்குதலை,

''தைஒரு திங்களும் தரைவிளக்கி
தண்மண்டலம் இட்டு மாசி முன்னாள்'' (நாச்.1)

என்ற வரி காட்டுகின்றது. இங்கே 'தை ஒரு திங்களும் தரை விளக்கி' என்றது. திருப்பாவையில் குறித்த பாவை நோன்பை. இதை நிறைவு செய்ததும், மாசி முன்னாளாம்

தை நிறைவில், நிறைமதி நாளில் காமனை நோக்கி நோன்பு இயற்றத் தொடங்குகின்றாள். இந்நோன்பு பங்குனி மாதம் நிறைவு பெறக்கூடிய கடை நாளாம் உத்திரம் வரை கொண்டாடப்படுகிறது. இதனைப் பின்வரும் நாச்சியார் திருமொழிப் பாசுரங்களில் காணமுடிகிறது.

பங்குனி

பங்குனி மாதம் முழுவதும் மாசி முன்னாளில் தொடங்கிய இக்காம நோன்பு இயற்றப்பெறுதலை,

''உருவு உடையார் இளையார்கள் நல்லார்
ஒத்து வல்லார்களைக் கொண்டு, வைகல்
தெருவிடை எதிர்கொண்டு பங்குனிநாள்
திருந்தவே நோற்கின்றேன் காமதேவா!'' (நாச்.1:6)

பங்குனி நாள் கடை வரையில், அதாவது உத்தர நாள் வரையில் காமன் போதரும் காலமாகக் கொண்டு போற்றி இந்நோன்பு நிறைவு செய்யப்படுகிறது.

''காமன் போதரு காலம் என்றுபங்
குனிநாள் கடை பாரித்தோம்'' (நாச்.2:1)

ஆண்டாள் பாசுரங்களின் வழி பார்க்கும்போது பூர்ணிமாந்த முறை வழக்கப்படி நோன்பு முதலியன இயற்றப்பெறுதல் புலனாகிறது.

''பங்குனி முயக்கம்'' (அகம்.137:9)
''பங்குனி பருவஞ் செய்தான்'' (சீவக.851)

என்பவையும் பங்குனி பற்றிய குறிப்புகளாக அமைகின்றன. உறையூர் பங்குனி உத்தர விழா பற்றி அகப்பொருள் சூத்திர உரையுள் (16) கூறப்படுகிறது.

சம்பந்தரின் மயிலாப்பூர் தேவராமாகிய 'மட்டு இட்ட புன்னை' எனத் தொடங்கும் பூம்பாவைப் பதிகத்தில் ஐப்பசி முதல் பங்குனி வரையில் அங்கு நிகழும் திருவிழாக்களைக் குறிப்பிட்டுள்ளார் (2:47.2-7).

சித்திரை முதல் பங்குனி ஈறாக மாதப் பெயர்கள் பழைமையாகவே வழங்கி வருவன என்பதும், சங்கப் பாடல்கள் முதலியன இம்மாதப் பெயர்களைச் சுட்டுதலும்

இவ்வழக்கின் தொன்மையைப் புலப்படுத்தும். மாதம் பற்றிய உணர்வும் அன்றே இருந்தது என்பது மாதம் பற்றிய குறிப்புகளின் வழி தெரியவருகின்றது. ஒவ்வொரு மாதத்தும் நிறைமதி நாளில் சந்திரனோடு சேரும் நட்சத்திரப் பெயரைக் கொண்டு மாதப் பெயர்கள் அமைந்திருத்தலும் இலக்கியச் சான்றுகளும் இவ்வுண்மையை உணர்த்தி நிற்கின்றன.

**அயனம்**

சூரியன் மகரராசியில் நுழைவது 'உத்தராயணம்' என்றும், கடகராசியில் நுழைவது 'தட்சணாயணம்' என்றும் அழைக்கப்படுகிறன. ஓர் 'அயனம்' என்பது ஆறு மாதங்கள். 'அயனசங்கிராம்' (9:24) எனத் தொடங்கும் அருணாசல புராணப் பாடல் உத்தராயண, தட்சிணாயனப் புண்ணிய காலங்களைக் குறித்து வருகின்றது. பீஷ்மர் உயிர்விடும் தருவாய் தட்சிணாயணக் காலமாக இருந்ததால் பூமியில் விழுந்தால் உயிர் பிரிந்து விடுமென உத்தராயணக் காலம் வருவரை அம்புப் படுக்கையின் மீதிருந்து பின் உத்தராயணக்காலம் வந்தபின் பூமியில் விழுந்து உயிர் விட்டார் என மகாபாரதம் கூறுகின்றது. எனவே இறப்பிற்குப்பின் முக்தியடைய உத்தராயண காலமே சிறந்தது என்பது பெறப்படுகின்றது.

**பருவம் (இருது)**

இருதிங்கள் சேர்ந்த காலப்பகுதி 'பருவம்' அல்லது 'இருது' எனப்படும். ஆவணி தொடங்கி இரண்டிரண்டு மாதங்களாக முறையே கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என ஆறு பருவங்கள். கார் பருவத்தை முதன்மையாக வைத்துப் பிற பருவங்களை எண்ணியுள்ளனர்.

''காரே, கூதிர், முன்பனி, பின்பனி,
சீர் இளவேனில் முதுவேனில் என்றாங்கு
இருமூன்று வகைய பருவம்
அவைதாம்,
ஆவணி முதலா இரண்டு இரண்டுஆக
மேவின திங்கள் எண்ணினர் கொளலே'' (திவா.தெய்வ.)

தொல்காப்பியர் அகத்திணை இயலில் ஐவகை நிலங்களுக்குரிய பொழுதுகளை வகுத்துரைக்குமிடத்து, 'கார்', 'பனி', 'முன்பனி', 'பின்பனி', 'வேனில்' (தொல்.பொரு. அக.6, 9, 10) என்னும் பெரும்பொழுதுகளைக் குறிப்பிட்டுள்ளார். மேலும் அவர் மழை, பனி, வெயில் என்னும் மூன்று பருவப் பெயர்களுக்கு உயிர் மயங்கியலிலும், புள்ளி மயங்கியலிலும் சந்தி விதி (உயிர். மய. 39, 82, 85) கூறுதலும் குறிப்பிடத்தக்கது.

பருவத் தோற்றங்கள் பற்றிய பல குறிப்புகள் சங்கப் பாடல்களிலும் (அகம். 4:7; குறுந். 21:4; 76:5-6; 380:1-2; மலைபடு. 362-364; நற்.224:3-4; 347:1-2; நெடு.12:72; கலி.26:7-8; மதுரைக். 106-7), பிற்கால இலக்கியங்களிலும் இடம் பெற்றுள்ளன.

சிலப்பதிகாரத்தில் ஊர்காண் காதையில் கார் முதலிய ஆறு வகைப் பருவமும் முறையே சுட்டப்பெற்றுள்ளன. கடைகழி மகளிர், காலத்திற்கு ஏற்ற இன்பங்களில் ஈடுபட்டமையை விளக்க வந்த இடத்திலே ஆறு பருவ காலங்களில் அம்மகளிரின் பொழுதுபோக்கு வகையை இளங்கோவடிகள் சுட்டியுள்ளார் (சிலப்.14:86-125).

**ஆண்டு**

சந்திரன் பூமியை ஒருமுறை சுற்றி வரும் காலம் ஒரு மாதம் எனவும், பூமி சூரியனை ஒருமுறை சுற்றிவர எடுக்கும் காலம் ஓர் ஆண்டு எனவும் கணக்கிடப்பட்டன. இராசிச் சக்கரத்தின் 360 பாகையினைச் சூரியன் கடக்கும் காலத்திற்குச் 'சௌரமான ஆண்டு' (365 நாள்) என்று பெயர். நட்சத்திரமான நாளால் கணிக்கப்பட்டு சௌரமான ஆண்டை அனுசரித்த காலத்திற்கு 'நட்சத்திரமான ஆண்டு' (366 நாள்) என்று பெயர். சந்திரமான மாதத்தினால் உண்டாகும் ஆண்டிற்குச் 'சந்திரமான ஆண்டு' என்று பெயர் (355 நாள்). சோதிடக் கணிதத்தில் பல்வேறு கணிதங்களுக்குப் பயன்படுத்தப்படும் ஓர் ஆண்டு கால அளவிற்கு 'சாவன ஆண்டு' (360 நாள்) என்று பெயர். இந்திய ஆண்டுகள், பிரபவ, விபவ, சுக்கில, குரோதன முதலிய 60 ஆண்டுகள் உள்ளன. ஒவ்வோர் ஆண்டுக்கும் அதி தேவதை, அதிதேவதையின் தோற்றம் முதலியன சோதிடத்தில் கூறப்பட்டுள்ளன.

ஆண்டு என்பதைக் குறிக்கச் சிந்தாமணி 'பன்னிரு மதியின்' *(1220)* என்றும், ஆறு - இருமதியின் என்றும் சுட்டுகிறது; அருணாசல புராணம், 'பன்னிரு மாதந்தோறும்' *(10:11)* என்று கூறுகிறது. மாத்திரை, நாழிகை, முகூர்த்தம், யாமம், நாள், திங்கள், இருது, அயனம் எனச் செல்லும் காலப் பகுதியில் ஆண்டு என்பது ஒரு பெருங்காலப்பகுதி. 'யாண்டு இருது மதிநாள் ஆதிக் காலம்' என நன்னூலில் *(276)* பவணந்தி முனிவர் காலம் என்பதற்கு விளக்கம் தந்துள்ளார்.

மகளிர் கருப்பகாலம் பன்னிரு திங்கள் கொண்ட ஓர் ஆண்டு என்பதனை,

''முந்நால் திங்கள் நிறைபொறுத்து அசைஇ
ஒதுங்கல் செல்லாப் பசும்புளி வேட்கைக்
கடுஞ்சூல் மகளிர் போல'' (குறுந்.287:1-3)
''பன்னிரு திங்கள் வயிற்றிற் கொண்ட அப்பாங்கினால்''
(பெரி.3:2.8)

என வரும் பகுதிகள் தெளிவுறுத்துகின்றது.

மனிதர்க்கு ஆயுள் நூறாண்டு என வேதநூல் கூறுவதையும், மனித வாழ்வில் ஆண்டுகள் கழியும் வகையையும் தொண்டரடிப்பொடியாழ்வார் கூறுவதனை,

''வேதநூற் பிராயம் நூறு
மனிசர்தாம் புகுவரேனும்
பாதியும் உறங்கிப் போகும்
நின்றதிற் பதினை யாண்டு
பேதை பாலகன் அதுஆகும்
பிணிபசி மூப்புத் துன்பம்
ஆதலால் பிறவி வேண்டேன்
அரங்கமா நகரு ளானே'' (திருமாலை.3)

என்ற பாடலால் அறிய முடிகின்றது. சிவ சூரியன் தோற்றத்தால் நாள் ஆண்டு முதலியவை உருவாகின்றன என்ற குறிப்பைத் திருமந்திரத்தில் *(1267)* காணமுடிகின்றது. ஐந்தாம் ஆண்டில் கலைகளைக் கற்றலும், காளைப் பருவத்தில் படைக்கலங்களைப் பயன்படுத்துவதற்குக் கற்றலும் வேண்டுமென்று, சீவகசிந்தாமணி *(13:108)* சுட்டுகிறது. ஆதலால் ஆண்டு என்பது வாழ்க்கையின் இன்றியமையாக் காலப் பகுதியாக இருத்தலை உணர முடிகின்றது.

**ஊழி**

ஆண்டுகள் பல கூடி ஊழிகளாக ஆகின்றன. கணக்கிட இயலாத காலத்தின் மிகுதியை ஊழிக்காலம் என்றும் யுகம் என்றும் சுட்டும் வழக்கு தமிழரிடம் உள்ளது. இன்று நடக்கும் யுகம் கலியுகம் என்பதால் 'ஊழி' என்று சுட்டும் வழக்கு முன்பே தமிழர் கொண்டிருந்த ஒன்று என்பதனை இலக்கியங்கள் வழி அறியமுடிகின்றன.

> ''ஊழியும் யாண்டு எண்ணி யாத்தன;
> வெள்ள வரம்பின ஊழி போகியும்'' (ஐங்.281)

நின் வாழ்நாட்கள் மாதத்தைப் போன்றன ஆகுக; மாதங்கள் ஆண்டைப் போன்று ஒரு தன்மைய ஆகுக. ஆண்டுகள் ஊழி போன்றன ஆகுக. ஊழிகள் வெள்ளம் என்னும் பேரெண்ணின் எல்லையை உடையன ஆகுக. அவ்வாறு நினைத்து நான் உன்னைக் காணும் பொருட்டு வந்தேன் என இளஞ்சேரலிரும்பொறையை நோக்கி,

> ''நின்நாள் திங்கள் அனைய ஆக! திங்கள்
> யாண்டு ஓரனைய ஆக! யாண்டே
> ஊழி அனைய ஆக! ஊழி
> வெள்ள வரம்பின் ஆக! என உன்னி
> காண்கு வந்திசின் யானே!'' (பதிற்.90:51-55)

என்று பெருங்குன்றூர் கிழார் கூறியுள்ளார். இதில் முறையே நாள், திங்கள், யாண்டு, ஊழி என்பன சுட்டப் பெறுகின்றன. இங்ஙனம் அமையும் காலங்களின் இயல்புகள் வேறுசில பாடல்களிலும் (நான்மணி. *71; சிலப்.27:8-10;* திருவாய்.*2:7.4;* பெரியதிரு.*8:5.6; 9:5.3;* திருவிருத்தம் *16)* இடம் பெற்றுள்ளன.

அளவிற்கு எட்டாது செல்லும் காலத்தின் மிகப் பேரளவினதாகிய பேரெண்களைச் சுட்டிக் கூறும் மரபும் இலக்கியங்களில் காணப்படுகிறது. நெய்தல், குவளை, சங்கம், கமலம் என்பன பேரெண்களாக வருதலைப் பரிபாடல் காட்டுகின்றது. பதிற்றுப்பத்தும் வெள்ளம், ஆம்பல் என்பதனைப் பேரெண்களாகக் குறிப்பிட்டிருக்கின்றது.

ஐ, அம், பல் என வரூஉம் இறுதியாவது, தாமரை, வெள்ளம், ஆம்பல் என்னும் பேரெண்களாகிப் பல நூறு ஆண்டுகளைக் குறித்தலை,

"ஐ, அம் பல் எனவரூஉம் இறுதி
அல்பெயர் எண்ணும் ஆவியல் நிலையும்" (தொல்.புள்ளி. 98)

என்ற நூற்பா உணர்த்துகின்றது.

அளவிற்கு எட்டாது செல்லும் மிகப் பேரளவினதாகிய எண்களைப் பெரியாழ்வார் சுட்டுதலை,

"பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத் தாண்டு
பலகோடி நூறாயிரம்" (பெரிய.திரு.)

என்ற பாடலில் காணமுடிகின்றது.

ஊழி என்னும் பெருங்கால அளவில் ஊழிகள் நான்காகக் கூறப்பட்டுள்ளன (பரி.3:80; முதல் திரு. 71). இவ்வூழிகளாவன கிரேத யுகம், திரேத யுகம், துவாபர யுகம், கலியுகம் (பெரியதிரு.7:7:6). கலியுகம் பற்றியும், கலியுகம் நீங்கி கிருதயுகம் தோன்றும் (திருவாய். 5:2;1, 3, 10) என்பது பற்றியும் இலக்கியங்களில் கூறப்பெற்றுள்ளன. தமிழர்கள் சித்திரை முதல் பங்குனி வரைக்கான நாட்களை நாழிகை விநாடி அளவிற்குக் கணக்கிட்டுப் பகுத்துள்ளனர். இக்கணக்கீடு பெருவரம்பினதாக இருந்திருக்கின்றது. எண்ணிலடங்காத பல ஆண்டுகள் இணைந்தது 'ஊழி' என்பதும் தமிழரின் கருத்தாக அன்று முதல் இன்றுவரை காணப்படுகிறது. கடலால் உலகம் கொள்ளப்படுதல் என்ற நிலையிலேயே இவ்வூழி என்ற எண்ணத்தைத் தமிழர் கொண்டுள்ளனர்.

இதுகாறும் மிகச்சிறிய கால அளவு முதல் அளவிடு வதற்கு இயலாத பெருங்கால அளவு வரை இலக்கியங்களில் எங்ஙனம் இடம் பெற்றுள்ளன என்பது சுட்டப்பெற்றது. இனி இக்காலக் குறிப்புகள் இலக்கியங்கள் எழுந்த காலத்தை அறிதற்கு எங்ஙனம் துணைபுரிகின்றன என்பது கூறப்படுகின்றது.

## சோதிடமும் இலக்கியங்களின் காலமும்

சோதிடக் கணக்கீடுகளுக்குக் 'காலம்' என்பது அடிப்படையாக அமைகின்றது. காலம் பற்றிய குறிப்புகள் இலக்கியங்களில் வருதலைக் கொண்டு அவ்விலக்கியங்களின் காலம் சோதிடக் கணிப்பின் உதவியால் கணிக்கப்பட்டிருக்

கின்றது. தொல்காப்பியம், பரிபாடல், சிலப்பதிகாரம், கம்பராமாயணம், மகாபாரதம், திருப்பாவை முதலியவற்றின் காலம் குறித்துப் பலவிதக் கருத்துகள் இருப்பினும் சோதிடக் குறிப்புகளின் உதவியாலும் இவற்றின் காலங்கள் வரையறுக்கப்பட்டமைக்குச் சான்றுகள் கிடைத்திருக்கின்றன.

## தொல்காப்பியம்

வையாபுரிப் பிள்ளையைப் பின்பற்றி கே.எ. நீலகண்ட சாஸ்திரி, தொல்காப்பியத்தைக் காலத்தால் பிற்பட்டதொரு நூலாகக் கொண்டவர். அவர்தம் கருத்துக்கு உறுதி தேடிய சான்றுகளுள் ஒன்று தொல்காப்பியர் 'ஓரை' என்னும் சொல்லுக்குத் தம் இலக்கணத்தில் இடமளித்திருப்பது.

''மறைந்த ஒழுக்கத்து ஓரையும் நாளும்
துறந்த ஒழுக்கம் கிழவோற் கில்லை'' (தொல்.பொரு.கள.44)

இதில் வரும் 'ஓரை' எனும் சொல், 'ஹோரா' என்னும் கிரேக்கச் சொல்லின் மரூஉ. இச்சொல் முதலில் கிரேக்க மொழியிலிருந்து சமஸ்கிருத சோதிட நூல்களில் கி.பி.3, 4ஆம் நூற்றாண்டில் நுழைந்து, பிறகு வடமொழிச் சோதிட நூல்களின் மூலம் தமிழில் புகுந்து வழக்கேற்றது என்று ஊகித்தார். இதனைக் கொண்டு தொல்காப்பியர் வாழ்ந்த காலத்தைக் கி.பி.500 என்று அறுதியிட்டார். ஆனால் கே.கே. பிள்ளை கூறுவதாவது: கிரேக்கருடன் தமிழர் நேர்முகத் தொடர்பு கொண்டிருந்தவர்கள். யவனரின் 'நாழிகை வட்டில்' தமிழகத்தில் பயன்பட்டு வந்தது. ஆகையால் ஹோரா என்னும் சொல் கிரேக்கர் தமிழருக்கு நேரில் வழங்கிய சொற்களில் ஒன்றாகும். எனவே இந்தச் சொல் நேரடியாகத் தமிழில் ஆட்சிபெற்ற ஒன்று என்பதாகும்.[11]

இங்ஙனம் சோதிடம் தொடர்பான வேற்றுமொழிச் சொற்கள் காலத்தைக் கண்டறிதற்குப் பயன்படுவதோடு மட்டுமல்லாமல், இத்தகைய நம்பிக்கைகள் தமிழகத்தில் வேரூன்றிய காலத்தையும் அறியத் துணைபுரிகின்றன.

---

11. தமிழக வரலாறு மக்களும் பண்பாடும், ப.100

பரிபாடல்

''விரிகதிர் மதியமொடு வியல்விசும் புணர்ப்ப
நெரிதரூஉம் வையைப்புனல்'' (11:1.15)

என்பது விதி வழியாகவே உயர்ந்த பொதிய மலைக்கண் மழை பொழிய வையையிலே வெள்ளம் வந்தது என்ற பொருளைத் தருகின்றது. இதில் மீன்களின் பெயர் குறியீட்டு மொழிகளால் உணர்த்தப்பட்டுள்ளன. இந்தக் குறிப்பு உணர்த்தும் காலத்தை அறிஞர் கணக்கிட்டுள்ளனர். அது கி.மு. 161 ஆகிய கலி 2941 பிரமாதியாண்டு ஆவணி மாதம் பன்னிரண்டாம் நாள் வியாழக்கிழமை சதுர்த்தசி 15-4 அவிட்டம் 45-53 என்பதாகும்.[12]

சிலப்பதிகாரம்

சிலப்பதிகாரத்தில் கட்டுரைக் காதையில், மதுராபதித் தெய்வம், ஆடி மாதத்துக் கிருஷ்ணபட்சத்து அட்டமித் திதியில் வெள்ளிக்கிழமையன்று மதுரை எரிந்துபடும் என்னும் ஓர் உரை முன்பே உள்ளமையைக் கண்ணகிக்கு எடுத்துக் கூறுவதாக ஒரு நிகழ்ச்சி உள்ளது.

''ஆடித் திங்கள் பேரிருட் பக்கத்து
அழல்சேர் குட்டத்து அட்டமி ஞான்று
வெள்ளி வாரத்து ஒள்ளெரி யுண்ண
உரைசால் மதுரையொடு அரைசு கேடுறும்எனும்
உரையும் உண்டே நிறைதொடி யோயே!'' (23:133-137)

இக்குறிப்பினைக் கொண்டு எல்.டி. சாமிக்கண்ணுப் பிள்ளையும், இ.மு. சுப்பிரமணியப் பிள்ளையும் சிலம்பின் காலத்தை அறுதியிட முனைந்தனர். திரு.எல்.டி. சாமிக்கண்ணுப் பிள்ளையவர்கள் கி.பி.756ஆம் ஆண்டிற்கு ஒருவாறு பொருந்தும் என்றார்.[13]. இ.மு. சுப்பிரமணியப் பிள்ளை ஆடித் திங்கள் அழல்சேர் குட்டம், கார்த்திகைப் பரணி என்னும் குறிப்புக் கொண்டு கணித நூல் வழி கி.மு. 100 முதல் கி.பி. 144இல் இது நடந்திருக்க வேண்டும் எனக் கணிக்கின்றார்.[14]

---

12. பரி.11, பெருமழைப்புலவர் உரை. 13. An Indian Ephemeris, Vo.1, Part-1, P.III, 14. சிலப்பதிகார காலம், ப.85.

மணிமேகலை

வைகாசி விசாகம் புத்த தேவனுக்குரிய நாள். மணிமேகலை மணிபல்லவத் தீவிலுள்ள கோமுகிப் பொய்கை யில் அமுத சுரபி பெற்றதும் அந்நாளில்தான் (11:40-43). முன்பு அமுத சுரபிக்கு உரியனாயிருந்த ஆபுத்திரன் என்பான் மறுபிறப்புத் தோற்றம் செய்ததும் வைகாசி மாதத்து விசாக நாளில்தான் (12.23-26). இப்பகுதியில் இரண்டு இடங்களில் '**மீனத்து இடைநிலை மீனம்**' என்று வருகிறது. கார்த்திகையை முதலாகக் கொண்டு எண்ணும்போது 27 நட்சத்திரங்களுள் விசாகம் பதினான்காக வருவதால் இரண்டு இடங்களில் வரும் தொடர்களும் விசாக நட்சத்திரத்தையே குறிக்கின்றன.

'இருது இளவேனிலில் எரிகதிர் இடபத்து போதித் தலைவனோடு பொருந்திய போழ்தத்து' எனும் பகுதியைக் கொண்டு புத்தனுடைய பிறப்புக் காலம் விசாக நட்சத்திரத்தோடு கூடிய வைசாக சுத்தப் பௌர்ணமி எனக் கொண்டு உ.வே. சாமிநாதையர் மணிமேகலையின் காலத்தைக் கி.பி.6ஆம் நூற்றாண்டுக்கு முந்தையது என்பர்.[15] ஆனால் செ. கோவிந்தன் சித்திரை நட்சத்திரத்தைப் பதினான்காவதாகக் கொள்கிறார். 'மீனத்திடைநிலை மீனத்தகவையின்' என்ற தொடர் இருமுறை வருதலால் இரண்டாவதாக வரும் 'மீன்' எனும் சொல்லுக்குச் சித்திரை நட்சத்திரம் எனப் பொருள் கொள்கிறார். பிங்கலந்தையும், திவாகரமும் சித்திரையைப் பதினான்காவது நட்சத்திரமாகவே கொள்கின்றன. எனவே அமுதசுரபி தோன்றிய காலம், வைகாசித் திங்கள் பதினான்காம் நாள் சித்திரை நட்சத்திரமும் முழுமதியும் கூடிய நாள். அந்நாள் போதித் தலைவன் தோன்றிய வைகாசிப் பௌர்ணமியுடன் பொருந்துகிறது என்பார். புத்தர் தோன்றிய ஆண்டு கி.மு. 570 என்பது மகாவம்சத்தாலும் தீபவம்சத்தாலும் அறியலாகும் உண்மை. புத்த நிர்வாணத்திற்குப் பின் 218 ஆண்டுகள் கழித்து அசோகன் முடி சூட்டினான் என்று அவ்விரு நூற்கள் கூறும். அசோகன் முடிசூட்டிக் கொண்டது கி.மு.273இல். எனவே புத்தர் இறப்பு கி.மு.491 என வரும் எண்பது ஆண்டுகள்

15. செந்தமிழ்த் தொகுதி, 11:40-4

உயிர் வாழ்ந்தார் என்பதால் அவர் பிறந்தது கி.மு.571இல். கி.மு.571க்குப் பின் 1616ஆவது ஆண்டு என்பது கி.பி.1045 ஆவது ஆண்டு என வரும். இதனால் மணிமேகலையில் வரும் வானநூற் குறிப்பு கி.பி.1046 மே 28க்குப் பொருந்துகிறது. இவர் சிலப்பதிகாரத்தின் காலத்தைக் கி.பி.999 ஜூன் பத்தொன்பதுக்குத்தான் பொருந்தும் என்றும் நிறுவி உள்ளார். இதனையும் சுட்டிக்காட்டி மணி மேகலைக்குத் தான் கணித்த காலம் பொருத்தமானது என்கிறார்.

## ஆழ்வார்களின் காலம்

பிற இலக்கிய ஆசிரியர்களைக் காட்டிலும் ஆழ்வார்களின் காலம் குரு பரம்பரைக் கதைகள் மூலமாகவும், கல்வெட்டுகளின் உதவியுடனும் ஓரளவு தெளிவாகக் கணிக்கப்பட்டுள்ளது.

## ஆண்டாள்

'வெள்ளி யெழுந்து வியாழ முறங்கிற்று' (13ஆம் பாசுரம்) என்பதில் அதிகாலையில் விடிவெள்ளியின் உதயங்கண்டு நீராடினார் என்பதுடன் நில்லாமல் 'வியாழம் உறங்கிற்று' என்று வேறு கோளின் நடையொன்றையும் சேர்த்து ஆண்டாள் பாடுகிறார்.

மார்கழி மாதத்துப் பௌர்ணமியில் விடிவதற்குமுன் சுக்கிரோதயம் நிகழ வேண்டுமென்ற நியதியே இல்லை. அம்மாதத்து வைகறைகளிலே வெள்ளி எழுந்து, சில வாண்டுகள் நேர்ந்தும் இடையிட்டும் உண்டாகக்கூடிய நிகழ்ச்சியே யன்றி ஒரு முறைக்கு உரியதன்று. எனவே வெள்ளி தோன்றி வியாழம் மறைந்ததென்று கோதையார் குறிப்பிடுவது அவர் காலத்து நிகழ்ந்த ஒரு சிறப்பு நிகழ்ச்சியே. வியப்பிற்குரிய இந்த வானசாத்திர நிகழ்ச்சி பெரியாழ்வார் காலமாகக் கருதப்பட்ட எட்டாம் நூற்றாண்டில் எந்த எந்த ஆண்டில் நிகழ்ந்துள்ளது, என்றறிந்து அதன் மூலம் ஆண்டாளின் காலம் கணிக்கப்படுகிறது. திருப்பாவை கூறும் வெள்ளி வியாழங்களின் உதயாஸ்தமனங்கள் நிகழ்ந்த காலமாக 731ஆம் ஆண்டு எடுத்துக் கொள்ளப்பட்டும், 716ஆம் ஆண்டு, திருஆடிப்பூரம் ஆண்டாள் அவதார நாளாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

அடியவர்களுக்கு மாதம், நட்சத்திரம் ஆகியன குறிக்கப்பட்ட செய்திகளும் இலக்கியங்களில் வெளிப்படு கின்றன. ஆண்டாளது தோற்றகாலம் நள ஆண்டு ஆடி மாதம் சுக்கில சதுர்த்தசியும் செவ்வாய்க் கிழமையும் கூடின பூர நட்சத்திரம் என்று குரு பரம்பரைக் கதைகள் சில கூறுகின்றன. இக்காலக் குறிப்பைக் கொண்டு 776ஆம் ஆண்டு இம்மாதம் 25ஆம் நாள் அவ்வடியாரது தோற்றகாலம் என்று சுவாமிக்கண்ணுப் பிள்ளையவர்கள் தம் நூலுட் கணித்திருக்கிறார். ஆண்டாளுக்கும் மற்ற ஆழ்வார்கட்கும் இவ்வாறு குறிக்கப்பட்டுள்ள ஆண்டு மாதங்களுடன் கூடிய பஞ்சாங்கக் காலங்கள் பிற்பட்ட நூல்களிலன்றித் திவ்யசூரிசரிதம், பின்பழகிய பெருமாள் சீயர் குரு பரம்பரைகளில் காணப்படவில்லை. அவற்றில் குறிக்கப்பட்டவை, ஆழ்வார்கள் தோன்றிய மாதங்களும் நட்சத்திரங்களுமே. சிவனடியார்கட்கும் இங்ஙனமே மாத நட்சத்திரங்களன்றி வேறு வழங்காமை ஒப்பிடத்தக்கது என்று மு. இராகவையங்கார் கூறுகிறார்.[16]

## பெரியாழ்வார்

பெரியாழ்வார் பிறந்த நாளைக் குரோதன ஆண்டு, ஆனித் திங்கள், வளர்பிறைப் பக்கத்து ஏகாதசியோடு, சுவாதிமீன் கூடிய ஞாயிற்றுக்கிழமையாக மூவாயிரப்படி குரு பரம்பரை கூறும். இந்நாளைக் கி.பி.27-5-725 ஆகக் கணித்துள்ளார் திரு. சாமிக்கண்ணுப்பிள்ளை. பெரியாழ் வாரின் ஆயுட்காலம் 85 ஆண்டுகளாக மேற்படி குரு பரம்பரையிற் காணப்படுவதால், இவரைக் கி.பி.725-810க்கு உரியவராகக் கருதலாம். இது இரண்டாம் ராஜசிம்மனின் காலமாகிய கி.பி.790-810க்கு உள்ளும் வருதல் ஓரளவு ஆதரவாகவும் அமைகின்றது.[17]

பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் ஆகிய மூவரும் ஒரு சித்தார்த்தி ஆண்டு ஐப்பசித் திங்களில் முறையே ஓணம், அவிட்டம், சதய மீன்களில் அட்டமி, நவமி, தசமி கலந்த செவ்வாய், புதன், வியாழன் ஆகிய நாட்களில் பிறந்ததாக மூவாயிரப்படி குருபரம்பரை கூறுகிறது.

---

16. ஆழ்வார்கள் காலநிலை, ப.127 17. வைணவத்தின் ஆழ்வார்கள் காலநிலை, ப.150.

ஆனால், காஞ்சி வரதராஜப் பெருமாள் கோயிலில் காணும் விக்ரம சோழனின் ஒன்பதாம் ஆட்சி ஆண்டிற்குரிய கல்வெட்டு ஒன்று (S.I.I.Vol.III. No.80P.187; விக்கிரம சோழன் 9ஆம் ஆண்டு) பொய்கையாரும் பூதத்தாரும் பிறந்தருளிய திருக்கேட்டை நாளன்று பிரதி மாதமும் 810 முழுக்கு (அபிடேகம்) செய்வதற்காக 780 கலம் நெல் வழங்கப்பட்டதைக் கூறல் குறிப்பிடத்தக்கது. இங்குப் பொய்கையாருக்கு ஓணமும் பூதத்தாருக்கு அவிட்டமும் நட்சத்திரங்களென ஒரு குறிப்பும், இருவருக்கும் கேட்டை நட்சத்திரம் என்ற வேறு ஒரு குறிப்பும் கிடைக்கின்றது. இக்குறிப்புகள் இவர்களின் பிறப்புக் காலத்தை மட்டுமன்றி, இலக்கியங்களின் காலத்தை அறிதற்கும் துணைபுரிவதால் இவற்றுள் எது சரி என்பது முதலில் தெளிவுபடுத்தப்பட வேண்டும்.

**பாணாழ்வார்**

மூவாயிரப்படி குரு பரம்பரையில் ஒரு துன்மதி கார்த்திகைத் திங்கள், உரோகிணி நட்சத்திரம், தேய்பிறைத் துவிதியை கூடிய புதன் அன்று பாணாழ்வார் பிறந்ததாகக் கூறப்பட்டுள்ளது. இந்நாள் கி.பி. 15-11.601 என 'திவான் பகதூர் சுவாமிக்கண்ணுப் பிள்ளை'யாலும் கி.பி.7-11-781 எனக் கோவிந்தசாமியாலும் கணிக்கப்பட்டுள்ளன.

**திருமங்கை மன்னர்**

ஒரு நள ஆண்டில் கார்த்திகைப் பௌர்ணமி கூடிய வியாழனன்று இவர் பிறந்ததாக மூவாயிரப்படி குரு பரம்பரை கூறுகிறது. திருவாளர் சாமிக்கண்ணுப் பிள்ளை கணிதப்படி இது கி.பி.31-10-776 ஆகும். இதன்படி கி.பி.826 இவர்கள் பாடல்கள் இயற்றத் தொடங்கிய 50 வயதிற்குச் சமமான ஆண்டு ஆகிறது.

ஆறாயிரப்படி குரு பரம்பரையில் நட்சத்திரம், மாதம், நள ஆண்டு ஆகியன குறிக்கப்பட்டிருத்தல் கொண்டு கி.பி.716 ஆகிய நள ஆண்டு இவர் பிறந்த ஆண்டாகக் கொள்ளப்படுகிறது. மூவாயிரப்படி குரு பரம்பரையிற் காணப்படும் விவரங்களிலிருந்து திருமங்கை மன்னரும் பிறந்தது கி.பி.776 நள ஆண்டே என்று துணியப்பட்டுள்ளது.

## குலசேகர ஆழ்வார்

மூவாயிரப்படி குரு பரம்பரை இவர் பிறந்த நாளை கலயப்தம் 28க்குச் சமமானதோர் பிரபவ ஆண்டின் மாசித் திங்கள் வளர்பிறை துவாதசி புனர்பூசங் கூடிய வெள்ளிக் கிழமை ஆகக் கூறுகிறது. இதனைக் கி.பி.12-2-767 எனத் திவான் பகதூர் சாமிக்கண்ணுப் பிள்ளையும், 29-1-706 என மு.கோவிந்தசாமியும் கணித்துள்ளனர்.

## தொண்டரடிப்பொடி ஆழ்வார்

இவர் பிறந்த ஆண்டு (பிரபவ), திங்கள் (மார்கழி), நட்சத்திரம் (கேட்டை) எனக் கொண்டால் இந்தப் பிரபவ கி.பி.667-ஐ பிரபவ ஆண்டே ஆக வேண்டுதல் காணலாம். எனவே இவர் காலம் கி.பி.667-772 ஆகும். ஆழ்வார்கள் காலநிலை பற்றிச் சோதிடக் குறிப்புகள்வழி அறிந்து வெளிப்படுத்த முடிகின்றதே ஒழிய அக்காலக் குறிப்புகள் தொடர்பாகக் கருத்து வேறுபாடுகள் இருக்கத்தான் செய்கின்றன. 'பஞ்சாங்கக் குறிப்புகள் நம்மாழ்வார் ஒருவர் ஒழிந்த ஏனையோர் திறத்து சிறிதும் நம்பத்தக்கனவாய் இன்மையால், வேறு சான்றுகளால் உறுதி செய்யப்படாதவரை உண்மையாய் ஏற்றுக்கொள்ளத் தக்கதன்று'[18] என்கிறார் குலசேகரன். எனவே சோதிடத்தின் வழி கண்டறியப்பட்ட காலக் குறிப்புகள் அனைத்தும் தொகுக்கப்பட்டு அவற்றுள் எவை எவை ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் அமைகின்றன, எவை எவை ஏற்றுக் கொள்ளத்தக்க வகையில் அமையவில்லை என்பது அறியப்படுதல் வேண்டும். ஏற்றுக்கொள்ளத் தக்க வகையில் அமையாமைக்கான காரணங்கள் கண்டறியப்பட்டுச் சரியான காலம் கணிக்கும் முயற்சிக்குக் சோதிடக் குறிப்புகள் துணைபுரியும் வகையை ஏற்படுத்த வேண்டும். கம்பராமாயண, யுத்தகாண்டம் நடந்த காலத்தைக் கணக்கிடுவோர் அமாவாசை, பௌர்ணமி முதலிய திதிகளின் அடிப்படையிலேயே இதனைக் கணக்கிடுகின்றனர்.

---

18. வைணவத்தின் ஆழ்வார்கள் காலநிலை, ப.150

சோதிட அடிப்படையில் காலம் கணிக்கும் முயற்சி குறித்து மு. கோவிந்தசாமி பின்வருமாறு கூறுகின்றார். "கி.பி.ஏழாம் எட்டாம் நூற்றாண்டு ஆழ்வார் காலக் கணிப்பில் இந்திய ஒப்பீட்டுப் பஞ்சாங்கம் (Indian Ephemeris) பயன்படுத்தப் பெற்றுள்ளது. இது ஒரு புதிய முயற்சியாகும். ஆனால் முற்றிலும் புதுவதன்று. ஒப்பீட்டுப் பஞ்சாங்கத் தொகுப்பிற்குப் பெருங்காரணமாயிருந்த இராவ் பகதூர் கண்ணுசாமிப் பிள்ளையவர்களே, ஆழ்வார்கள் பிறந்த நாட்களை இம்முறையில் கணக்கிட்டு ஒரு பட்டியலைத் தந்துள்ளார். நம்மாழ்வார் முதலிய ஓரிரு ஆழ்வார்களின் பிறந்த ஆங்கிலத் (ஒப்பீட்டு) தேதிகளை டாக்டர் கிருஷ்ணசாமி அய்யங்கார் போன்றவர்கள் ஓரளவு ஒப்புக்கொண்டு உள்ளனர். இத்தகைய ஆய்வு குறிப்பிட்ட ஓர் ஆங்கில ஆண்டு தேதி ஆகியவற்றைக் குறிப்பிடுகின்றது. பெருமுயற்சியுடன் ஆழ்வார்களின் பிறந்த நாட்களை ஒப்பிட்டுப் பஞ்சாங்கத்துடன் ஒத்துக் கணக்கிட்டு ஆங்கில முறையில் இந்நூல் (Indian Ephemeris) குறித்துள்ளது பெருமளவு பிற்காலத்தில் உண்மை என உணரப்படலாம்.[19]

சோதிடக் குறிப்புகளைக் கொண்டு கால நிர்ணயம் செய்யும்போது கால நிர்ணயம் பற்றிக் கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன. இருப்பினும் இச்சோதிடக் குறிப்புகள் காலத்தை நிர்ணயிக்க உதவக் கூடியவையே என்ற கருத்தினை மறுத்தற்கில்லை. வானத்திலுள்ள நாள், கோள்களைக் கொண்டு காலம் கணிப்பது உலகில் அன்று முதல் இன்றுவரை இருந்து வருகிறது. இரவு நடு யாமத்தில் சாமக் கோழியின் கூப்பீடும், விடியலில் கோழி கூவுதலும் என்றும் உள்ளவை. வேங்கைப்பூ மலரும் காலம் திருமணத்திற்குரிய காலமாக இலக்கியங்களில் சுட்டப்படுகிறது. ஒவ்வொரு நாளும் காலை, மாலை, இரவு எனக் குறித்த நேரத்தில் மலரும் மலர்களும் பல உள்ளன. சூரியனைக் கண்டு மலர்பவை, சந்திரனைக் கண்டு உதிர்வதையும், சந்திரனைக் கண்டு மலர்பவை சூரியனைக் கண்டு உதிர்வதையும் காணமுடிகின்றன. இங்ஙனம் பலவகையான இயற்கைத் தோற்றங்களும்

---

19. தமிழ் இலக்கிய வரலாறு, ப.112.

நிகழ்வுகளும் மக்களுக்கு அனுபவத்தின் வாயிலாகக் காலங்களை நிர்ணயிக்க உதவுகின்றன. 'காலம் உலகம்' (சொல்.57) எனத் தொடங்கும் தொல்காப்பிய நூற்பாவினால் 'காலம்' என்பது கடவுளாகவும் போற்றப்படுகின்றமை தெரிகிறது. உரிய காலத்தில் வந்து உயிர்களைக் கவர்ந்து செல்லும் எமன் காலன் என்ற பெயரால் அழைக்கப்படுகிறான். கால எல்லைக்குக் கட்டுப்படாமல் இயங்குதல் இயலாத ஒன்று.

> ''காலம் என்பது கறங்குபோற் சுழன்று
> மேலது கீழா கீழது மேலா
> மாற்றிடும் தோற்றம்'' (மனோன். 1:1.94-96)

★ ★ ★

## இயல் இரண்டு

# இலக்கியங்களில் வானியல் குறிப்புகள்

**வா**னில் நிகழும் நிகழ்வுகள் மனிதனின் கருத்தைக் கவர்ந்தது. தன்னைக் கவர்ந்த வானியலைப் பற்றி மனிதன் தன்னுள் வியப்புக் கொள்கிறான்; சிந்திக்கிறான். அதுபோது தன்னுள் உருவாகிய கருதுகோள்களைத் தன்னை அறியா மலே தான் இயற்றும் இலக்கியங்களில் பதிவு செய்து விடுகிறான். அவை அக்காலங்களில் பதிவாக இருந்து நிகழ்காலத்தில் ஆய்வுக்குப் பயன்படும் வகையில் அமைந்து விடுகிறது. இலக்கிய வானியல் செய்திகளை இன்றைய நிலையில் ஆய்வுக்கு உட்படுத்தும்போது அன்றைய மனிதனின் வானியல் பற்றிய அறிவினை உணர்ந்துகொள்ள முடிவதோடு, வானியல் ஆய்வின் தொடக்ககாலச் சிந்தனைகளையும், அதன் வளர்ச்சிப் போக்கினையும், கால வளர்ச்சியோடு அறிந்துகொள்ள முடிகிறது. கோள்கள், நட்சத்திரங்கள் முதலியன பற்றித் தமிழர்கள் கொண்டிருந்த எண்ணங்கள் தொகுப்பாக இலக்கியங்களில் கூறப்படா விடினும் ஆங்காங்கே பரவலாகக் கூறப் பட்டுள்ளதைக் காணமுடிகிறது. சோதிடவியலுக்கு அடிப்படையாக அமைந்த இவ்வானியல் பற்றிய நம் முன்னோர்தம் அறிவுத் தெளிவினையும் அனுபவங்களையும் இவ்விலக்கியச் சான்றுகளின்வழி ஈண்டு எடுத்தியம்புதல் ஏற்புடைத்து.

'வானின்றி அமையாது இவ்வுலகு' என்று வள்ளுவப் பெருந்தகையால் புகழப்பட்ட விண்வெளியில், கோள்கள் தங்களுக்குரிய இயல்பான இயக்கத்தில் இருந்தால்தான் உலகில் இயற்கையும் இயல்பாக இருக்கும். இன்றேல் மாறுபடும் என்பது இன்றைய வானியல் அறிஞர் ஒப்பமுடிந்த கூற்றாகும். இத்தகு அறிவு சங்க காலத்து வானியலாருக்கும் இருந்திருக்கிறது. எனவே வான ஆய்வை யும் ஒரு கலையாக வளர்த்து வானியல் நிகழ்வுக்கு ஏற்பத் தங்கள் செயற்பாடுகளை அமைத்துக் கொண்டனர்.

தமிழர் வானியல், கோளியல், பொறியியல் முதலிய பல்வேறு துறைகளிலும் திறம்பெற்று இருந்தனர் என்பதனை இலக்கியச் சான்றுகள் வழி அறியமுடிகிறது. ஆனால் இன்றுள்ளது போல் அத்துறைகள் அன்று வரையறை செய்யப்படவில்லை. ஒருக்கால் வரையறை செய்யப்பட்டு அழிந்திருக்கவும் வாய்ப்புள்ளது. எப்படி இருப்பினும் அவர்கள் அத்துறைகளில் அறிவுத் திறம் நிரம்பப் பெற்றிருந்தனர் என்பதை அறிய முடிகிறது.

பதிற்றுப்பத்து, புறநானூறு, பரிபாடல் ஆகிய மூன்று தொகை நூல்களிலும் பல வானியற் செய்திகள் காணப் படுகின்றன. இவற்றுள் புறநானூற்றிலும், பரிபாடலிலும் மிகுதியான செய்திகளைக் காணமுடிகிறது. அகநானூறு, பரிபாடல் ஆகியவற்றில் இராசி, திங்கள், நாள் போன்றவை கூறப்படுகின்றன. பஞ்சாங்கம் பற்றிய செய்திகளைச் சிலம்பு, மணிமேகலை முதலியவற்றில் காணமுடிகிறது. ஆரியர் தமிழகத்திற்கு வரும் முன்பே தமிழர் வானியலில் ஓரளவு முன்னேறியிருந்தனர் என்று அறிஞர் கூறியுள்ளனர். தமிழகத்துப் பரதவர்கள் திங்களின் நிலையைக்கொண்டு காலத்தைக் கணித்தனர். தமிழகத்து உழவர் சூரியன், திங்கள் இவற்றின் இயக்கத்தையும் பருவங்களையும் அறிந்தி ருந்தனர். வியாழன் இராசி வட்டத்தினை ஐந்துமுறை சுற்றி வருதலாகிய அறுபது ஆண்டுகள் கொண்ட தமிழரின் ஆண்டுக்கணிப்பு ஆரியர்க்குரியதன்று. இங்ஙனமே பன்னி ரண்டு ஆண்டுகளை ஒரு மாமாங்கமாகக் கருதுவதும் ஆரியர் தொடர்பில்லாதது. தமிழர்க்கேயுரிய சமய விழாக்களின் காலம், சூரியமான முறைக்கும் சந்திரமான முறைக்கும் இடையே ஏற்படும் கால வேறுபாட்டை யொட்டியே வேறுபட்டது. இது சந்திரமானக் காலக் கணிப்பின் அடிப்படையில் கொண்டாடப்படும். பிற ஆரியச் சார்புள்ள இந்துப் பண்டிகைகளிலிருந்து பெரிதும் வேறுபடும். இவற்றின் காலம் சந்திரமானக் கணிப்பின் அடிப்படையில் பெரிதும் மாறுபடும் எனப் பேராசிரியர் கே.கே. பிள்ளையவர்கள் தம்நூலில் குறித்துள்ளது சிந்திக்கத்தக்கது.[1]

---

1. A Social history of the Tamils, part -1, P.P. 409-410 Studies in the history and culture of India with special reference to Tamil Nadu.

பண்டைத் தமிழரின் வானவாய்வைக் குறித்துக் கூற முற்பட்ட ந.சி. கந்தையாபிள்ளை, தமிழர் வான ஆராய்ச்சியில் தேர்ந்திருந்தனர். மொகஞ்சதரோ முத்திரைகளிற் கிடைத்த குறிப்புகளால் தமிழர் தொன்மையே வானசாத்திரத்தை நன்கு அறிந்திருந்தனா என்பதைப் புலப்படுத்துகின்றது. தமிழர் மிகுதியாகக் கடற்பயணம் செய்தனர். பயணக் காலங்களில் மாலுமிகள் விண்மீன்களையும் திங்களையும் நோக்கித் திசை அறிந்து மரக்கலங்களைச் செலுத்தினர்; வானத்தை நோக்கி நேரம் அறிந்துகொள்ளவும் பயின்றிருந்தனர்; சந்திரனது இயக்கத்தைக் கொண்டே மாதங்களைக் கணக்கிட்டனர்; மாதத்துக்கு மதி, திங்கள் என்னும் பெயர்களை வழங்கினர். தமிழ்நாட்டினின்றும் பிரிந்து சென்று சால்திய அக்கேடியர்களும், தமிழர் கொண்ட முறையையே கையாண்டுள்ளனர்''[2] எனக் கூறுகின்றார்.

மனித இனம் கண்டு போற்றியுள்ள அறிவுத் துறைகளில் ஒன்றான வானியல் ஆராய்ச்சியில் பன்னெடுங்காலமாகத் தமிழர் ஈடுபட்டுக் கண்டறிந்துள்ள செய்திகளை உலகப் பேரறிஞர் பலர் பாராட்டியுள்ளனர். அறிஞர் சிலேட்டர் என்பார், ''தமிழருடைய வானநூற் கணித முறையே வழக்கிலுள்ள எல்லாக் கணிதங்களிலும் நிதானமானது'' என்று கூறியுள்ளார். தொல்காப்பியத்திலும் சங்க நூல்களிலும் காணப்படும் வானியல் செய்திகள் உருப்பெற்ற மைவதற்குப் பல்லாயிரமாண்டுகள் பிடித்திருக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.[3]

இரவில் வானத்தை அண்ணாந்து நோக்கும்போது பல விண்மீன்கள் நம் கண்ணிற் படுகின்றன. இவை சிறிதும் பெரிதுமாய் வானில் அள்ளித் தெளித்தாற்போல் சிதறிக் கிடக்கின்றன. இவையெல்லாம் உண்மையில் ஞாயிற்றைப் போல் ஒளிபெருக்கிக் கொண்டிருக்கும் வாயுப் பந்துகளே (Spheres of Glowing Gas). இவை ஞாயிற்றைவிட வெகு தொலைவில் இருப்பதால் ஒளிப்புள்ளிகள் போல மின்னுகின்றன.

---

2. தமிழர் சரித்திரம், ப.163 3. தமிழர் நாகரிகமும் பண்பாடும், ப.113

விண்மீன்கள் போன்றே இன்னொரு வகையையும் விண்ணில் காணமுடிகின்றது. இவை விண்மீன்கள் போலன்றி நாளுக்கு நாள், திங்களுக்குத் திங்கள் மெல்லென நகர்கின்றன. இவற்றின் அசைவுகளை நோக்கிய முன்னோர்கள் இவற்றை 'அலையும் விண்மீன்கள்'' (Wandering stars) என்றனர். இன்று இவை கோள்கள் (Planets) என்றழைக்கப்படுகின்றன. இக் கோள்களின் இயக்கங்கள் மிகப் பழங்காலத்திலிருந்தே உலகின் மக்கள் கவனத்தை ஈர்த்திருக்கின்றன. இவ்வியக்கங்கள் எத்தகையன என்பதைக் கணித்தறியப் பல்வேறு வகைகளில் முயன்றுள்ளனர். தம் முழுக் கவனத்தையும் இத்துறைகளிலேயே செலுத்திய அறிஞர் பெருமக்கள் தமிழ்நாட்டிலும் இருந்திருக்கின்றனர் என்பதனை,

''செஞ்ஞா யிற்றுச் செலவும்
அஞ்ஞா யிற்றுப் பரிப்பும்
பரிப்புச் சூழ்ந்தமண் டிலமும்
வளிதிரி தருதி சையும்
வறிது நிலைஇய காயமு மென்றிவை
சென்றளந் தறிந்தோர் போல என்றும்
இணைத்து என்போரும் உளரே'' (புற.30:1-7)

என்ற அடிகள் உணர்த்துகின்றன. இங்குச் சூரியனுடைய பாதையும், சூரியன் ஒரு குறிப்பிட்ட வீதியில் செல்வதான அதன் இயக்கமும், அவ்வியக்கத்தால் சூழப்படும் பார்வட்டமும், காற்றியங்கும் திசையும், ஆதாரமின்றி நிற்கின்ற ஆகாயமும் என்று கூறப்படுகின்ற இவற்றைச் சென்று அளந்து அறிந்து கண்டவர்களைப் போல என்று வருதல் பண்டைத் தமிழரின் வானியல் ஆர்வத்தையும், அறிவையும் எடுத்தியம்புகின்றது. இதனால், வானநூற் புலவரின் இயல்பும் சிறப்பும் நன்கு புலனாகின்றது.

இதே போன்று இவ்வித ஆய்வுகளில் ஈடுபட்டிருந்தோர் இவ்வியக்கங்கள் எத்தகையன என்பதைக் கணித்துக் கொள்ளப் பல்வேறு வகைகளில் முயன்றுள்ளனர் என்பதை,

''என்றூழ் உறவரும் இருசுடர் நேமி
ஒன்றிய சுடர்நிலையுள் படுவோரும்''
''துன்னுநர் சுட்டவும் சுட்டறி வுறுத்தரும்' (பரி.19:46,47,54)

என்ற அடிகள் கூறுகின்றன. கோடைக்காலத்தில் வரும் இருசுடர்களும் வான வட்டத்தே பொருந்தியுள்ள சூழ்நிலைகளை ஆராய்ந்தது என்பது இப்பாடலின் பொருளாகும்.

''விரிகதிர் மதியமொடு வியல்விசும்பு புணர்ப்ப
எரிசடை எழில்வேழம் தலையெனக் கீழிருந்து
தெருவிடைப் படுத்தமூன்று ஒன்பதிற்ற இருக்கையுள்
உருகெழு வெள்ளிவந்து ஏற்றியல் சேர
வருடையைப் படிமகன் வாய்ப்பப் பொருள்தெரி
புந்தி மிதுனம் பொருந்தப் புலர்விடியல்
அங்கி உயர்நிற்ப அந்தணன் பங்குவின்
இல்லத் துணைக்குப்பால் எய்த இறையமன்
வில்லிற் கடைமகரம் மேவப்பாம்பு ஒல்லை
மதியம் மறைய வருநாளில் வாய்ந்த
பொதியின் முனிவன் புரைவரைக் கீறி
மிதுனம் அடைய விரிகதிர் வேனில்
எதிர்வரவு மாரி இயைகெனஇவ் வாற்றான்
புரைகெழு சையம் பொழிமழை தாழ'' (பரி. 11:1-14)

அகன்ற வானத்தின்கண் சந்திரனோடு சேர்க்கப்படுவனவாகிய கார்த்திகை, திருவாதிரை, பரணி என்பன முதன்மை பெற்று நிற்க, அவற்றின் கீழ் இடப வீதி, மிதுன வீதி, மேட வீதி என்ற வேறுபடுத்தப்பட்ட ஒவ்வொன்றும் ஒன்பது ஒன்பது நாட்களைக் கொண்டே இயங்கும். மூவகை இராசிகளுள் நிறமிக்க வெள்ளி இடப ராசியைச் சேர்ந்தது; புதன் மிதுன இராசியைப் பொருந்தியது; கார்த்திகை உச்சம் பெற்று நின்றது. அப்போது விடியல் நேரம். அந்நேரத்தில் சனிக்குரிய இரட்டை வீடுகளாகிய மகர கும்ப இராசிகளுக்கு மேலுள்ள மீனராசியை வியாழன் அடைந்தது. இயமனைத் தமயனாகக்கொண்ட சனி, தனுசுக்குப் பின்னாலுள்ள மகர ராசியைப் பொருந்தியது. அந்நாளில் இராகுவாகிய பாம்பு சந்திரனை மறைக்க விரைந்து வந்தது. பொதிகை மலையில் பொருந்திய அகத்தியன் என்னும் மீன் தன்னுடைய உயர்ந்த இடத்தைக் கடந்து மிதுன இராசியை அடைந்தது. சூரியன் தன்னுடைய கொடிய கதிர்களை விரித்துக் காய்கின்ற முதுவேனிற் காலத்தை அடுத்து வருவதாகிய கார்காலம் மழை பொழிவதற்கேற்றது. இந்நாள், கோள்களின் இத்தகைய தன்மைகளின் காரணமாக

சையமலையில் மிக்க மழை பொழிந்தது. பண்டைத் தமிழரின் வானநூற் புலமையை வெளிப்படுத்தும் வானவீதியில் நட்சத்திரங்கள் செல்லும் வீதிகளைக் குறித்து இப்பாடல் அமைந்துள்ளது. 27 நட்சத்திரங்களும் கோள்களுடன் கூட வானவீதியில் உலாவரும் வீதிகள் மூன்று. அவை ஆடு (மேடராசி), ஏறு (இடபராசி), மிதுனம் (மிதுனராசி) என்பனவாம். இவற்றுள் மேடராசியை முதலாகக் கொண்டு ஏனைய இராசிகளிலும், ஞாயிறு, திங்கள் முதலிய கோள்களும் நட்சத்திரங்களும் இயங்கும். மேற்குறித்த மூன்று இராசிகளும் ஒன்பது நட்சத்திரங்களைக் கொண்டிருக்கும்.

ஓர் இராசியாவது இரண்டேகால் நாள் ஆதலின் நந்நான்கு இராசியாகிய இவை ஒரொன்று ஒன்பது நாளாயின. கோள்களுக்கு இடமாக உள்ளதால் இவை பன்னிரண்டு இருக்கை எனப்பட்டன. இப்பாடலில் சூரியன், சந்திரன், புதன், வியாழன், வெள்ளி, சனி, இராகு ஆகிய கோள்களும் இடப, மிதுன, தனுசு, மகர, கும்ப, மீன இராசிகளும், பரணி, கார்த்திகை, திருவாதிரை போன்ற நட்சத்திரங்களும் ஒருசேர இடம்பெற்றிருப்பது பண்டைய தமிழர் வானநூற்கலையில் நன்கு வளர்ந்து சிறந்திருந்தனர் என்பதைத் தெளிவாக்கு கின்றது.

பாண்டிமா தேவியின் கட்டிலின் மேற்கூரையில் இராசி மண்டலங்களும் சந்திரன், உரோகிணி உருவங்களும் வரையப்பட்டிருந்தன. ஆகாயத்தில் மேட இராசி முதலாக ஏனை இராசிகளில் விரைந்து செல்லுகின்ற ஆற்றலுடைய சூரியனுடன் மாறுபடுகின்ற தன்மையினையுடைய திங்களோடு பொருந்தி நின்ற வகையில் ஓவியமாக வரையப் பட்டிருந்ததை அறிய முடிகிறது என்பதை,

> "திண்ணிலை மருப்பின் ஆடுதலை யாக
> விண்ணூர்பு திரிதரும் வீங்குசெலல் மண்டிலத்து
> முரண்மிகு சிறப்பிற் செல்வனோடு நிலைஇய
> உரோகிணி நிலைவனள் நோக்கி நெடிதுயிரா" (நெடு. 160-164)

என்ற பாடல் சுட்டுவதும் தமிழர்களது வானநூற் புலமையின் சிறப்பை வெளிப்படுத்துகிறது.

கோள்களுக்குத் தன்னொளி இல்லை. ஞாயிற்றின் ஒளிபட்டே அவை மின்னுகின்றன என்பது இன்று நாம் அறிவியல் வாயிலாக அறிந்த உண்மை. இவற்றைப் பற்றி அறிவதற்கு முற்காலத்தில் வானியலார்களிடம் எவ்வித துணைக் கருவிகளும் இருக்கவில்லை. அவை அசைவதை மட்டுமே கண்டனர். எனவேதான் அவற்றிற்குப் பௌராணிகப் பெயர்களை இட்டனர். இதனையொட்டியே புதனைத் தெய்வங்களின் 'சிறகுடைத் தூதுவன்' எனவும், வெள்ளியைக் 'காதலின் தேவதை' எனவும், செவ்வாயைப் 'போரின் தெய்வ'மெனவும், வியாழனை 'இறைகளுக்கெல்லாம் இறை' யெனவும், சனியை 'வியாழனின் தந்தை'யெனவும் குறிப்பிட்டனர். நாள்மீன்களும், கோள்மீன்களும் வானில் எங்ஙனம் இருந்தன என்பதைக் கூறவந்த ஆசிரியர் அகன்ற மன்றத்தில் ஆட்டுக்கிடாய்களும் சிவிலைப் பறவைகளும் விளையாடும் காட்சி, நீலவானில் நாள்மீனும் கோள்மீனும் பரவியதுபோல் இருந்தது என்று கூறுவதனை,

> "நீனிற விசும்பின் வலனேர்பு திரிதரு
> நாண்மீன் விராய, கோண்மீன் போல
> மலர்தலை மன்றத்து......
> மேழகத் தகரொடு சீவல் விளையாட" (பட். 67-77)

என்ற பாடலடிகள் காட்டுகின்றன. நாள்மீன், கோள்மீன் பற்றிய குறிப்புகளை,

> "வாளொடு வயவரீண்டி வாரணத் தொழுவின் முற்றி
> மீளிமை செய்யின் வெய் ப நண்பநின் வினைப்ப தல்லால்
> நாளொரு பக்க நைந்து வீழினும் வீழ்த லில்லாக்
> கோளுடைக் கிழமை யொப்பாய் குறைவிலன் பிறவி னென்றான்"
> (958-108)

என்ற பாடலில் சீவகசிந்தாமணியும்,

> "நாளொடு கோளும் நின்றமை நாடினர்
> உலகுஇனி நவை இன்று என்றனர்" (பால. 1:289)

என்ற அடிகளில் கம்பராமாயணமும் காட்டுகின்றமை அக்காலத்து வானநூற் புலமைக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாக அமைகின்றன.

சங்கத்தொகை நூல்களில் பலவிடங்களில் குறிக்கப் பட்டுள்ள ஞாயிறு, திங்கள், செம்மீன், வெண்மீன், வெள்ளி, மைம்மீன், நாள்மீன், கோள்மீன், சகடம், உரோகிணி முதலான பலசொற்கள் வானியல் பற்றி உணர்த்துவன வாயுள்ளன. சங்க இலக்கியங்களில் மட்டுமன்றி பிற இலக்கியங்களிலும் வானியல் பற்றிய சிந்தனை இடம் பெற்றிருத்தலும் இவண் சுட்டப்பெற்றது. இங்ஙனம் நட்சத்திரங்களையும் கோள்களையும் தன்னகத்தே கொண்டு விளங்குகின்ற வானியலின் நிகழ்வுகள் நம் முன்னோர்களால் எடுத்தியம்பப்பட்டுள்ளன. இனி வானில் ஒளிவீசித் திகழ்கின்ற கோள்களைப் பற்றிய விளக்கம், இயல்பு, தமிழிலக்கியங்களில் கோள்கள் பற்றி இடம்பெற்றுள்ள செய்திகள் முதலியன சுட்டப்பெறுகின்றன.

## கோள்கள்

இயற்கையின் சீற்றத்தைக் கண்டு அஞ்சிய ஆதிமனிதன் அவற்றை வழிபடத் தொடங்கினான். விண்ணில் நிறைந்துள்ள ஏதோ ஒன்றின் மாறுதல்கள் தங்கள் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்துவதை மனிதன் உணர்ந்தான். இங்ஙனம் தான் கண்டறிந்த சில விண்மீன்களுக்குப் பெயர் சூட்டிய மனிதன் அதன் இயல்புகளையும் அதனால் விளையும் நன்மை தீமைகளையும் காண முற்பட்டான். தான் கண்டறிந்த செய்திகளை எல்லாம் இலக்கியங்களில் ஆங்காங்கே பொதிந்து வைத்துள்ளான்.

கோள்கள் ஒன்பதனுள் இராகு, கேது என்னும் இரண்டும் நிழற் கோள்களாகக் (சாயை) கருதப்படுகின்றன. அவை கரும்பாம்பு, செம்பாம்பு எனக் கூறப்படுகின்றன. சங்கத் தொகை நூல்கள் பலவற்றில் இவ்விரண்டு கோள்கள் நீங்கலாக ஏழு கோள்கள் பற்றிய செய்திகளே பலவிடங்களில் காணப்படுகின்றன.

செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி என்னும் ஐந்து கோள்கள் பதிற்றுப்பத்து என்னும் தொகை நூலில்,

> ''நாள், கோள், திங்கள், ஞாயிறு, கனைஅழல்,
> ஐந்து ஒருங்கு புணர்ந்த விளக்கத்து அணைய''(பதிற். 14:3-4)

எனவரும் உவமை வாயிலாக இக்கோள்களுள் சனி, இராகு, கேது ஆகியவை தவிர ஏனைய கோள்களும், நாள்களும் ஒளிபடைத்தன என்பதனை அறியமுடிகிறது. 'கிரகமேழு' (3:76) என்று கூறும் அருணாசலபுராணம் இராகு கேதுக்களை நீக்கி ஏழு கோள்களை மட்டும் குறிப்பிடு கின்றது. இருப்பினும் 'ஒன்பது கிரகம்' (9:23) என்ற சொல்லாட்சியும் இந்நூலில் இடம்பெறுகின்றது.

பரிபாடல், மழைக்கோளைப் பற்றிக் கூறவந்த இடத்து வெள்ளி, செவ்வாய், புதன், வியாழன், சனி, இராகு ஆகிய கோள்களின் நிலையை விளக்குகிறது (பரி. 11:4-10). 'நவமென வழங்கு கோளும்' (1:2.67) என மகாபாரதம் ஒன்பது கோள்களைச் சுட்டுகிறது. திருஞான சம்பந்தர் தனது கோளறு பதிகத்தில்,

> ''ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி,
> சனி, பாம்பு இரண்டும் உடனே'' (2:85.1)

என்று ஒன்பது கோள்களின் பெயர்களையும் குறிப் பிட்டுள்ளார். தேவாரப் பாசுரங்களிலும் இக்கோள்கள் பற்றிய குறிப்புகள் உள்ளன.

> ''விலங்கள் அமர்புயல் மறந்து
> மீன் சனி புக்கு
> ஊன் சலிக்கும் காலத்தானும்'' (தேவா. 1:129.3)
> ''சனிபுதன் ஞாயிறு வெள்ளி திங்கட்பல தீயன
> முனிவறு செய்து உகந்தானை'' (தேவா. 3:10.7)
> ''சனியும் வெள்ளியும் திங்களும் ஞாயிறும்
> முனிவனாய் முடிபத்துடையான் தனை'' (தேவா. 5:21.10)
> ''மகத்திற் புக்கதோர் சனி எனக்கு ஆனாய்'' (தேவா. 7:54.9)

இக்கோள்களின் தன்மையால் சில நேரங்களில் நன்மையும், சில நேரங்களில் தீமையும் ஏற்படுகின்றன. ஆயினும் இறைவனின் அருளால் கோள்களினால் ஏற்படும் தீமைகளைக் குறைத்துக்கொள்ளலாம் என்று திருஞான சம்பந்தர் அறிவுறுத்துகின்றமையை,

> ''கோளாய நீக்குமவன்
> கோளிலி எம்பெருமானே'' (தேவா. 1:62.1)
> ''கோளும் நாளவை போய் அறும்'' (தேவா. 2:10.7)

என்ற அடிகளால் உணரமுடிகின்றது. கோள்களின் தன்மைக்கு ஏற்பத் தீய பண்பினை உடையவரும் (1:2.80),

நற்பண்புகளை உடையவரும் (1:2:67) பிறப்பர் என்பதை மகாபாரதம் எடுத்தியம்புகிறது.

சில கோள்கள் நன்மை செய்கின்ற கோள்கள், சில கோள்கள் தீமை செய்கின்ற கோள்கள் என்று மக்களால் கருதப்படுகிறது. அதன்படியே நன்மை செய்கின்றவர்களை, 'ஞாயிறு அனையன், திங்கள் அனையன், இருசுடர் ஒளியினை ஒத்தவன்' எனப் போற்றியும், தங்களுக்குத் தீமை செய்கின்றவர்களைத் தங்களது கோபத்துக்கு ஆளாகுபவர்களைச் சனியன், சனியன் பிடித்தவன், நவக்கிரகம், ராவுகாலம் எனத் தூற்றியும் வருவதனைக் காண இயலுகிறது. இலக்கியத்திலும் இத்தகைய தன்மைகள் காணப்படுவதனைக் கீழ்வரும் பாடல்கள் வாயிலாக அறியமுடிகின்றது.

''துரைமக்க ளைக்கண்டு தங்கள்கா ரியமெலாஞ்
சொல்லிச் செய்கின்ற வேளை
சொல்லெலாம் பொய்யெனவு மிவர்காட்சி மெய்யெனவுந்
தோன்றுவோ னவலமாகும்
திரமுற்ற கல்வியோடு குணமிக்க கவிராஜர்
திரளான ராஜ சபையில்
செய்யும்பர சங்கத்தி லொருபழுது சொல்லுவோன்
சென்மத்தி லங்காரகன்
அருள்பெற்ற விதரணிக ரைக்காத்த னேகநார
அனுசரித் தியல்பாகியே
யவர்கொடுக் கும்போதி லிடர்சொல்லி விலக்குவோ
னஷ்டமச் சனிய னாகும்'' (திரு.வேங். 11:40)

''அன்னைதந் தையர்புத்தி கேளாத பிள்ளையோ
அட்டமச் சனியாகுவான்
அஞ்சாமல் எதிர்பேசி நிற்குமனை யாள்வாக்கில்
அங்கார கச்சன்மமாம்
தன்னைமிஞ் சிச்சொன்ன வார்த்தைகே ளாஅடிமை
சந்திராட் டகமென்னலாம்
தன்பங்கு தாவென்று சபையேறு தம்பியோ
சார்ந்தசன் மச்சூரியன்
நன்னயமி லாதவஞ் சனைசெய்த தமையன்முன்
நாமிடத் தேவியாழம்
நாடொறும்விரோ தமிடு கொண்டோன் கொடுத்துளோன்
ராகுகே துக்களெனலாம்'' (கும.சத.42)

பிறந்த ஓரைக்கு (இராசிக்கு) எட்டாம் வீட்டில் சனியும், சந்திரனும், வாக்குக்குரிய வீட்டில் செவ்வாயும், பிறந்த வீட்டில் சூரியனும், மூன்றாம் வீட்டில் வியாழனும், இராகு கேதுக்களும் இருப்பின் அவை கொடிய கோள்கள் என்பது தெரிகிறது.

இங்ஙனம் கருதினாலும் கோள்களின் தன்மை நிலையானதன்று. ஒரு நேரம் தீமை செய்கின்ற கோள் மறு நேரம் நன்மை செய்யும். அதேபோல் ஒரு நேரம் நன்மை செய்கின்ற கோள் மறுநேரம் தீமை செய்யும். அவரவர் சாதகத்தின் முழுமையான கோள் நிலைகளை நோக்கியே நன்மை செய்கின்றனவா, தீமை செய்கின்றனவா என்றறிய இயலும். 'நவக்கிரக தானங் கூறியது' (96), 'நவக்கிரக வுருவந் திசையுங் கூறியது' (97), ''நவதானியமுஞ் சமித்துங் கூறியது'' (98) எனும் தலைப்புகளில் அண்ணாமலை சதகம் கோள்களின் சோதிடப் பண்பினை விளக்குகிறது.

## சூரியன்

'ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்' என இலக்கியங்களில் போற்றப்படுவதோடு மட்டுமின்றி தமிழரின் சிறப்பான தைத்திரு நாளில், முதல்நாள் பொங்கல் சூரியனுக்கே உரியதென்று வழிபடும் முறைமையை வழக்காகக் கொண்டிருக்கிறோம். இன்றைய அறிவியலார் கண்டுபிடிப்புகளின்படி ஞாயிறை ஒன்பது கோள்கள் அதாவது புதன், வெள்ளி, பூமி, செவ்வாய், சனி, யுரேனஸ், நெப்டியூன், புளுட்டோ ஆகியன சுற்றி வருகின்றன. ஞாயிற்றை மையமாகக் கொண்டே இக்கோள்கள் விண்ணிற் சுற்றி வருகின்றன. இவ்விதம் இக்கோள்கள் சுற்றி வருவதற்கு ஆகும் காலம், இவை ஞாயிற்றிலிருந்து எவ்வளவு தொலைவில் உள்ளன என்பதனைப் பொறுத்து அமைகிறது. இங்ஙனம் கோள்கள் சூரியனைச் சுற்றி இயங்குவதால் சூரியன் 'கோளரசு' எனப்பட்டது.

ஞாயிற்றையும் ஏனைய ஒன்பது கோள்களையும் சேர்த்து 'ஞாயிறுமண்டலம்' என்றும் 'ஞாயிற்றுக்குடும்பம்' என்றும் அழைப்பர். ஞாயிற்றின் தோற்றம் பற்றி,

''வானிற விசும்பிற் கோண்மீன் சூழ்ந்த
விளங்குகதிர் ஞாயிறு''(சிறுபா. 242-243)

என்ற அடிகளில் கூறப்படுகின்றது. ஞாயிறு ஞாலத்திற்கு ஒளியையும், உயிர்ப்புத்தன்மையினையும், வெப்பத்தினையும் அளிக்கின்றது. இந்த அளவிற்கு மேல் ஞாயிற்றின் வெப்பம் ஒரு சிறிதளவாயினும் மிகுதிப்படுமானால் இவ்வுலகம் அழிந்துவிடும்.

ஞாயிறு, எரியும் வாயுவினால் ஆன ஒரு பந்து. இது 8,64,000 மைல் விட்டமுடைத்து. இது கோடியளவு இஞ்ஞாலத்தைவிடப் பொருண்மையிற் பெரியது. சூரியன் திடப்பொருளோ தீக்குழம்போ அல்ல. அது ஒரு வாயுமண்டலம். கதிரவனின் பல தாதுப்பொருட்கள் ஆவி உருவில் இருக்கின்றன என்று அறிவியல் அறிஞர் கூறுகின்றனர். சூரியன் சக்கரம் போன்ற உருவம் படைத்தவன் அல்ல. கதிரவன் ஒரு வாயுமண்டலமே என்பதைப் பண்டைத் தமிழ் அறிஞர் நன்கு உணர்ந்திருந்தனர். இவர்கள் கதிரவனைப் 'பகல் செய் மண்டிலம்' என்றே அழைத்தனர். இதனைப் பல இடங்களில் இலக்கியத்தில் காணமுடிகிறது. பெரும்பாணாற்றுப்படையில் கதிரவனைக் கூறவந்த ஆசிரியர்,

''குணகடல் வரைப்பில் முந்நீர் நாப்பன்
பகல்செய் மண்டிலம் பாரித்தாங்கு'' (441-42)

என்று கூறுகிறார். இதனால் பண்டுதொட்டே, சூரியனுடைய உண்மைத் தோற்றத்தை அறிவியல் நோக்கோடு கண்டனர் என்று கொள்ள முடிகிறது.

தாலமி (Ptolemy)என்பார் கி.பி. 2ஆம் நூற்றாண்டில் பூமியை நடுவணாகக் கொண்டு ஏனைய கோள்கள் வட்டமாகச் சுற்றி வந்தன என்றார். ஆனால் இக்கொள்கை பிற்காலத்தில் மாற்றப்பட்டுச் சூரியனை மையமாகக் கொண்டு ஏனைய கோள்கள் சுற்றி வருகின்றன என அறிந்துகொண்டனர். இதை முதலில் கி.பி. 1543இல் கண்டுபிடித்தவர் கொப்பர்னிக்கஸ் (Copernicus). இவரது கொள்கையான ஞாயிற்றைச் சுற்றி ஏனைய கோள்கள் வட்டமாக வருவதென்றது கி.பி. 17ஆம் நூற்றாண்டில் கெப்ளர் (Kepler)என்பவரால் திருத்தப்பட்டு, கோள்கள்

ஞாயிற்றைச் சுற்றி நீள்வட்டமான சுற்றுப்பாதையிலேயே செல்கின்றன என்பது நிறுவப்பட்டது. ஞாயிற்றை முதலாகக் கொண்டே பிறகோள்கள் சுற்றிவந்தன எனத் தமிழ்மக்கள் சங்க காலத்திலேயே அறிந்திருந்தனர் என்பதை நீலகண்ட சாஸ்திரி,

''ஏன்றூழ் உறவரு மிருசுடர் நேமி
ஒன்றிய சுடர்நிலை யுள்படு வோரும்'' (பரி.19:46-47)

என்ற அடிகளை ஆதாரமாகக்கொண்டு கூறுவர். நாண்மீன் களையும், தாரகைகளையுமுடைய சுடர்ச் சக்கரத்தைப் பொருந்திய ஆதித்தன் முதலாக வரும் கோள்களது நிலைமையை எழுதியவாற்றான் அறிவோரும் என்பது இவ்வடிகளின் பொருளாக அமைகிறது.

வெண்மை என்பது ஒரு வண்ணம் இல்லை. ஏழு வண்ணங்கள் முறைப்படி சேர்ந்த கலவைதான் வெண்மை என்று நியூட்டன் என்ற மேனாட்டு அறிஞர் நிறுவினார். கதிரவனில் ஏழு வண்ணங்கள் உண்டு என்பதை இன்றைய அறிவியல் தெரிவிக்கிறது. பண்டைத் தமிழ் நூல்களில் கதிரவன் ஏழுவண்ணக் குதிரைகள் பூட்டிய தேரில் உலா வருகின்றான் என்று கூறுகின்ற புலவர்களின் ஆய்வுத்திறனில் உயர்ந்த அறிவியல் அறியக்கிடக்கிறது. பல கோள்கள் தன்னைச் சுற்றிவர கதிரவன் காட்சி அளிப்பதையே பகற்பொழுதில் உலா வந்து மாலையில் மறைகின்றான் என்று கூறியுள்ளனர்.

''எல்லை செல்ல ஏழூர்பு இறைஞ்சிப்
பல்கதிர் மண்டிலம் கல்சேர்பு மறைய'' (குறி.215-216)
''பறவை பாட்டு அடங்கினவே
பகல் செய்வான் மறைந்தனனே'' (சிலப். 7:7.42)
''பையுள் நோய்கூரப் பகல் செய்வான் போய் வீழ''(சிலப். 7:7:50)

என்ற பாடல்களில் காணக்கிடக்கின்றன.

இரவில் ஒளி செய்து திகழும் திங்களும், பகலில் ஒளி செய்யும் ஞாயிறும் 'இருசுடர்' (4.65.7) எனத் தொகைப் பெயரால் குறிக்கப்படுகின்றன. மேலும், 'ஞாயிற்றுப்புத்தேள்' (கலி.108:13), 'திங்கட்புத்தேள்' (4:29.14) என இவ்விரு சுடரையும் தமக்கு வாழ்வு நல்கும் தெய்வங்களாகவே

கொண்டு மக்கள் போற்றினர். பகற்பொழுது ஞாயிற்றாலும், இரவுப்பொழுது மதியாலும் வருகின்றன என்பதை,

"பகற் செய்யும் செஞ்ஞாயிறும்
இரவுச் செய்யும் வெண்திங்களும்" (மதுரைக்:7-8)

என்ற அடிகள் காட்டுகின்றன.

ஞாயிற்றின் இயல்பும் சிறப்பும் ஞாயிற்றைச் சுட்டி உரைக்கும்பொழுதெல்லாம் பெயர் அளவில் சுட்டாது அதன் இயல்பினையும் சிறப்பினையும் புலப்படுத்தும் அடைமொழிகள் சேர்த்தே வழங்கப்பட்டுள்ளன என்பதை,

"மலர்வாய் மண்டிலம்" (புற.175:9)
"வீங்குசெலல் மண்டிலம்" (நெடு.161:4.8.6)
"தேயா மண்டிலம்" (பரி.17:32)
"சுடர் மண்டிலம்" (அக. 367:1)
"சுடர்கெழு மண்டிலம்" (அக.378:14)
"பருதிஅம் செல்வன்" (அக.360:2; கலி.26:2)
"மை அறு மண்டிலம்" (கலி. 141:12)
"பல்மான் எல்லை தருநன் பல்கதிர் பரப்பி" (பொருந.232-233)

என்ற தொடர்கள் வெளிப்படுத்தி நிற்கின்றன. ஞாயிற்றி னின்று வெளிப்படும் கதிரின் விளக்கம், வெம்மை முதலிய இயல்புகளை,

"விரிகதிர் ஞாயிறு" (புற.228:8)
"கதிர்ச்செல்வன்" (பட்.122)
"தெறுகதிர்க் கனலி" (புற.397:24)
"அழல்போல் வெங்கதிர்" (அக.1:10)
"உருகெழு ஞாயிற்று ஒண்கதிர்" (புற.160:1)
"வெவ்வெஞ் செல்வன்" (பொருந. 136)
"வெம்மையால் தெறுதலால்' 'கனலி" (புற.35:6; கலி.16:12)
"சுடர்" (கலி.100:1)

என்ற தொடர்கள் காட்டுகின்றன. ஞாயிறு உலகத்திற்கு இன்பத்தையும் நலத்தையும் நல்குதலைச் சுட்டி, 'ஏமுற விளங்கிய சுடர்' (நற். 283:7) எனவும் பாராட்டப்படுகிறது.

ஞாயிறு செல்லும் வீதியை,

''செஞ்ஞாயிற்றுச் செலவும், அஞ்ஞாயிற்றுப்
பரிப்பும்; பரிப்புச் சூழ்ந்த மண்டிலமும்'' (புற.30:1-2)

என்ற பாடல் காட்டுகிறது. ஞாயிற்றின் செலவினாலேயே அயனங்களும் பருவங்களும் உண்டாகின்றன. தெற்கும் வடக்குமாகிய அயனங்களில் மாறிமாறி வரும் இயல்புடையது ஞாயிறு என்பதை,

''கடந்து அடுதானைச் சேரலாதனை
யாங்ஙனம் ஒத்தியோ? - வீங்குசெலல் மண்டிலம்;
பொழுது எனவரைதி; புறம் கொடுத்து இறத்தி
மாறிவருதி, மலைமறைந்து ஒளித்தி;
அகல்இரு விசும்பி னானும்
பகல் விளங்குதியால் பல்கதிர் விரித்தே'' (8:5-10)

என்ற புறத்திரட்டுப் பாடல் உணர்த்துகின்றது. திங்கள் மண்டிலத்திற்கு முதுகிட்டுப் போதலும், தெற்கும் வடக்கும் ஆகிய இடங்களில் மாறிமாறி வருதலும், மலையில் மறைந்து போகுதலும், பகலில் பலகதிர் பரப்பி விளங்குதலும் ஆகிய தன்மைகள் பாடலில் சுட்டப்பட்டுள்ளன. 'மாறிவருதி' என்பதற்கு அயனங்களில் மாறிவருதலையும் குறித்ததாகக் கொள்வதும் உண்டு.

ஞாயிறு தெற்கு நோக்கி நகர்ந்து செல்லும் காலத்துக் கார், கூதிர், முன்பனி என்னும் பனிப்பருவங்கள் இருத்தலை,

''பெரும்பெயல் பொழிந்த தொழில் எழிலி
தெற்கு ஏர்பு இரங்கும் அற்சிரக் காலையும்'' (நற்.5:5-6)
''விழுமிது நிகழ்வது ஆயினும் - தெற்கு ஏர்பு
கழிமழை பொழிந்த பொழுது கொள் அமையத்து'' (அக. 13:12-13)
''விரிகதிர் மண்டிலம் தெற்கு ஏர்பு, வெண்மழை
அரிதின் தோன்றும் அச்சிரக் காலையும்'' (சிலப்.14:104-105)

என்ற பாடல் பகுதிகள் உணர்த்தி நிற்கின்றன.

சூரியனுடைய வடதிசைச் செலவால், பின்பனி, இளவேனில், முதுவேனில் என்னும் பருவங்கள் உண்டாகின்றன என்ற குறிப்பினை,

''காசுஅறு துறவின் மிக்க கடவுளர் சிந்தை போல
மாசுஅறு விசும்பின் வெய்யோன் வடதிசை அயனம் முன்னி
ஆசுஅற நடக்கும் நாளில், ஐங்கணைக் கிழவன் வைகி
பாசறைப் பிரிவு தீர்க்கும் பங்குனிப் பருவம் செய்தான்'' (சீவக.851)

என்ற பாடல் தருகின்றது. இங்கே வடதிசை அயனம் என்பது சூரியனுடைய வடதிசைச் செலவு. இந்த வடதிசைச் செலவால் பின்பனி, இளவேனில், முதுவேனில் என்னும் பருவங்கள் தோன்றுகின்றன.

சூரியனுக்கும் பிற கோள்களுக்கும் சோதிட நூல்களில் கூறப்பட்டுள்ள முறைமைகள் இலக்கியங்களிலும் சில இடங்களில் சுட்டப்பெறுகின்றன. சூரியனே மக்களின் கண்ணுக்கும் பற்களுக்கும் காரகன்[4] என்னும் சோதிடச் செய்தி காஞ்சிபுராணத்தில் இடம்பெற்றுள்ளது.

> ''இவர்கள் நால்வரும் நான்கு யுகங்களுக்கு இறையவராயினர் மற்றுமிச்
> சிவமுறும் புனலாடி முன்தினகரன் இழந்தபல் எய்தினான்
> தவளமாமதி முயலகப்பிணி சாடினன் பகன் என்பவன்
> துவளுமாறுயர் வீரபத்திரன் தொட்ட வாள்விழிப் பெற்றனன்
> சூரியனார் தொண்டை வாயினிற் பற்களை வாரி நெரித்தவா றுந்தீபற
> உண்ணப் புகுந்த பகனொறுத் தோடாமே கண்ணைப் பறித்தவ றுந்தீபற
> சுருக்கெட நாமெலா முந்தீபற'' (திருவுந்தியார்)

எனவரும் புராணச் செய்தியினால் சூரியன் தக்கன் யாகத்தில் இழந்த பல்லைப் பெற்றான் என்பதும், 'பகன்' என்னும் சூரியன் தக்கன் யாகத்திழந்த கண்ணைப் பெற்றான் என்பதும் பெறப்படுதலினால் சூரியனால் கண்ணுக்கும், பல்லுக்கும் நன்மை தீமைகளுண்டாகுமென்று அறியப் படுகின்றது.

'ரிக் வேதம் சூரியத் தேவனை மூன்றுவித அக்னிகளில் ஒருவனாக வர்ணிக்கிறது. யஜுர் வேதம் சூரியனை ஆக்குபவன், எல்லா உலகையும் ஒளிபெறச் செய்பவன் எனப் பெருமைப்படுத்துகிறது. சாம வேதம் சூரியனைச் 'சோதிகளில் சிறந்த சோதி' என்றும் 'உலகை வெல்பவன்' என்றும் பலவாறாக வருணிக்கிறது. அதர்வண வேதம இதய நோயினையும், காமாலை நோயினையும் போக்கச் சூரிய வழிபாடு செய்யும் முறையினைக் கூறுகிறது.[5]

---

4. சாதக அலங்காரம், ப.106. 5. சார பல ஜோதிடம், பக்.26, 27.

சூரியன் - ஆத்துமா, சந்திரன் - மனது, செவ்வாய் - உடல்பலம், புதன் - வாக்கு, குரு - ஞானசுகம், சுக்கிரன் - காமம், சனி - துக்கம் ஆகிய இவற்றிற்கு அதிபர்களாவர். சூரியன் ஆத்மாவுக்கும், சந்திரன் மனத்திற்கும் உரியவர்கள் என்பதை,

''உவந்தஇப் புவனம் எல்லாம் உருப்பெற வகுப்பான் எண்ணி
நலங்கெழு புனல்உண் டாக்கி நண்ணுவீ ரியத்தை விட்டார்
கலங்களில் பரமாய் மிக்க காஞ்சன வடிவம் ஆகித்
துலங்கும் அண்டமதாய் ஆண்டோர் ஆயிரத் தொலைந்த பின்னர்''

''இங்கு சொன்ன ரூபமாகி இருள் வளைந்த கூடமாய்
அலங்கல் இன்றி நின்ற அண்ட அளவைகாண் உள்ளுளாய்த்
துலங்கி விண்டுவாய் வயங்கு சூரியன் சொரூபமாய்
நலங்கொள் ஆதி ஆகையால் ஆதித்தன் என்னும் நாமமாய்''

என வரும் மச்சபுராண பிரமாண பேத அத்தியாயப் பகுதியினால் அறியமுடிகிறது. பிரமன் முதல்முதல் நீரை உண்டாக்கி, அதில் தனது ஆற்றலைச் செலுத்தினார். அந்த ஆற்றல் உள்ளினும் வெளியிலுங் கூட அதிக இருளான சுவர்ண அண்டமாக ஏற்பட்டது. அதுவே பிராணிகளுடைய திருக்கோசரமான சராசர பிரபஞ்சத்திற்கு ஆதாரமானது. அதனால் பிரம்மாவிற்கு 'இரணிய கருப்பன்' என்ற பெயர் உண்டாயிற்று.

சூரியனுக்கு அக்கினி, சந்திரனுக்கு அப்பு, செவ்வாய்க்கு சுப்பிரமணியர், புதனுக்கு மகாவிஷ்ணு, சனிக்கு இயமன் ஆகியன அதிதெய்வங்கள் என்றும், குரு தேவாச்சாரியார், சுக்கிரன் அசுராச்சாரியார் என்றும் சூரியன் முதலான நாளும் கோளும் உரைத்த செய்யுட்களால் அறியப்படுதலை,

''அழலின் நன்மை யாகுமால் அலைவாய் முகட்டின் எழுபருதி
விழியும் புனலின் தன்மையாம் வயங்கும் ஒளிகால் வட்டமதி
நிழல்கால் வேலோன் கூறாகும் நிலவு புகழ்சேய் மலர்மடந்தை
கொழுதன் கூறாம் புதன்என்னக் கோதின்று உணர்ந்தோர் கூறுவார்''

''வயங்கும் மழுவான் உருத்திரன் நன்கூறும் மறலி கூறுமாம்
இயங்கு மணித்தேர் உறைவெய்யோன் இனிதின் ஈன்றபு கன்காரி
தயங்குநீ தேவகுரு வாகிச் சாருந் தகைசேர் வியாழம் மற்றப்
புயங்கொள் வலியால் உரைஅசுரர் குருவாய் வெள்ளி பொருந்துமால்''
(இலிங்கபுராணம். 58)

என்ற பாடல்கள் காட்டுகின்றன.

மச்ச புராணம் என்ற நூலில் கிரகயக்ஞ விதி அத்தியாயச் செய்யுள்வழி கோள்களின் அதிதேவதை, பிரத்யதி தேவதை ஆகியவற்றை பற்றிய செய்திகளை அறிய முடிகிறது.

''வடதிசையில் தாழ்ந்தவே தினக வகுத்துக் குண்டத்து வளருஞ் செந்தீப்
படருறத்தா பித்தமைத்த வேதினமும் பானிரண்டாம் பகுருந் தேவர்
திடமுறவா வாகனமே செய வேண்டும் அவர் பெயரைச் செப்பும் ஞான்று
சுடர்முதலாம் நவக்கிரகம் அவர்கதிதே வதைகளெனச் சொல்லும் ஈசன்''

''உகைமுருகன் மால்மறையோன் உம்பர்கோன் இயமன் சுடல் ஓங்கு காலம்
கமைபெறுசித் திரகுப்தன் ஆகஇவர் ஒன்பதின்மர் கனல்நீர் பூமி
தமைநிகர்மால் இந்திர னோடு அயிந்திரி சீருஓங்குபிர சாபதிப்பேர்
அமையும் உயர் சர்ப்பங்கள் பிரமாவோடு ஒன்பதின்மர் அறையம் இன்னோர்.''

''பிரத்திய தேவதைகள் விநாயகனோர் துர்க்கையொடு பிறக்கும் வாயு
உதைத்திடுமா காயம் அசுவினிகளென உரைப்பர் நவக்கிரக மேவ'' 83

இப்பாடல்களினால் அறிய வரும் கோள்களுக்குரிய அதிதேவதை, பிரத்யதிதேவதை ஆகியன அட்டவணையிட்டுக் காட்டப்பட்டுள்ளது.

| கோள் | அதிதேவதை | பிரத்யதிதேவதை |
|---|---|---|
| சூரியன் | சிவபெருமான் | அக்கினி |
| சந்திரன் | உமையவள் | அப்பு |
| செவ்வாய் | சுப்ரமணியர் | பிரிதிவி |
| புதன் | விஷ்ணு | விஷ்ணு |
| குரு | பிரமதேவன் | இந்திரன் |
| சுக்கிரன் | இந்திரன் | இந்திராணி |
| சனி | இமயன் | பிரஜாபதி |
| இராகு | காலன் | சர்ப்பம் |
| கேது | சித்திரகுப்தன் | பிரமன் |

### சந்திரன்

'திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்' என இலக்கியங்களில் போற்றப்படுவதோடு மட்டுமன்றி மக்கள் வாழ்க்கையிலும் பல்வேறு நிலைகளில் சந்திரனைப் போற்றி வருகின்றனர். சந்திரனுக்காக விழாவெடுத்தல், பௌர்ணமி, அமாவாசை வழிபாடுகள், வளர்பிறை, தேய்பிறை ஆகியவற்றுக்கான குறிப்பிடத்தக்க நிகழ்வுகள் முதலியன

சந்திரன் மீது கொண்ட பக்தியின் அடிப்படையில் நிகழ்வனவாகும். இது மட்டுமன்றி பல்வேறு நம்பிக்கைகளின் அடிப்படையிலும் சந்திரன் போற்றப்படுகிறது. குழந்தைகளின் வளர்ச்சியை நிலாவோடு இணைத்துப் பேசுவதும், பாடல் புனைவதும் இலக்கிய மரபாகத் தொன்றுதொட்டு இருந்து வருகிறது. 'நிலா நிலா ஓடிவா' என்ற பாடல் வரியும் இலக்கியத்தில் காணப்படும் 'அம்புலிப் பருவம்' என்ற அமைப்பும் இன்ன பிறவும் இத்தன்மை யினதே. இத்தகைய சிறப்புப் பொருந்திய 'நிலா' எனும் சந்திரக் கோளைப் பற்றிய செய்திகள் இலக்கியங்களில் அளவிறந்து இடம் பெற்றுள்ளன.

இயற்கையைப் போற்றும் உணர்வு என்பது மட்டுமன்றி, வானியல் பற்றிய சிந்தையில் எழும் வியப்புக் குறிகளும் அதனை அதிகமான அளவில் இலக்கியத்தில் பேசும்படி செய்திருக்க வேண்டும். மதியின் உண்மை இயல்பு வெப்பத் தன்மையினை உடையதாகும். ஆயினும் இலக்கியத்தில் மதியினைக் குளிர்ச்சி பொருந்தியதாகச் சுட்டுதலையே மரபாகப் பின்பற்றி வந்துள்ளனர்.

''நோற்றோர் மன்ற தோழி தண்ணெனத்
தூற்றும் துவலைப் பனிக்கடும் திங்கள் '' (குறுந்.344:1-2)

ஆதலின் வானியலின் உண்மைத் தன்மைக்கு நேர் மாறான செய்திகளைத் தங்கள் இலக்கியங்களில் புலவர்கள் புனைந்துரைத்தனர் என்பதை அறிய முடிகிறது. சூரியனால் வெப்பத்தை உணரும் நாம் சந்திரனால் குளிர்ச்சியையே உணர்கிறோம் என்பதும் இப்புனைவுகளுக்குக் காரணமாகலாம். 'இருசுடர்' (புற.65:7) என்று போற்றப்படும் நிலையில் சந்திரன் முக்கியத்துவம் பெறுவதோடு, இருளில் உலகம் மூழ்கிவிடாமல் இருப்பதற்கும் காரணமாக அமைகிறது.

ஞாயிறும் திங்களும் மாறி மாறி வருவதன் காரணமாக பகலும், இரவும் மாறி மாறி வருகின்றன என்ற உண்மையை,

''இரவு நண்பகலும் மாறி இரவியு மதியுமாறி
வருவன வென்ன வெய்யோனொளி மிகமழுங்கிச் செல்ல
பரவு பைங்கிரணக் கற்றை பானிலாச் சாலகி கான்று
விரவிய மாந்தர்க் கின்பம் விளைந்தது பனிவெண் டிங்கள்''

என்ற காஞ்சி புராணப் பாடலின் வழி அறிய முடிகிறது.

திங்களின் அருகில் வியாழனும், வெள்ளியும் எப்பொழுதும் நீங்காமல் விளங்குகின்றன என்பதை,

''சேண்விளங்கு இயற்கை வான்மதி கவைஇ
அகலா மீனின் அவர்வன விமைப்ப'' (87, 88)

என்ற திருமுருகாற்றுப் படையிலுள்ள அடிகளின் வழி நக்கீரர் உணர்த்துகிறார்.

மதியின் தன்மைகள் பற்றியும், அதனால் ஏற்படும் விளைவுகள் பற்றியும் சில குறிப்புகள் இலக்கியத்தில் இடம் பெற்றுள்ளன. வெண்ணிலவு குளிர்காலத்தில் வானவீதியில் வரும்பொழுது அதன் ஒளிக்கற்றை மிகவும் பளிச்சிட்டு விளங்கும் என்ற வானியல் உண்மையை,

''பருவ வானத்துப் பாற்கதிர் பரப்பி
உருவ வான்மதியூர் கொண்டாங்கு'' (சிறு. 250-51)

என்ற அடிகளின் வழி அறிய முடிகிறது. நிலவினைச் சுற்றி ஒளிவட்டம் காணப்படுமானால் 'நிலா கோட்டை கட்டியுள்ளது; விரைவில் மழை பெய்யுமென்று' மக்கள் கருதுவதும் கூறுவதும் நிலவினைக் கொண்டு மழைபொழிவதன் அறிகுறியை உணர்ந்திருந்தமையைக் காட்டுகிறது.

நிறைமதி நாள் தவிர ஏனை நாட்களில் எல்லாம் நிலை மாறும் இயல்பினை உடையதாக நிலவு காணப்படுகிறது. திங்களின் மாறுதல் நாள் ஒவ்வொன்றும் 'திதி' என்று அழைக்கப்படுகிறது. இம்மாறுதல் நிலை இருபக்கத்தும் உள்ளது; ஒன்று வளரும் நிலை, மற்றொன்று தேயும் நிலை.

பிறை தோன்றிப் பதினைந்தாம் நாள் நிறைவு பெறும் வரையுள்ள பகுதியே வளர்பிறை. இப்பிறைகள் திங்களின் இயற்கைக் கலையாகிய ஒற்றைக் கலையுடன் சேர்ந்து பதினாறு கலைகளோடு கூடிய நிறைமதியாகக் காட்சியளிக்கிறது. இப்பதினாறு கலைகளோடு கூடிய மதி தேய்ந்து வரும்.

சந்திரன் தன் 27 நட்சத்திர மனைவியரில் உரோகிணியிடமே மிகுந்த பற்றுக் கொண்டு பிரியாதிருக்க, அவனது பிற மனைவியர் வருத்தம் மிகக் கொண்டு, சிவனிடம் சென்று முறையிட சிவன் சினம் கொண்டு சந்திரனை அழிந்து

போகும்படி சபித்து விடுகிறார். அதன்பின்னர் உரோகிணியும், பிற மனைவியரும் சந்திரனை மீட்டுத் தரும்படி சிவனிடம் இறைஞ்ச, சிவன் மனமிரங்கி 15 நாட்கள் தேய்ந்து அமாவாசையாகவும், பின் 15 நாட்கள் வளர்ந்து பௌர்ணமியாகவும் இங்ஙனம் மாறி மாறி வளர்ந்தும் தேய்ந்தும் விளங்கும்படி அருள் செய்கிறார். அன்று முதல் சந்திரன் வளர்பிறையாகவும், தேய்பிறையாகவும் மாறி மாறி விளங்குகின்றது என்னும் ஒரு புராணக் கதையை இலக்கியங்களிலும் (மீனாட்சியம்மன் பிள்ளைத் தமிழ்), மக்கள் வழக்கிலும் காணமுடிகின்றது.

அமாவாசைக்குப் பின் மதி வளரும் காலம் வளர்பிறைப் பக்கம் அல்லது முற்பக்கம் எனப்படும். பௌர்ணமிக்குப் பின் மதி தேயுங்காலம் தேய்பிறைப் பக்கம் அல்லது பிற்பக்கம் எனப்படும். இவை முறையே அலர் தரு பக்கம், வழியது பக்கம் எனவும், பௌர்ணமி நாள் அதாவது நிறைமதி உவா பெரும்பக்கம் எனவும், அமாவாசை 'இருள் உவா' எனவும் வரும் குறிப்புகள் பரிபாடலில் *(11)* காணப்படுகின்றன.

மதுரைக்காஞ்சி அடிகளில், பெருகுதலுக்கும் சுருங்கு தலுக்கும் வளர்பிறை தேய்பிறைகள் உவமம் காட்டப்படுவதை,

> "குடமுதல் தோன்றிய தொன்றுதொழு பிறையின்
> வழிவழிச் சிறக்க, நின்வலம்படு கொற்றம்!
> குணமுதல் தோன்றிய ஆர்இருள் மதியின்
> தேய்வன கெடுகநின் தெவ்வர் ஆக்கம்" (193-96)

என்ற அடிகளின் வழி அறிய முடிகிறது.

ஒளி பொருந்திய முழு உருவில் தெரியும் திங்களே உவவுமதி என்பதனை, 'உவவுமதியுருவின்' (புற.*3:1*) என்பதால் பெறமுடிகிறது. முழுமதி நாளில் ஞாயிறும் திங்களும் எதிரெதிராக நிற்றலையும், திங்கள் தோன்றும்போது ஞாயிறு மறைதலையும்,

> "உவவுத்தலை வந்த பெருநா ளமயத்
> திருசுடர் தம்மு னோக்கு யொருசுடர்
> புன்கண் மாலை மலைமறைந் தாங்கு" (புற.65:6-8)

என்ற பாடலடி எடுத்தோதுகின்றது.

கடற்கரையில் வாழ்ந்த பரதவர் பௌர்ணமி நாளில் மீன் பிடிக்கச் செல்லாது, மனையில் தங்கி தெய்வத்தை வழிபட்டு பின் மலர் சூடி கள் முதலியன உண்டு மகளிருடன் கூடி இன்பமாகப் பொழுது போக்கினர் எனப் பட்டினப்பாலை குறிப்பிடுகிறது (79-93). அந்நாளில் கடல் கொந்தளித்துப் பொங்கி எழும். நெய்தல் நிலத்துக் கள் விற்கும் பழையரின் மகளிர் மாலைக் காலத்தில் ஒளி பொருந்திய முத்துக்களையும், வலம்புரிச் சங்குகளையும் கொண்டு கடல் தெய்வத்தை வணங்கினர். கொற்கைத் துறையில் பௌர்ணமி அன்று மாலையில் மகளிர் கூடி கடல் துறைத் தெய்வத்தை வணங்கிய செய்தியினை,

"புகழ்மலி சிறப்பின் கொற்கை முன்றுறை
அவிர்கதிர் முத்தமொடு வலம்புரி சொரிந்து
தழைஅணிப் பொலிந்த கோடு ஏந்து அல்குல்
பழையர் மகளிர் பணித்துறை பரவ,
பகலோன் மறைந்த அந்தி ஓர்இடை
உருகெழ பெருங்கடல் உலவுக் கிளர்ந் தாங்கு" (201:4-9)

என்ற அகநானூற்று அடிகளில் அறிய முடிகிறது.

**சந்திர கிரகணம்**

சூரியனுடன் இராகுவோ அல்லது கேதுவோ சம பாகையில் இருக்கும்போது சூரிய கிரகணம் ஏற்படுகிறது. அதேபோல் சந்திரனுடன் இராகுவோ அல்லது கேதுவோ சம பாகையில் இருக்கும்போது சந்திர கிரகணம் ஏற்படுகிறது. இதையே 'கிரகண தோடம்' என்பர். இவை சூரியனையும் சந்திரனையும் நெருங்கும்போது இராகு கேதுவின் நிழல்கள் இவற்றை மறைப்பதால் பூமியில் இருள் படர்கிறது.

சூரிய சந்திரரை இராகு, கேது எனும் பாம்புகள் விழுங்குவதால்தான் கிரகணம் உண்டாகிறது எனும் நம்பிக்கை 'பிசாயான்' (Bisayan) என்னும் பிலிப்பைன்ஸ் தீவு மக்களிடையே இருந்து வருகிறது.[6] இந்த நம்பிக்கை திருவள்ளுவருக்கும் இருந்தது.

---

6. தென்கிழக்கு ஆசிய நாடுகளில் தமிழ்ப் பண்பாடு, க.த. திருநாவுக்கரசு, பக்.558.

''கண்டது மன்னும் ஒருநாள் அலர்மன்னும்
திங்களைப் பாம்புகொண்டு அற்று'' (குறள்.1146)

எனும் குறட்பாவால் இதனை அறிகிறோம். இந்த நம்பிக்கை இன்றும் ஏராளமான தமிழர்களிடம் இருந்து வருகிறது. சூரியனை இராகுவும், திங்களைக் கேதுவும் பிடிக்கும். எனவே சூரியனைக் கேதுவோ திங்களை இராகுவோ பிடித்தல் இல்லை என்ற கருத்தும் வழக்கில் உண்டு.

கிரகணம் பற்றிய செய்திகள் இலக்கியங்களில் பரவலாகக் காணப்படுகின்றன. இராகு என்னும் பாம்பு சந்திரனைப் பிடிப்பதால்தான் கிரகணம் பிடிக்கிறது என்று மக்களிடையே நிலவி வரும் தவறான கருத்தினை இலக்கியங்களிலும் காண முடிகிறது.

''இருசுட ரொருங் கெதிர்க்கி னெய்துமிரு ளென்னே
மருவுமுரை நிச்சயமா மன்றோட இரவியுடன்
தன்னையராத் தீண்டுஞ் சமயத் திருண்மிகுக்கும்
அன்னதறி யாருலகில் யார்'' (303)

எனவரும் தனிப்பாடல் திரட்டில் ஞாயிறும், திங்களும் ஒரே நேர்க் கோட்டில் வரும்போது கிரகணம் தோன்றும் என்ற அறிவியல் உண்மை காணப்படுவதோடு, பாம்பு நிலவினை விழுங்குவதால் சந்திர கிரகணம் தோன்றும் என்ற நம்பிக்கை சார்ந்த புராணச் செய்தியினையும் காணமுடிகிறது.

இச்செய்தியினை மீனாட்சி அம்மன் பிள்ளைத் தமிழ் (அம்புலிப் பருவம்) போன்ற இலக்கியங்களிலும் பார்க்க முடிகின்றது.

இந்த அடிப்படையிலேயே பிறை போன்ற அழகிய நெற்றியினையும் நீண்ட கூந்தலினையும் உடைய பெண்ணை உவமைப்படுத்தும்போது,

''பெருமகி ழிருக்கை மரீஇச் சிறு கோட்டுக்
குழவித் திங்கட் கோணேர்ந் தாங்குச்
சுறவுவா யமைத்த கரும்பு சூழ்சுடர் நுதல்'' (பெரும்.383-85)
''அரவு செறி உவவுமதியென அங்கையிற் தாங்கி'' (பரி.10-76)
''கோடுகொள் ஒண்மதியை நக்கும் பாம்பு ஒக்குமே''
(கலி.நாற்.22)
''மதிசேர் அரவின் மான தோன்றும்'' (சிறு.185)

என்று பாம்பு நிலவினைக் கவ்விப் பிடித்தாற் போன்று உள்ளமையால் கற்பனையுடன் பாடலைப் புனைந்து கூறி உள்ளனர். 'பாம் பொல்லை மதிய மறைய வரு நாளில்' (பரி.11:10) என்பதும் சந்திரகிரகணம் பற்றிய குறிப்பேயாம்.

"பகைவர் பணிவிடம் நோக்குத் தகவுடையார்
தாமேயும் நாணித் தலைச் செல்லார் காணாய்
இளம்பிறை யாயக்கால் திங்களைச் சேராது
அணங்கருந் துப்பின் அது" (நால.241)

என்ற பாடலில் இளம் பிறையினைப் பாம்பு சேர்தல் இல்லை என்ற செய்தி காணப்படுகிறது. இதனால் இளம்பிறையில் கிரகணம் தோன்றாது; பிறையானது வளர்ச்சியடைந்து முழுமதி நாட்களை ஒட்டிய நாட்களிலேயே கிரகணம் ஏற்படும் என்றறிய முடிகிறது. ஆனால் இன்று அறிவியல் துறை வளர்ச்சி பெற்றுள்ள காரணத்தால் நவீனக் கருவிகளின் துணைகொண்டு கிரகணம் இளம்பிறை நாட்களிலும் தோன்றுவதைக் காணமுடிகிறது ஆதலால் முழுமதி நாட்களையொட்டிய வளர்பிறை, தேய்பிறைக் காலங்களில் ஏற்படும் கிரகணங்களே, நேரடியாகப் பார்க்கும்போது புலப்பட்டது என்றும், வளர்பிறையில் கிரகணம் தோன்றினாலும் அதனைக் கருவிகளின் துணையின்றி நேரடியாகக் காண முடியாத நிலையில், இளம்பிறையில் கிரகணம் தோன்றாது என்ற கருத்து நிலவி வந்துள்ளது. அறிவியல் வளர்ச்சியின் காரணமாகத் தெளிவாகும் உண்மைகள் இத்தகைய சில தவறான கருத்துகளைக் களைய உதவுகிறது. அறிவியல் அடிப்படையிலான உண்மைகளை நம்புகின்ற தன்மை மக்களிடையே பெருகி வருகின்ற காரணத்தால் இதுபோன்ற கருத்துகள் பல நிலவி வந்தாலும் கண்களைப் பாதிக்காத, கண்களை மறைக்கும் அதற்குரிய கண்ணாடிகளை அணிந்து கிரகணங்களை நேரிடையாகவும், அறிவியல் கருவிகளின் துணை கொண்டும் மக்கள் பார்ப்பதைக் காண முடிகின்றது. சந்திரன், சூரியன், பூமி மூன்றும் நேர்க்கோட்டில் வரும் போது கிரகணம் உண்டாகிறது என்ற அறிவியல் உண்மையினை அறிந்திருக்கவில்லை என்றாலும், அக்குறிப்பிட்ட நேரத்தில்

வானியலில் ஏற்படும் மாற்றங்களைக் கூர்ந்து கவனித்து இருள் சூழ்ந்திருப்பதைக் கண்ணுற்று அதனைப் பாம்பு நிலவினைக் கவ்விப் பிடிப்பதாகக் கூறி இருக்கும் திறம் போற்றுதற்குரியதாகும். கிரகண நாட்களில் தீமை பயக்கும் கதிர்கள் பூமியைத் தாக்குகின்றன என்பதால் அக்காலத்தில் உண்ணும் உணவுப் பொருட்கள் தீமை பயப்பதாக உள்ளன. கர்ப்பிணிப் பெண்கள் கிரகண நாட்களில் எதையேனும் அறுத்தால் பிறக்கும் குழந்தைக்குக் கை, கால், காது, உதடு போன்ற ஏதேனும் ஓர் உறுப்பு பிளவுபடும்; ஏழு மாதம் நிறையும் முன் எந்தக் கிரகணத்தைக் கண்ணால் பார்த்தாலும் கருச்சிதைவு ஏற்படும் என்ற இத்தகைய உண்மைகளை அறிந்தே அக்காலத்தில் தீமை பயக்கும் இயல்புடைய இக்கிரகணத்தைப் பற்றிக் கூறும்போது தீமை பயக்கும் இயல்புடைய பாம்பு, நிலவினைப் பிடித்தது என்று கூறி இருக்கக் கூடும்.

இக்கிரகணத்தின்போது உணவு உண்ணக்கூடாது; உண்டால் உடலுக்குத் தீமை ஏற்படும் என்ற நம்பிக் கையைத் தவிர்க்கும் வண்ணம் கிரகணத்தின்போது உணவு உண்பதால் தீங்கு நேராது என்று அறிவியல் வல்லுநர் கூறியுள்ளனர். ஆயினும் அக்கூற்று மேலும் ஆராயத் தக்கதாக உள்ளது. சமைத்த உணவு ஆறுமணி நேரம் கெடாமல் இருக்கக்கூடிய ஒன்றுதான். ஆயின் அப்பொழுது சமைத்த உணவிற்கும், சமைத்து ஆறு மணி நேரத்தை நெருங்கிக் கொண்டிருக்கும் உணவிற்கும் அவற்றின் தன்மைகளில் வேறுபாடு இருக்கும். அத்தன்மைக்கு ஏற்பவே கிரகணத்தின்போது சமைத்த உணவும், உண்ணும் உணவும், கிரகணம் இல்லாதபோது சமைத்த உணவைவிட தன் தன்மையில் சிறிதேனும் பாதிப்பை உடையதாகவே இருத்தல் கூடும். இதனையும் துல்லியமாக அறிந்த பின்னர்தான் கிரகணத்தின்போது உணவு உண்ணலாம் என அறிவியல் கூறுகிறதா? இல்லை உணவு கெடவில்லை என்ற நிலையில் மட்டும் கூறுகிறதா என்பது மேலும் மக்கள் தெளிவு பெறவேண்டிய ஒன்று.

## வெள்ளி

ஞாயிற்றுக்கு மிக அண்மையிலுள்ள கோள் வெள்ளி. இது கிட்டத்தட்ட பூமியை ஒத்த உருவினதாகையால் பூமியையும் வெள்ளியையும் அறிவியலாளர் இரட்டைக் குழந்தைகளென்பர். இது விடிகாலையிலும் மாலையிலும் தெளிவாகத் தென்படுவதால் பண்டைக் காலத்து அறிவியலாளர் இரு வேறுபட்ட கோள்களென எண்ணினர். இவற்றைப் 'பொஸ்பரஸ்' (Phosphorus) எனவும், 'ஹெஸ்பரஸ்' (Hespirus) எனவும் அழைத்தனர். இது வெண்மை நிறத்துடன் நன்கு ஒளி பெற்று விளங்கக் கூடியது.

இதன் இயக்கத்தைத் தமிழர் கூர்ந்து கவனித்து அதன் போக்கினை வைத்து நாட்டில் மழை நன்கு பெய்யும் அல்லது வருமென்று கணித்தனர். இம்மழைக் கோளின் துணைகொண்டு நாட்டின் செல்வநிலையைக் கணிக்கின்ற அளவுக்குத் தமிழகப் புலவர்களின் வானியல் அறிவு சிறந்து விளங்கியது.

குறிப்பிட்ட திசையில் உலகின் இருசு உருள்கின்றபோது கோள்களின் நிலையும் இயக்கமும் மாற்றமின்றி இருக்கும். அதில் சிறிது நிலை மாறினும் கோள்களின் இயக்கத்தில் வேறுபாடு தெரியும். இதனால் பருவக்காற்றில் மாறுதல் தோன்றி, தமிழகத்தில் பெய்யும் மழையின் அளவு குறையும் அல்லது கூடும் என்று கணித்தனர். மூன்றாம் பிறைச் சந்திரனை நோக்கி வெள்ளியின் கோடு சாய்ந்திருக்கும் திசையின் அடிப்படையில் நாட்டிற்கு மழை பெய்யும் அல்லது பெய்யாது என்று கூறும் திறம் பெற்றிருந்தனர். கோள்களின் இயக்கத்திற்கு ஏற்ப இயற்கை பல மாறுதல்களைப் பெறுகின்றன என்று தெரிந்திருந்தனர். தங்கள் இலக்கியங்களில் இக்கோளினைப் பற்றிய பல செய்திகளை எடுத்தியம்பியுள்ளனர். சுக்கிரன்; கவி (வி.பா.1:1.18.3) முதலிய சொற்களாலும் இவ்வெள்ளி சுட்டப்பெறும்.

கொடுமையான ஒரு செயலை எடுத்துக் கூறும்போது வெள்ளிக்கோள் ஏனைய கோள்களுடன் யுத்தம் செய்வது போன்று இருப்பதை 'ஏலா வெண்பொன் போருறு காலை' (புற.381) என்ற அடி காட்டுகின்றது.

இரவுப் பொழுது புலரும் விடியற்காலத்தே வெள்ளி வானத்தில் தோன்றும் என்ற உண்மையினைப் பல இடங்களில் கவிஞர்கள் எடுத்தியம்பியுள்ளனர். செறிந்த இரவில் விரிகின்ற கிரணங்களை உடையதாக வெள்ளிமீன் எழுந்தது. உடன் பொழுது விடிந்தது என்பதை,

"கைக் கசடிருந்த என்கண்ணகல் தடாரி
இருசீர்ப் பாணிக்கேற்ப விரிகதிர்
வெள்ளி முளைத்த நன்னிருள் விடியல்" (பொருந.70-72)

என்ற பாடலும், வானவெளியில் விடியற்காலையில் கிழக்கே நோக்கினால் ஒளிவிட்டுத் துலங்குகின்ற வெள்ளிமீன் தெரியும் என்பதை,

"வேள்வித் தூணத்தசை யவனர்
ஓதிம விளக்கினை உயர்மிசைக் கொண்ட
வைகுறு மீனில் பையத் தொன்றும்" (பெரும்.318:17)

என்ற பாடலும் பகர்கின்றன. 'வைகுறுமீன்' என்ற அகநானூற்று அடியும் (17:21) இதனையே நினைவு படுத்துகின்றது.

அதிகாலையில் எழுந்து விடிவெள்ளியின் உதயம் கண்டு நீராடுதல், பயணம் தொடங்குதல் முதலிய நிகழ்வுகளை நடத்தி வருகின்றனர் என்பதை,

"வெள்ளி மிருவிசும் பேர்தரும் புள்ளும்
உயர்சினைக் குடம்பைக் குரறோற் றினவே" (புற.397)
"வெள்ளி தோன்றப் புள்ளுக்குர லியம்பப்
புலரி விடியற்பகடுபல வாழ்த்தி" (புற.385)
"மதி நிலாக் கரப்ப வெள்ளி யோர்தர
பொறிமயிர் வாரணம் பொழுதறந் தியம்ப" (புற.398)
"வைகுறுமீன்" (அக.17:21; பெரும்.318)
"விளக்குறு வெள்ளி முளைத்து முற்றோன்ற
தெளித்தலைத் தண்ணீர் குறித்தன னாடி" (பெருங்.1:53;81)
"விரிகதிர் வெள்ளி முளைத்த நள்ளிரு விடியல்" (பொருந.71-72)

என்றவற்றினின்றும் உய்த்துணர முடிகிறது.

வெள்ளிமீன் தென்திசை ஏகுமாயின் நாட்டில் கொடிய பஞ்சம், வறுமை முதலான தீமைகள் வந்துறும் எனவும்

நம்பினர். அக்காலத்தில் வெள்ளி தென்புலம் நிற்க விளைவயல்களும், நீர்நிலைகளும் வற்றிப்போய் பயனின்றி வற்கடம் சூழ்ந்துவிட்டதாம். இதனை,

"வெள்ளி தென்புலத் துறைய விளைவயற்
பள்ளம் வாடிய பயனில் காலை" (புற.388)
"வறிதுவடக் குறஞ்சிய சீர்சால் வெள்ளி,
பயங்கெழு பொழுதோ டாநிய நிற்ப"(பதிற்.24:24-25)
"நிலம்பயம் பொழியச் சுடர்சினந் தணியப்
பயங்கெழு வெள்ளி யாறிய நிற்ப" (பதிற்.69:13-14)

என்ற அடிகள் காட்டுகின்றன.

வற்கடம் சூழும் என்பது வானநூல் வல்லாரின் கணிப்பாக இருப்பினும் அதையும் மீறிக் கோள் நிலைகளையும் மீறி, கோன் நல்லவனாக இருப்பின் பஞ்சத்தையும் பஞ்சாகப் பறக்கச் செய்யலாம் என்பதைப் புலவர்கள் தங்கள் பாடல்களில் காட்டியுள்ளனர்.

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனைக் கோவூர்க் கிழார் பாடுமுகத்தான், கீழ்த்திசையினின்று மேற்குத்திசைக்கு, மேற்குத் திக்கினின்று கீழ்த்திசைக்குச் சென்றாலும், வடக்கிலிருந்து தெற்கே செல்லுமாயினும், தென்திசைக்கண் சிறிது நாட்கள் இராது பன்னாட்கள் நெடிது நிற்குமாயினும் வெள்ளியாகிய மீன் எங்கு நிற்பினும் நிற்க. எவை எவை எங்கு நிற்பினும் எங்களுக்குக் கவலையில்லை எங்கட்கு வேண்டியதைக் குறிப்பறிந்து நல்கும் வளவன் தாள் வாழ்க என்று கூறுவதை,

"குணதிசை நின்று குடமுதற் செலினும்
வடதிசை நின்று தேன்வயிற் செலினும்
தென்றிசை நின்று குறுகாது நீடினும்
யாண்டு நிற்க வெள்ளியாம்" (புற.386)

என்ற பாடல் காட்டுகின்றது. எனவே வெள்ளிமீன் தெற்கே செல்லின் தாங்கொணாத துயரம் நாட்டிற்கு ஏற்படும் என்பதைப் புலவர் அறிந்து இருந்தும், தன் மன்னவனது நற்குணம் அத்துயரத்தையும் விரட்டியடிக்கும் என்று கூறுமுகத்தான் மன்னனைச் சிறப்பிக்கும் எண்ணத்தின் வழி வெள்ளி தன் நிலை மாறின் ஏற்படும் நிலையையும்

உணர்த்துகிறார். மன்னவன் மக்களுக்குத் தெய்வமாகவும், நிழலாகவும் நிற்கின்ற பொழுது ஊழிக்காலமே வந்தாலும் கவலை கொள்ளாது மன்னவன் நிழலிலேயே தங்கி யிருந்தனர். கோள்நிலை மாறி கொடுமைகள் வந்தாலும் கவலையில்லை. நாங்கள் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனின் நிழலின்கண் உள்ளோம் என்பதை,

"எறிதிரைப் பெருங்கடலிறுதிக் கட்செலினும்
தெறுகதிர்க் கனலி தென்றிசைத் தோன்றினும்
என்னென் றஞ்சலம் யாமே வென்வேல்
அருஞ்சமங் கடக்கு மாற்றலவன்
திருந்துகழ னோன்றாட் டண்ணிழ லேமே" (புற.397)

என்ற பாடலில் எருக்காட்டூர்த் தாயங் கண்ணனார் எழிலுற எடுத்தியம்புகின்றார். வெள்ளைக் குடி நாகனார் கிள்ளி வளவனின் ஆட்சிச் சிறப்பினைப் பற்றிக் கூறுகின்றார். ஞாயிறு நான்கு திக்குகளிலும் தோன்றினாலும் வெள்ளிமீன் தென்திசைக்கண் சென்றாலும் (வற்கடம் உண்டாக வேண்டும்) காவிரி பாயும் வளமை மிகு நாடே நின் நாடு என்பதை,

"இலங்கு கதிர் வெள்ளி தென்புலம் படரினும்
அந்தண் காவிரி வந்துகவர் பூட்டத்
தோடுகொள் வேலின் றோற்றம் போல
ஆடுகட் கரும்பின் வெண்பூ நுடங்கும்
நாடெனப் பாடுவது நின்தே யத்தை" (புற.35)

என்பதால் வெள்ளிமீன் தென்திசை செல்லின் வற்கடம் தோன்றும் எனும் குறிப்பைத் தருகின்றார்.

இதேபோல் வெள்ளியாகிய மீன் நிலை தடுமாறி நிற்பது குறித்து, இவ்வுலகு என்னாகுமோ என நான் வருந்தக் கூடியவனல்ல என மாறோக்கத்து நற்பசலையார் கூறுவதனை,

"யானே அறானெவன் பரிகோ வெள்ளியது நிலையே" (புற.383)

என்ற அடியும், வெள்ளியாகிய மீன் எத்திசையிலும் நிற்கட்டும் எனக்குக் கவலையில்லை என்று புலவர் புறத்திணை நன்னகனார் கடும்பனூர் கிழானைப் பாடுமுகத்தான் குறிப்பிடுவதனை,

''வறட்சியாண்டு நிற்க வெள்ளி மாண்ட'' (புற.384)

என்ற அடியும் காட்டுகின்றன.

மன்னவன் நல்லவன், அவனது நாடு வளம் நிறைந்த நாடு என்பது மட்டுமல்ல, அவன் வான் பொய்ப்பினும் தான் பொய்யா இயல்புடைய வற்றாது வளங்கொழிக்கும் ஆறுகளையும் உடையவனாய் இருப்பதால் எந்நாளும் எங்கட்குக் கவலை என்பதில்லை எனும் கருத்தினையும் புலவர்கள் பாடல்களில் காட்டத் தவறினார்களில்லை.

''கல்காயுங் கருவே னிலொ
டிருவானம் பெயலொ ளிப்பினும்
வரும்வை கல்மீன் பிறழினும்
வெள்ளி மாறாது வினையுள் பெருக'' (மதுரைக்.106-109)

என மாங்குடி மருதனாரும்,

''வசையில் புகழ் வயங்கு வெண்மீன்
றிசை திரிந்து தெற்கே கினுந்
தற்பாடிய தளியுணவிற்
புட்டேம்பல் புயன்மாறி
வான்பொய்ப் பினுந்தான் பொய்யா
மலைத்தலைய கடற்காவிரி'' (பட்.1-6)

எனக் கூடலூர் உருத்திரங் கண்ணனாரும்,

''வயங்குகதிர் விரிந்து வானகஞ் சுடர்வர
வறிதுவடக் கிறைஞ்சிய சீர்சால் வெள்ளி
பயங்கெழு பொழுதோ டாநிய நிற்ப'' (பதிற்.24:23-25)

எனப் பாலைக் கௌதமனாரும்,

''நிலம் பயம் பொழியச் சுடர்சினந் தணியப்
பயங்கெழு வெள்ளி யாநிய நிற்ப'' (பதிற்.69)

எனக் கபிலரும் குறிப்பிடுவதினின்றும் வெள்ளி தன்நிலை மாறின் மழை பெய்யாது பஞ்சம் வரும் என்பது உணர்த்தப்படுகிறது.

வெள்ளி மட்டுமல்ல பிற கோள் மீன்களும் தங்களது திசையை விட்டு மாறினும் வற்றாத ஆறுகள் இருப்பின் நாட்டின் வளங்கொழிக்கும் என்பதை,

"மைம்மீன் புகையினும் தூமம் தோன்றினும்
தென்திசை மருங்கின் வெள்ளி ஓடினும்" (புற.117)
"கரியவன் புகையினும் புகைக்கொடி தோன்றினும்
விரிகதிர் வெள்ளி தென்புலம் படரினும்
.... .... .... .....
காவிரிப் புதுநீர் கடுவரல் வாய்த்தலை" (சிலப்.10:102-4)
"கோணிலை திரிந்து கோடை நீடினும்
தானிலை திரியாத் தண்டமிழ்ப் பாவை" (மணி.பதி.24)
"கோள்நிலை திரிந்திடின் மாறிவறல் கூறும்" (மணி.7:9)

என்ற பாடல்களில் கூறுமுகத்தான் சனி முதலிய கோள்கள் தன்நிலை மாறின் கோடை நீடிக்கும், பஞ்சம் வந்துறும் என்பதைப் புலவர்கள் உணர்த்துகின்றனர். இத்தகைய சிறப்புடைய மன்னனுடைய ஆட்சி நன்கு நடைபெறவில்லை யெனில் கோள்களின் நிலை திரிந்து மழையின்மை ஏற்படும் என்பதனை,

"கோல்நிலை திரிந்திடில் கோள்நிலை திரியும்" (மணி.7:8)

என்ற அடி காட்டுகின்றது.

மேலும் சனிமீன், மைம்மீன், கரியவன் என கருமை படர்ந்து ஒளி மங்கிய காரணம் பற்றி அழைக்கப் பட்டிருக்கிறது. சனி புகைதலாவது இடபம், சிங்கம், மீனம் இவற்றோடு மாறுபடுதல்.

**செவ்வாய்**

சிவப்புக் கோளாகிய செவ்வாய் 'வளையம்' என்னும் தொப்பியைத் தன்னுள் பிடித்து அணிந்து அழகுமிளிர வானத்தில் காட்சியளிக்கிறது. இக்கோள் சிவந்த நிறமுடைய தென்பதையும், பௌர்ணமியன்று கிழக்கில் தோன்றும் என்பதையும்,

"முந்நீர் நாப்பண் திமில்சுடர் போலச்
செம்மீன் இமைக்கும் மாக விசும்பின்
உச்சி நின்ற உவவுமதி கண்டு" (புற.60)

என்ற பாடல் வெளிக்காட்டுகின்றது. செவ்வாய் மீனின் சிவப்பு நிறங் குறித்தே பண்டைய மக்கள் இக்கோளைப் போரின் கடவுளாகக் கொண்டனர். இந்தச் சிவந்த பகுதிகள் இக்கோளத்திலுள்ள பாலைவனப் பகுதிகளாக இருக்

கலாமென அறிவியலாளர் கருதுவர். செவ்வாய் 'படிமகன்' (11:5) என்ற பெயரில் பரிபாடலில் இடம் பெறுகின்றது. 'அழல் சென்ற மருங்கின் வெள்ளி ஓடாது' (பதிற்.13:25) என்பதில் செவ்வாயும் வெள்ளியும் ஒருசேர இடம் பெறுகின்றன.

## புதன்

வெள்ளியைப்போல ஞாயிற்றிற்கு மிக அண்மையிலுள்ள கோளிது. வெள்ளியைவிட ஒளி குறையினும் வெள்ளியைப் போலவே ஞாயிறு தோன்றுவதற்கு முன்னரும் மறைவதற்கு முன்னரும் காட்சியளிக்கிறது. மற்றக் கோள்களைக் காட்டிலும் புதனில் மட்டும் தன் வளி மண்டலத்தில் மிக்க வெப்பநிலையும், மிக்க குளிர்ச்சி நிலையும் இருக்கும்.

'புந்தி மிதுனம் அடைய'' (பரி.11:5)

என்ற அடியில் புந்தி என்பது புதனைக் குறிப்பதாக வருகின்றது.

''புந்தி யாலுயர் புதனெனும் புதல்வனை மகிழ்வால்'' (1:1:6.3)
''தார காபதி புதல்வன்'' (1:1.8.2)
''புதனு மந்தமென் பூவையும்'' (1:1.9.1)
''மதிமகன் மந்தமென் பூவையும்'' (1:1.9.1)

என்பனவற்றைப் புதன் பற்றிய குறிப்பாக வில்லிபாரதம் தருகிறது. இவற்றில் சந்திரனுடைய மகன் புதன் என்பதும் சுட்டப் பெறுகிறது. குருவின் மனைவி தாரையோடு நட்புக் கொண்டு அவளோடு கூடிப் பெற்ற புதல்வன் புதன் என்பது புராணக் கதை.

## வியாழன்

கோள்களிலேயே வியாழக் கோள் தான் மிகப் பெரிது. இது சக்தி வாய்ந்த காந்த மண்டலங்களைக் கொண்டது. இது எதிர்காலத்தில் சுயஒளி பெற்று வெப்பத்தையுடைய சூரியனைப் போல திகழும் வாய்ப்புண்டு என நம்பப்படுகிறது.

''அங்கி யுயர் நிற்ப வந்தனன்'' (பரி.11:7)

என்பதில் அந்தணர் என்ற சொல்லால் வியாழன் குறிக்கப்பெறுகின்றது.

"நறவினை வரைந்தார்க்கும், வரையார்க்கும் அவை எடுத்து
அறவினை இன்புறூஉம் அந்தணர் இருவரும்" (கலி.90:1-2)

என்பதில் வியாழன் மட்டுமன்றி வெள்ளியும் அந்தணர் என்ற சொல்லாலே சுட்டப் பெறுதல் தெரிகின்றது. இங்குத் தேவர்க்கும், அசுரர்க்கும் குருவாக விளங்கும் அந்தணர் இருவராக வியாழனும் வெள்ளியும் குறிக்கப் பெறுகின்றன.

"வெள்ளி எழுந்து வியாழம் உறங்கிற்று" (திருப்.)

என்பதிலும் இவ்விரண்டு கோள்களும் ஒருசேரச் சுட்டப் பெறுகின்றன.

## சனி

ஞாயிற்றிலிருந்து சுமார் 886 மைல் தொலைவில் சுற்றி வருவது சனி மீன். தொலைநோக்கியில் பார்க்கும் போது மற்றக் கோள்களைவிட மிக அழகாகத் தோற்றம் தருவதாக இதுவுள்ளது. இதைச் சுற்றியுள்ள வளையங்கள் தனிச் சிறப்புடையன. இவ்வளையங்கள் அறிவியலாரின் கவனத்தைக் கவர்ந்துள்ளன. இச்சனிக்கோள் வியாழக் கோளைப் பெரிதும் ஒத்திருக்கிறது. இராசி வீடுகளில் ஒன்றான சிம்மராசியில் மகநட்சத்திரம் உள்ளது. சனிக்கு சிம்மராசி பகை வீடாகும். சனி இப்பகை இராசிக்கு வரும்பொழுது பெருந்தீங்கு விளைவிக்கும் என்பதை இலக்கியங்களில் (வாயுசங்கிதை கடவுள் 70; தஞ்சை.48) காண முடிகின்றது.

"மகத்திற் புக்கதோர் சனிஎனக் காணாய்" (சுந்.தேவா.54:9)
"விசயன் றம்முற் குதவி செய்யாமல்
மகத்திற் சனிபோல் விளைக்குவம் யாம்" (வி.பா.11ஆம் போர்.40)

பொதுவாக இந்திய வானியலாளர் சனி மீனைக் கருமையானதாகவும், தீய பலனைக் கொடுப்பதாகவும் கருதினர். இதன் நிறம் பற்றிய இவ்வெண்ணத்தினாலேயே இது மைமீன் (4:117), மைமாகி எனவும் அழைக்கப்படுகிறது.

## இராகு, கேது

சாயா கிரகங்களென்றும், பாம்புக் கோள்களென்றும் கூறப்படும் இராகு, கேதுக்கள் இலக்கியங்களில் பரவலாக

இடம் பெறுகின்றன. இவற்றின் தோற்றம் பற்றிப் பல கதைகள் மக்களிடையே நிலவி வருகின்றன. தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடைந்து அமுதத்தை வெளிக் கொணர்ந்த போது அதனைப் பங்கிட்டுக் கொள்வதில் இவர்களுக்குள் முரண்பாடு ஏற்பட்டது. அவ்வேளையில் திருமால் அழகிய பெண்ணின் வடிவம் கொண்டு அவர்கள்முன் வர, அசுரர்கள் அவர்மீது மையல் கொண்டு அமுதக் கலசத்தை அவரிடம் ஒப்படைத்தனர். அவர் தேவர்களுக்கு மட்டும் அமுதத்தை அதிக அளவிலே ஊற்றிவருவதைக் கண்ணுற்ற இரு அசுரர்கள் திருமாலின் சூழ்ச்சியினைப் புரிந்து கொண்டு, அசுரர்களாக இருப்பின் அமுதம் கிடைக்காது என்றுணர்ந்து தேவர்களைப் போன்று மாற்றுருக் கொண்டு தேவர் வரிசையில் அமர்ந்து அமுதத்தைப் பருகினர். இதனையறிந்த திருமால் சினம் கொண்டு தம் வாளால் அவர்களது தலைகளை வீழ்த்த அமுதம் உண்டிருந்த காரணத்தால் அவர்கள் இறப்பினை எய்தாமல் பாம்புருவம் பெற்றனர். அதில் ஒன்று கரும்பாம்பாகவும், ஒன்று செம்பாம்பாகவும் உருவெடுத்துக் கோள்களில் இடம் பெற்றதாக அவற்றுள் ஒரு கதை அமைகின்றது.

> ''அரவு நுங்கு மதி'' (குறுந்.395:4; நற்.377:6-9; அக.313:7)
> ''அரவுக் குறைப் படுத்த பசுங்கதிர் மதியம்'' (நற்.367: 6-7)
> ''பாம்பு ஊர்மதி'' (நற்.128;2)
> ''பாம்பு சேர்மதி'' (கலி.15:17)
> ''அரவு செறி உவவு மதி'' (பரி.10:75)

என்பன இராகு, கேது குறித்து இலக்கியங்களில் இடம் பெறும் சில காட்டுகளாகும்.

இக்கோள்நிலை அமைப்புகளை ஒட்டியே மழையும், மழையின்மையும் நடைபெறுகின்றன. மழை பெய்வதற்கு ஏற்ற கோள்நிலை அமைப்புகளையும் (பரி.*11:1-5*), மழைவளம் இல்லாமற் செய்யும் கோள்நிலை அமைப்பு களையும் தொகை நூல்களில் (பதிற்.*24:23-25; 13: 25-28;* புற.*386: 20-25; 35: 6-8; 117; 1-3; 388: 1-2;* மதுரைக். *106-109;* பட்.*1-2)* காண முடின்றன. கோள்களின் நிலை திரிந்து மழையின்மை ஏற்படும் என்பதனை, 'கோல் நிலை திரிந்திடில் கோள் நிலை திரியும்' (துயி.*8*) என்ற அடியால் மணிமேகலை காட்டுகின்றது.

மேற்கூறப்பட்டுள்ள குறிப்புகளினின்று கோள்கள் குறித்த தமிழர்தம் அறிவையும், மரபு வழியாக வந்த மக்களின் கோள்கள் பற்றிய எண்ணங்களையும், உணர்வுகளையும் அறிய முடிகின்றது. குறிப்பாக இலக்கியங்களிலும், மக்கள் வாழ்விலும் சூரியன், சந்திரன், வெள்ளி மிகுதியாகப் பேசப்பட்டமை தெரிகிறது. மழை, மழையின்மை ஆகியவற்றிற்குக் கோள்களின் அமைப்பே காரணம் என்பதும் புலப்படுகிறது. இதனைத் தொடர்ந்து நட்சத்திரங்கள் பற்றிய குறிப்புகள் இடம் பெறுகின்றன.

## நட்சத்திரங்கள்

அண்டத்தில் கோள்கள் இருப்பதைப் போலவே தாரகை, விண்மீன், நாண்மீன் எனப் பலவாறு அழைக்கப் பெறும் நட்சத்திரங்களும் இருக்கின்றன. இவை வானில் கணக்கிட்டு அறிய முடியாதவாறு கோடானுகோடியாக உள்ளன. கோள்கள் பயணிக்கும் நிலையில், 27 நட்சத்திரத் தொகுதிகளைக் கடப்பதால் இவ்விருபத்தேழு நட்சத்திரங்களே சோதிடத்தில் எடுக்கப்பெறுகின்றன. 27 நட்சத்திரங்கள் என்பது 27 நட்சத்திரத் தொகுதிகள் என்ற பொருளை உள்ளடக்கியுள்ளது. இந்நட்சத்திரங்கள் அடங்கிய தொகுதிக்கு 'நட்சத்திர மண்டலம்' என்று பெயர். இவை ஒவ்வொன்றும் வெவ்வேறு எண்ணிக்கையில், வெவ்வேறு உருவங்களில் (இணைப்பு.2) காணப்பட்டாலும், ஒன்பது கோள்களும் பயணிக்கிற பாதையில்தான் இருக்கின்றன. நாள் என்பது 'தினம்' என்னும் பொருளில் வழங்குவதோடு நட்சத்திரங்களுக்கும் பெயராக வழங்குகிறது.

நட்சத்திரங்களின் பயணத்தைக் கொண்டு மாதத்தில் ஒரு நாளுக்குப் பெயரிட்டனர். ஆதலால் அம்மீன்களின் முக்கியமான 27 நட்சத்திரங்களை நாட்களாக்கினர். எனவே நட்சத்திரங்களை 'நாள்மீன்' என்றும் அழைத்தனர். அசுவனி பரணி என வானில் தோன்றும் நட்சத்திரங்களுக்குப் பெயரிட்டனர்.

நட்சத்திரங்களைப் பற்றிய பல அரிய செய்திகளைத் தமிழர், அறிவியல் வளர்ச்சியடையாத அக்காலத்திலேயே

அறிந்திருந்தனர். அவர்தம் இத்தகைய அறிவுத்திறத்தினை இலக்கியங்களில் பரவலாகக் காணமுடிகிறது.

''நாளுங் கோண்மீன் தகைத்தலுந் தகைமே'' (கலி.5:8-9)
''நாளும் புள்ளும்'' (புற.755)
''நாண்மீனும் தாரகையும்'' (பரி.16:52)
''சுடரொடு சூழ்வரு தாரகை மேரு'' (பரி.19:19)

இருபத்தி ஏழு நட்சத்திரங்களன்றி வீழ்வெள்ளி, வால்வெள்ளி, அருந்ததி, எழுமீன், அகத்தியன் என்னும் நட்சத்திரங்களைப் பற்றிய குறிப்புகளும் இலக்கியங்களில் காணப்படுகின்றன. வானிலுள்ள எண்ணிலடங்கா விண்மீன்கள் பற்றிய தெளிவான அறிவுச் செய்திகள் இலக்கியங்கள்வழி கிடைக்கப் பெறவில்லை.

27 நட்சத்திரங்களைப் பற்றிச் சிந்திக்கும்போது அவை இகர, ஐகார, மகர ஈற்று முடிவுகளைப் பெற்று அமைந்துள்ளதைக் காணமுடிகிறது.

காட்டு: அசுவினி - இ

கார்த்திகை - ஐ

மிருகசீரிடம் - ம

புணர்ச்சியின்போது இகர, ஐகார ஈற்றினை உடைய நட்சத்திரப் பெயர்களின் முன்பு வருமொழியில் வினைச் சொற்கள் இடம்பெறும்போது 'ஆன்' சாரியை தோன்றும் என்பார் தொல்காப்பியர்; மகர ஈற்று நாட்பெயர்களோ ஆனொடு அதன் முன் அத்து என்னும் சாரியையும் பெற்று ஓணத்தாற் கொண்டான், மகத்தாற் கொண்டான் என்றார் போல வழங்க வேண்டும் என்ற விதி வகுத்துள்ளார்.

''நாள்முன் தோற்றும் தொழில் நிலைக் கிளவிக்கு
ஆன்இடை வருதல் ஐயம் இன்றே'' (எழுத்.உயி.45)

என்பது இகர ஈற்று நாட்பெயர் பற்றிய விதி. ஐகார ஈற்றுப் பெயர்களும் இத்தகையனவே என,

''திங்களும் நாளும் முந்து கிளந்தன்ன'' (எழுத்.உயிர்.84)

என விதிக்கின்றார். மகர ஈற்று நாட்பெயர்களைக் குறிக்குமிடத்து,

''நாட் பெயர்க்கிளவி மேற்கிளந்தன்ன;
அத்தும் ஆன்மிசை வரைநிலை இன்றே;
ஒற்றுமெய் கெடுதல் என்மனார் புலவர்'' (எழுத்.புள்.36)

என்று எடுத்தியம்பிய தொல்காப்பியர் இவ்விதியைத் தாம் புதிதாக வகுக்கவில்லை; வழிவழியாகப் புலவர்கள் மத்தியில் வழக்கில் இருந்து வந்துள்ளது என்பதைக் குறிப்பதற்காக 'என்மனார் புலவர்' என்று குறித்து நூற்பாவினை இயற்றியுள்ளார். ஆதலால் இவ்விதி தொல்காப்பியர் காலந்தொட்டே மக்களிடையே புழக்கத்தில் இருந்துள்ளது என்பதை அறியமுடிகிறது.

இக்காலத்தில் அசுவினியை முதலாக வைத்து நட்சத்திரங்களை வரிசைப்படுத்தி வருகின்றனர். பண்டைக் காலத்தில் கார்த்திகையை முதலாகக் கொண்டு நட்சத்திரங்களை வரிசைப்படுத்தி வந்தனர் என்பதை இலக்கியச் சான்றின் வழியாகக் காணமுடிகிறது.

''மீனத்து இடைநிலை மீனத்து அகவையின்'' (11:42; 12:23-25)

என்று காணப்படும் மணிமேகலை வரியின் மூலம் பதின்மூன்று நட்சத்திரங்கள் சென்றபின் வருவது விசாக நட்சத்திரம் என்று கொள்கிறார். கார்த்திகை நட்சத்திரத்தை முதலாகக் கொண்டு எண்ணினால்தான் அவர் கூறும் கருத்து ஒத்துவருகிறது.

''ஒன்பதொடு ஒன்றொடு ஏழு பதினெட்டொடு ஆறும்
உடன் ஆய நாள்கள் அவைதாம்
அன்பொடு நல்லநல்ல, அவைநல்ல
அடியார் அவர்க்கு மிகவே'' (சம்.தேவா.2:85.2)

என்று இப்பாடலிலும் நட்சத்திரங்களை வரிசைப் படுத்தும் போது கார்த்திகையை முதலாவதாகக் கொண்டுள்ளனர். ஒன்பதாம் நாள் பூரம், ஒன்று என்று வரும் முதல் நாள் கார்த்திகை, ஏழாம் நாள் ஆயில்யம், பதினெட்டாம் நாள் பூராடம். கார்த்திகையிலிருந்து பின்னோக்கி நட்சத்திரங்களை எண்ணும்போது ஆறாம் நாள் பூரட்டாதியாக வரும்.

சங்கப் பாடல்கள், காப்பியங்கள், தேவாரம், திவ்வியப்பிரபந்தம் முதலியவற்றில் நட்சத்திரப் பெயர்களுள் கார்த்திகை மிகுதியும் குறிக்கப்பட்டுள்ளது. கார்த்திகை

நட்சத்திரம் அறுமீன் கொண்ட கூட்டமாக (ஆறு உடுக்களை யுடையதாக இருப்பதனால்) அறுமீன், எரிஅழல், ஆரல், அங்கி (பரி.11:7) என்னும் வேறு பெயர்க்ளையும் கொண்டு விளங்குகிறது. இந்த அடிப்படையிலேயே பின்னர் முருகனைக் கார்த்திகைப் பெண்கள் அறுவர் வளர்த்தனர் என்பன போன்ற கதைகள் புனையப்பட்டிருக்க வேண்டும். இந்நட்சத்திரம் அறுமீன் எனச் சுட்டப்படுதலை,

''குறுமுயல் மறுநிறம் கிளரமதி நிறைந்து
அறுமீன் சேரும் அகல் இருள் நடுநாள்'' (அக.141:7-8)
''அறுமீன் பயந்த அறம் செய்திங்கள்'' (202:9-10)

என்ற அடிகளில் காணமுடிகின்றது. மேலும், மலைபடு கடாமிலும்,

''அகல் இருவிசும்பின் ஆஅல் போல
வாலிதின் மலர்ந்தன புன்கொடி முசுண்டை'' (100-101)

என்று கார்த்திகை நட்சத்திரம் பற்றி வருகிறது.

நாடு முழுவதும் கார்த்திகைத் திருநாளில் மக்கள் விளக்கேற்றினர். அந்நாளில் மழை வந்தது என்பதை,

''நலமிகு கார்த்திகை, நாட்டவரிட்ட
தலைநாள் விளக்கின் தகையுடையவாகி
புலமெலாம் பூத்தன தோன்றி - சிலமொழி
தூதொடு வந்த மழை'' (கார்.நாற்.26)

என்ற பாடல் காட்டுகின்றது. இன்றும் கார்த்திகைத் திருநாளில் மழை பொழியுமென்ற எண்ணம் மக்களிடையே நிலவி வருகின்றது.

சங்ககாலத்தில் வீடுதோறும், வீதிதோறும், குன்றுதோறும் விளக்கேற்றி விழா எடுக்கப்பட்ட கார்த்திகைத் திருவிழா சங்கம் மருவிய காலத்திற்குப் பின்னரும் தொடர்ந்தது என்பதனைக் களவழி நாற்பதின் வழி அறிய முடிகிறது. இதனை,

''ஆர்ப்பு எழுந்த ஞாட்பினுள் ஆள்ஆள் எதிர்த்தோடி
தூக்கி எறிதரு, வீழ்தரும் ஒண்குருதி
கார்த்திகைச் சாற்றில் கழிவிளக்குப் போன்றனவே
போர்க்கொடிதனை, பொருபுனல், நீர்நாடன்
ஆர்த்தமா அட்டகளத்து'' (இனி.நாள்.17)

என்ற பாடலும் உறுதிப்படுத்துகின்றது. சீவக சிந்தாமணியில்,

"குன்றில் கார்த்திகை விளக்கிட்டன்ன
கடிகமழ் குவளைப் பைந்தார்" (256)

என்றும், 'குன்றத்து உச்சிச்சுடர்' (262) என்றும் கார்த்திகை நாளன்று குன்றின்மேல் விளக்கேற்றப்பட்ட வழக்கம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

சென்னையிலுள்ள மயிலாப்பூர் கபாலீசுவரர் கோயிலில் கார்த்திகைத் திருநாளைக் கொண்டாடியதை,

"வளைக்கை மடநல்லார் மாமயிலை வண்மறுகில்
துளக்கில் கபாலீச்சரத்தான் தொல்கார்த் திகைநாள்
தளத்து ஏந்து இளமுலையார் தையலார் கொண்டாடும்
விளக்கிடு காணாதே போதியோ பூம்பாவாய்" (2:47.3)

என்ற தேவாரப் பாடலில் விளக்கியுள்ளார். 'தொல் கார்த்திகை' என அவர் கூறியிருப்பதன் மூலம் இவ்விழாவின் தொன்மையினை உணர முடிகின்றது. 'கார்த்திகைக்குக் கார்த்திகை நாளொரு சோதி' (2:81) என்பதில் கார்த்திகை நட்சத்திரம் பற்றிய குறிப்பை அருணாசல புராணம் தருகிறது.

ஆண்டுதோறும் கார்த்திகைத் திங்களில் கார்த்திகை உடுமீன் வருநாளில் திருவண்ணாமலையில் இறைவன் சோதிப் பிழம்பாய்க் காட்சி தரும் மாட்சியை, அருணாசல சதகம்,

"வளர் கார்த்திகை மாதந்தோறும் வருகார்த்திகை நாடன்னிலே
பளகானதில் லாவன்பர்கள் பரிவாகவே யேத்தித் தொழக்
கிளர் மாமலை தனிலே யொளிகெழு சோதி காட்டா நின்றநின்
அளவார் தெரிபவ ரையனே அருணாசலா அருணாசலா" (26)

என்ற பாடலில் காட்டுகின்றது.

"எரிசடை யெழில்வேழந் தலையெனக் கீழிருந்து" (பரி.11:2)

என்ற அடியில் கார்த்திகை, திருவாதிரை, பரணி ஆகிய மூன்று நட்சத்திரங்களைப் பற்றிய குறிப்பு ஒருங்கே வருகின்றன.

### அசுவினி

உயிரினங்களின் தோற்றக் கொள்கையைப் பற்றிப் பல்வேறு வகையான கருதுகோள்கள் நிலவிவருகின்றன. அறிவயில் அடிப்படையிலும் புராண அடிப்படையிலும்

இத்தகைய கருதுகோள்கள் பல காணப்படுகின்றன. இத்தகைய புராண அடிப்படையிலமைந்த கருதுகோளில் ஒன்றே சந்திரன் அசுவினியைக் கூடியதால் பறவைகளும் விலங்குகளும் தோன்றின என்பதாகும். இதனை,

> ''அலங்கு வெண்மதி யைப்பசி யடையவப் பகலே
> நிலங் கொண்டோங்கின'' (சீவக.170)

என்ற அடிகளால் உணரலாம்.

பரணி

பரணி நட்சத்திரத்தில் குழந்தை பிறத்தல் சிறப்பு என்று பழங்காலந் தொட்டு மக்கள் நம்பி வந்துள்ளனர். இதன் அடிப்படையிலேயே 'பரணியில் பிறந்தான் தரணி ஆள்வான்' என்ற பழமொழி தோன்றியுள்ளது. பரணி நாளில் பிறத்தல் சிறப்பு என்று சீவகசிந்தாமணி எடுத்தியம்புகிறது. பரணி இலக்கியம் என்ற சிற்றிலக்கியம் தோன்றுமளவிற்கு இந்நட்சத்திரத்தின்மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கை வலிமையுடையதாகக் காணப்படுகின்றது.

''காடுகெழு செல்விக்குப் பரணிநாள் கூழும் துணங்கையும் கொடுத்து வழிபடுவதொரு வழக்கு'' என்று பேராசிரியர் கூறுவது (தொல்.சொல்.149 உரை விளக்கம்) எதிரிகளை வென்ற போர்க்களத்தில் உயிர் நீத்தோரின் உடல் உறுப்புகளால் பேய்கள் கூழ் சமைத்து, அதனைப் பரணி நாளில் காளிக்குப் படைத்து உண்டு மகிழும் இயல்பைச் சுட்டி, போரில் வென்றோனை வாழ்த்திப் பாடும் பொருளமைதியால் இவ்விலக்கியம் பரணி இலக்கியம் எனப்பட்டது என்ற கருத்தை அரண் செய்கின்றது. 'பரணி கூழ் பாரதத்தில் யறியோமோ' எனவரும் கலிங்கத்துப் பரணி தொடரும் பரணி நாளில் காளிக்கு இடும் கூழையே சுட்டுகின்றது. மேலும், கலிங்கத்துப் பரணியில் பரணி நாள், யானை பிறந்த நாள், காடுகெழு செல்வியாகிய கொற்ற வைக்கும் நமனுக்கும் உரிய நாள் என்ற குறிப்புகளும் கிடைக்கின்றன. எனவே கூழ் சமைத்தலுக்கு உரிய நாளாகப் பரணி நாள் கருதப்பட்டமையும், பரணி இலக்கிய வகையே 'பரணி' என்ற சொல்லால் அழைக்கப்பட்டமையும் பரணி நட்சத்திரத்தின் சிறப்பை வெளிப்படுத்துகின்றன.

''எரிசடை எழில் வேழம்'' (பரி.11:2)

என்பதில் வேழம் என்பது வேழத்திற்கு யோனியாகிய பரணியைக் குறிப்பதும் நோக்கத்தக்கது.

**உரோகிணி**

சந்திரனுக்கு மனைவியர் 27 நட்சத்திரங்களாக இருந்தாலும் அவன் உரோகிணியிடமே மிகுவிருப்புக் கொண்டு விளங்கினான் என்று புராணச் செய்திகள் கூறுகின்றன. அதனால்தான் சந்திரன் உரோகிணியைக் கூடும் நாட்கள் சிறப்புடையதாகக் கருதப்படுகிறது. வெண்மதியைச் சூழ்ந்து அகலாமல் பிரிவின்றிச் செல்கிறது உரோகிணி என்பதனை,

''விண் ஊர்பு திரிதரும் வீங்கு செலல் மண்டிலத்து
முரண்மிகு சிறப்பின் செல்வனொடு நிலைஇய
உரோகிணி நினைவனள் நோக்கி'' (161-63)

என்ற நெடுநல்வாடை அடிகளில் அறிய முடிகிறது. மதிவிண்ணக மிருள்கொள உரோகிணியோடு சேர்ந்து ஒளித்த தன்மையை,

''விண்ணகம் இருள்கொள விளங்கு வெண்மதி
ஒண்ணிற உரோகிணியோடு ஒளித்தது ஒத்ததே'' (198)

எனச் சீவகசிந்தாமணி காட்டுகின்றது. மேலும் இந்நூலில், 'ஒண்ணிற உரோணி ஊர்ந்த; ஒளிமதி ஒண்பெண் ஆட்சி' *(620)* என்பதிலும், அகநானூற்றிலும் *(86)* இச்செய்தியினை அறிந்துகொள்ள முடிகிறது. திருப்புல்லாணி எம்பெருமான் மீதும் பதுமாசனித் தாயார் மீதும் பாடிய கிளைப்பாட்டு என்ற சிற்றிலக்கிய நூலில், 'ஆவணியும், ரோகணியும் அட்டமியி லல்லிருளில்' என்ற அடியில் உரோகிணி நட்சத்திரம் குறிக்கப்பெறுகிறது.

**திருவாதிரை**

திருவாதிரை நாள்மீன் தீச்சுடர் போன்று செம்மீன் ஆகத் தோன்றும். ஆதிரை விண்மீனின் நாளைச் சிவனுக்குரிய நாளாகவே கருதிக் கொண்டாடியமையைப் பரிபாடல்

(ஆதிரை முதல்வனிற் கிளந்த, *8:6*), கலித்தொகை (*150:20*) போன்ற சங்க இலக்கியங்கள் சுட்டுகின்றன. மதிநிறைந்த ஆதிரை நாளில் அந்தணர் சிவனுக்குரிய விழாவைத் தொடங்கியதை,

"மாஇருந் திங்கள் மதிநிறை ஆதிரை
விரிநூல் அந்தணர் விழவு தொடங்க" (பரி.11:77-78)

என்ற அடிகள் காட்டுகின்றன.

"ஆதிரையான் ஆதிரையான் என்றே அறையுமால்
ஊர்திரை நீர்வேலி உலகு" (1)

என ஆதிரையைச் சிறப்பிக்கிறது முத்தொள்ளாயிரம். மூவர் தேவாரத்திலும், ஆதிரை நாளைப் பற்றிய குறிப்புகள் பல உள்ளதை,

"ஆடவன் ஆதிரையன் ஆரூர் அமர்ந்தானே" (சம்.தேவா.1:105.1)
"ஆதிரை நாள் காணாதே போதியோ பூம்பாவாய்" (சம்.தேவா2:47.4)
"அத்தன் ஆரூர் ஆதிரை நாளால் அதுவண்ணம்" (திரு.3:6.79.1)
"திங்களூர் திருவாதிரையான்" (சுந்.தேவா.7:31.6)

என்ற பாடலடிகள் காட்டுகின்றன. அப்பர், சம்பந்தர், சுந்தரர் மூவரும் ஆதிரை நாளைப் பயன்படுத்தியதன்வழி அந்நட்சத்திரத்தின் சிறப்பு வெளிப்படுகின்றது.

'மிக்க இருதேவர் நாள்' (ஆசா.*43*) என்பது சிவபிரானுக்கும் திருமாலுக்கும் உரிய திருவாதிரை, திருவோண நட்சத்திரங்களைக் குறிக்கின்றன.

புனர்பூசம்

கூடலூர் கிழார் புனர்பூச நட்சத்திரத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது அதன் வடிவத்தினை,

"கடைக் குளத்துக் கயம் காய" (புற.229)

என்று கூறியுள்ளார். 'அதிதி நாள் கழையாவணநேமி புணர்தல்' எனப் பிங்கலந்தைச் சூத்திரமும் (புற.*229*. மேற்கோள் ஐயர் பதிப்பு) புனர்பூச நட்சத்திரத்தினைப் பற்றி எடுத்தியம்பியுள்ளது.

**பூசம்**

'தைப்பூசத் திருவிழா' என்பது தமிழகத்தில் பண்டுதொட்டுக் கொண்டாடப்பட்டு வரும் விழாக்களில் ஒன்றாகும். சைவ சமயத்தார்க்கும் கௌமார சமயத்தார்க்கும் உரிய விழாக்கள் இக்காலத்தில் நிகழும் என்பது குறிப்பிடத்தக்கது.

"பூசம் புகுந்து ஆடிப் பொலிந்து" (தேவா.1:32.5)
"பூசநீர்ப் பொலியும் புனற் பொன்னியிற் பன்மலர்" (தேவா.2:2.6)
"தைப்பூசம் காணாதே போதியோ பூம்பாவாய்" (தேவா.2:47.5)
"பொருந்திய தைப்பூசம் ஆடிப் பொலிவெய்த" (தேவா.2:56.5)
"பூசநீர்க் கடுவாய்க் கரைப்புத்தூர்" (தேவா.5:62.8)

என்பன போன்ற அடிகள் பூச நட்சத்திரத்தின் தாக்கம் தமிழர் வாழ்விலும், சமய நிகழ்வுகளிலும், இலக்கியங்களிலும் பெரிதும் காணப்படுகின்றன என்பதை உணரச் செய்கிறது. ஒருவரது பிறந்தநாள் பற்றிக் குறிப்பிடும்போது நட்சத்திரப் பாதமும் சுட்டப் பெறுதலுக்கு யூகிமுனிவர் பிறந்த நாட்குறிப்பு காட்டாக அமைகிறது.

"நேரான ஆவணியாம் திங்கள் அப்பா
நெடிதான பூசமது மூன்றாங் காலாம்"[7]

**மகம்**

குரு சிம்ம இராசியில் மக நட்சத்திரத்தோடு கூடுகின்ற காலம் 'மகாமகம்' எனப்படும். பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை வருகின்ற அந்நாளினை 'மகாமகம்' என மக்கள் கொண்டாடுவர். இந்நாள் தமிழகத்திலுள்ள - கும்பகோண மாவட்டத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. மகம் என்ற நாள்மீன் சந்திரனுக்கு அருகிலேயே வரும் என்பதனை,

"மழை நீங்கிய மாக விசும்பில்
மதிசேர்ந்த மகவெண் மீன்" (பட்.34-35)

என்ற வரிகள் விளக்குகின்றது. இதில் பொய்கைக்கு மகமீன் ஒப்பிடப்பட்டுள்ளது. மகத்தில் சனி வருங்கால் உலகிற்குத் தீமை பயக்கும் என்பதை,

---

7. யூகிமுனிவர் பிடிவாதம் ஆயிரம், ப.5

''முகத்திற் பகழியிரண்டுடை யார்கிட முரிமுந்நீர்
அகத்திற் பிறந்த சுரவிந்த மோவடை யார்தமக்கு
மகத்திற் சனியன்ன சந்திர வாணன் தென்மாறை வேற்போ
நுகத்திற் பகலனை யாய் தன்மையேது நுவனக்கே'' (தஞ்சை.48)

என்ற பாடலும்; 'மகத்தில் வாழ் சனியாயினை' (வாயு சங்கிதை. கடவுள், 7) என்ற அடியும் தெளிவுறுத்துகின்றன. இதே கருத்து சுந்தரர் தேவாரத்திலும் (54:9), வில்லிபாரதத்திலும் (11ஆம் போர். 40) சுட்டப்பெறுகின்றன.

**அத்தம்**

கடவுளர் பூவுலகில் மானிடராகப் பிறப்பெடுக்கின்ற போது பிறந்த நாள் நட்சத்திரம் கற்பித்தல் எட்டு அல்லது ஒன்பதாம் நூற்றாண்டு வழக்கம். திதியே முன்னர்க் கொள்ளப்பட்டது. கண்ணன் பிறந்த நாள் ஆவணித் திங்கள் இருட்பக்கத்து அட்டமி. பெரியாழ்வார் காலத்தில் ஒரு அட்டமியன்று உரோகிணி அமைந்தது போலும். அதனால் அவர், 'அத்தத்தின் பத்தாநாள் பிறந்த அச்சுதனை' எனப் பாடினார். அத்தத்தின் பத்தாநாள் திருவோணம். இதில் அத்தம், திருவோணம் பற்றிய குறிப்பு வருகின்றது.

**உத்திரம்**

உத்திரம் என்னும் நட்சத்திரத்தின் பெயர் மாளிகையிலுள்ள உத்தரத்திற்கும் அமைதல் கருதி,

''நாளொடு பெயரிய கோள் அமை விழுமரத்து'' (453)

என்று நெடுநல்வாடை இயம்புகிறது.

பங்குனி மாதத்து வரும் பங்குனி உத்திரப் பெருவிழா சிறப்புடைத்து என்பதனைப் 'பங்குனி முயக்கம்' என்ற சொல் காட்டுகிறது. இதனையே,

''பங்குனி உத்தர நாள் ஒலிவிழாக் காணாதே
போதியோ பூம்பாவாய்'' (சம்.தேவா.2:47.7)
''ஒற்றியூரையும் உத்திரம் நீர்மகிழ்வீர்' (சுந்/தேவா.7:49.7)
''ஒத்தமைந்த உத்தர நாள் தீர்த்தம் ஆக
ஒளிதிகழும் ஒற்றியூர் என்கின்றாரே'' (தேவா.6:45:5)
''பாரூர் பரிபதம் பங்குனி உத்தரம்
பாற்படுத்தான்'' (திருஞா.தேவா. 4:102.2)

என்ற பாடலடிகளும் காட்டுகின்றன.

''பங்குனிநாள் கடைபாரித்தோம்'' (நாச்.2:1)

என்பதில் பங்குனி நாள் கடை வரையில் என்று கூறுவது உத்திர நாள் வரை என்ற பொருளைத் தருகின்றது. இன்றும் கோவில்களில் உத்திரத் திருவிழா சிறப்பாக நடத்தப்பட்டு வருகிறது. பங்குனி உத்திர நாளில் அர்ச்சுனன் பிறந்ததால் பங்குனன் எனப்பட்டான் என்று மகாபாரதம் *(1:2.83)* கூறுகின்றது.

### அனுசம்

சனி கோளுக்குரிய நட்சத்திரமான அனுசம் முடப்பனை போலும் வடிவுடையது. இதனை, 'முடப் பனையத்து வேர்முதலா' *(229:3)* எனப் புறத்திரட்டு குறிக்கின்றது.

### சித்திரை

சித்திரை நட்சத்திரம் 27 நட்சத்திரங்களுள் பதினான்காவது நட்சத்திரம். மீன் என்னும் சொல்லுக்குச் சித்திரை நட்சத்திரம் என்னும் பொருளும் உள்ளது.

''நெய் மீனறுவை நேர்வான் பயறு
நடுநாள் துவட்டா நானே தச்சன்
தெறியில் இன்னவை சித்திரப் பெயரே'' (பிங்.25:2-2 வானவர் வகை)
'மீனே சித்திரைநாள் வான்மீன், மயிலையு மேவுப் பேர்'
(சூடாமணி நிகண்டு, 14:4)

என்று பிங்கலந்தையும், சூடாமணியும் சித்திரை நட்சத்திரம் பற்றிக் குறிப்பிடுகினறன.

### மூலம்

கேதுக்குரிய நட்சத்திரமான மூலம் பற்றிய இலக்கிய நயமிகுந்த காட்சியொன்று திருவேங்கடமாலையில் காட்டப்பட்டுள்ளது. பெண்குரங்கு ஒன்று ஆண்குரங்கிடம் 'மண்மூலம்தா' என்று கேட்கிறது. அதாவது மண்ணி லிருக்கும் கிழங்கை உண்பதற்குப் பெயர்த்தெடுத்துத் தருமாறு கேட்கின்றது. உடனே வானத்திலுள்ள 'மூலம்' என்ற நட்சத்திரம் அதனைச் செவிமடுத்துத் தன்னைப் பிடித்துக் கொடுக்கச் சொன்னதாகக் கருதி அஞ்சி ஒடுங்கிற்று என்பதனை,

"மண்மூலம் தாஎன்று மந்திகடு வதற்குரைப்ப
விண்மூலம் கேட்டேங்கும் வேங்கடமே!" (25)

திருமூலர் நந்தியிடம் உபதேசம் பெற்றதும், முக்தி பெற்றதும் மூலநட்சத்திரத்தில் என்பதை,

"ஒட்டியே மூலத்தால் முத்தி பெற்றார்
உத்தமனே பாட்டனென்ற மூல நாயர்
நாட்டியே நந்தியல்லோ உபதே சித்தார்
நலமான மூலத்தில் நந்தி நந்தி
ஏட்டியே மூலத்தால் முத்தி பெற்றார்
ஏத்தமாம் பாட்டரென்ற எட்டு பேரும்
மூட்டியே விதுகடந்த மூலம் மூல மூல
மென்று மூச்சு விட்டுப்பே சொண்ணாதே"

(போகர் சப்த காண்டம்)

என்ற பாடலடிகளில் காணமுடிகிறது. உத்திரம், மூலம், மிருகசீரிடம் ஆகிய நட்சத்திரங்களைப் பற்றிய குறிப்புகள் புறத்திரட்டில் வருகின்றது.

## திருவோணம்

நாள்களுக்குள்ளே தெய்வத் தொடர்பு பெற்றபெருமை உடையவை ஓணமும் ஆதிரையும் திருமாலோடு தொடர்புடைய விண்மீன் திருவோணம். இந்நட்சத்திர நாளில் கொண்டாடிய விழா ஓண விழா. இவ்விழா ஆவணித் திங்களில் கொண்டாடப்பட்டது. கி.பி.ஒன்பதாம் நூற்றாண்டில் ஆண்ட தானு இரவியின் கல்வெட்டில் இதுபற்றிய குறிப்பு காணப்படுகிறது. கி.பி.12ஆம் நூற்றாண்டில் சைவ சமயம் புத்துயிர் பெற்றபோது ஆதிரை நாள், ஓணநாள் முதலானவைச் சிறப்பிடம் பெறுவதாயிற்று.

மதுரைக்காஞ்சியில் (590-91) ஓண விழாவினைப் பற்றிய குறிப்புக் காணப்பட்டாலும், பிற்கால இலக்கியங் களான பக்தி இலக்கியங்களிலேயே இவை மிகுதியாகக் காணப்படுவதால், இவ்விழா பிற்காலத்தில் மக்களிடம் பெரிதும் செல்வாக்குப் பெற்று விளங்கியது என்று கருதமுடிகின்றது. இதனை,

"திருவோணத் திருவிழவில்" (திவ்.பல்லாண்டு, 5:8)
"பன்னிரண்டு திருவோணம் இன்று ஏழுநாள்" (பெரியாழ்.3:3.9)

"ஓண விழாவில் ஒலியதிர, பேணி" (4ஆம் திருவந்தாதி. 41)
"ஐப்பசி ஓண விழாவும்" (தேவா.2:47.2)
"ஓணப்பிரானும் ஒளிர்மாமலர்மிசை உத்தமனும்" (தேவா.4:105.10)

என்ற காட்டுகள் மெய்ப்பிக்கின்றன

அவிட்டம்

பதினொன்றாம் பரிபாடலில் அவிட்டம் பற்றிய குறிப்பு உள்ளது. திருவேங்கட மலையின் உயர்வினைப் பற்றி எடுத்தியம்பும்போது அம்மலையின் உச்சியில் இருந்து மகளிர் ஊசலாடும்போது அவ்வூசல் அவிட்ட நட்சத்திரத்தைத் தொட்டுத் தொட்டுச் செல்கின்றது என்று நயம்பட எடுத்தியம்பப்பட்டுள்ளது. இச்செய்தியிலிருந்து வேங்கட மலையின் மிக அண்மையில் அவிட்ட நட்சத்திரம் காணப்படுகிறது என்ற குறிப்பு கிடைக்கிறது.

"நாலிலிட்ட பொன்னூசல் ஒண்ணுதலார் உந்துதொறும்
மேலவிட்ட தொட்டிழியும் வேங்கடமே" (திருவேங்.26)

திருமூலர் புரட்டாசி மாதம், அவிட்ட நட்சத்திரத்தில் பிறந்தார் என்பதனை,

"செய்யவே யின்னமொரு மார்க்கம் பாரு
செம்பவள கனிவா யாதுய்ய பாவா
உய்யவே திருமூல ரென்ற சித்து
உலகமதில் தான்பிறந்த தேதி வண்ணம்
பையலே புரட்டாசி திங்க ளப்பா
பாலகனார் வந்துதுதித்த மாத மாகும்
வெய்யவே அவிட்டமென்றே மூன்றாங் கால்தான்
மேதினியில் வந்துதித்த சித்து மாச்சே"
(போகர் சப்த காண்டம், 952-VI)

என்ற பாடல் வழி அறிய முடிகின்றது. ஆவூர் மூலங்கிழார், ஐயூர் மூலங்கிழார், மாமூலனார், மூலங்கீரனார் முதலிய சங்கப் புலவர்கள் நாளாற் பெயர் பெற்றிருத்தல் போலத் திருமூலரும் மூலநட்சத்திரத்தில் பிறந்தவர் என்று கூறுவார் கருத்து இப்பாடலினின்று முரண்படுகிறது. ஒருக்கால் திருமூலர் மூலநட்சத்திரத்தில் முத்தி பெற்றிருக்கலாம்.

தனிப்பாடல் திரட்டு,

> "அவிட்டத்துக் கீரைந்தொன் றானானுனைத்தப்
> பவிட்டத் தினாலே பலகால் - தவிட்டை
> விழுங்குகின்ற செங்கோழி முட்டைக்குநேரா
> எழுந்தாய் செழுந்திங்க ளே" (103)

என்ற பாடலில் அவிட்டத்துக்குப் பதினொன்றாவது உருவாகிய திருவாதிரை நட்சத்திரத்திற்குரிய சிவபெருமானைக் குறிக்கிறது. இதில் அவிட்டம், திருவாதிரை பற்றிய குறிப்பு வருகின்றது.

**சதயம்**

சோதிடத்தில் நட்சத்திரங்கள் ஒவ்வொன்றிற்குமெனத் தனித்தனி 'வடிவம்' இருப்பது போலவே, தனித்தனி தெய்வமும் உண்டு. சதயத்தின் கடவுள் வருணன் என்பதனைச் 'சதைய மீன் கடவுளுக்குஞ் சசி குலத்து நல்லிதையென' (வில்.பா.*1:1.72*) என்ற அடி காட்டுகிறது. ஞானசரநூல் சாஸ்திரம் 27 நட்சத்திரங்களைப் பற்றிய செய்திகளைச் சுட்டும்போது சதய நட்சத்திரத்தினையும் சுட்டுவதனை, 'சிறந்த ரோகணி சதயம் உத்திரட்டாதி' (25) என்ற அடி காட்டுகின்றது.

**உத்திரட்டாதி**

சூரியனின் மகன் எனப்படும் சனியின் ஆதிக்கத்திற்குட்பட்ட இவ்வுத்திரட்டாதியில் பிறந்தவர் பண்பாளராக விளங்குவார் என்ற கருத்து மக்களிடையே நிலவுகிறது. இந்நம்பிக்கை இலக்கியங்களிலும் காணப்படுவதை,

> "ஊனத்தில் சிறந்த கீர்த்தி,
> உத்திரட்டாதியானே" (*சீவக*.1:358)

என்ற வரிகள் மூலம் அறிய முடிகிறது. உத்திரட்டாதி மீன இராசியிலுள்ள மூன்று நட்சத்திரங்களுள் ஒன்றாகும். "மீனத்திடை நாள்; கிழமை வெள்ளி சயை பக்கம்' (சீவக. 590) என்பது, பூரட்டாதியின் நாலாங்காலும், உத்திரட்டாதியும் இரேவதியும் மீனராசியாதலால், உத்திரட்டாதி நடு நட்சத்திரம் ஆகும். ஆதலின் மீனத்திடை நாள் என்பது உத்திரட்டாதி நட்சத்திரத்தைக் குறிக்கின்றது.

## இரேவதி

சந்திரனின் மகன் எனப்படும் புதனின் ஆதிக்கத்தின் கீழ் அடங்கும் இவ்விரேவதி நட்சத்திரத்தில் பிறத்தல் சிறப்புடையது என்று சோதிடர் கூறுவர். இது தூய்மையான நட்சத்திரம் என்று கருதப்படுகிறது. இக்காரணம் பற்றியும் அந்நட்சத்திரத்தின் பெயரினை அந்நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கும், பிறவாதவர்களுக்கும் பெயராகச் சூட்டியிருக்கக்கூடும்.

''இரேவதி வியாழ ஓரை
இருஞ்சிலை முளைப்ப ஏறி'' (சீவக.3:14)

சம்பந்தரின் தேவாரத்தில் மயிலாப்பூர் திருக் கோயிலினைப் பற்றி 'மட்டு இட்ட புன்னை' (2:47) எனத் தொடங்கும் பூம்பாவைப் பதிகத்தில் கார்த்திகை, திருவோணம், திருவாதிரை, பூசம், உத்தரம் ஆகிய நட்சத்திரங்களைப் பற்றிய குறிப்பு வருகின்றது.

இந்நாழிகைக் கணக்கர் ஒவ்வொரு நொடியையும் கணக்கிட்டு ஆராய்பவர்களாகப் பணிபுரியினும், கணித நூலறிவு மிக்க அவர்கள் அனைவரும் அடிப்படையில் சோதிட அறிவைப் பெற்ற சோதிடராக விளங்கினர் என்று கூறுதற்கியலாது.

## நிமித்தகர்

போர் நிகழ்ச்சிகளின்போதும், பிற முயற்சிகளில் ஈடுபடும்போதும் பல்வகையான நிமித்தங்கள் பார்த்தல் வழக்கம். இவற்றுள் நாள் நிமித்தம் பார்த்தலுக்கு வானியலறிவும், புள் நிமித்தம் போன்ற பிற நிமித்தங்கள் பார்த்தலுக்கு உள்ளுணர்வு, பகுத்தறிவு, அனுபவ அறிவு போன்றனவும் துணை புரிகின்றன.

நாள் நிமித்தம் பார்த்த சோதிடர் பல்துறை அறிவுமிக்கவராய் விளங்கியமையால் அவர்களைக் கொண்டே புள் நிமித்தம் போன்ற நிமித்தங்கள் அரசரால் பார்க்கப்பட்டிருக்கின்றது. இச்சோதிடர் நிமித்தங்களையும் அறிந்துணர்த்தும் திறம் பெற்றிருந்ததால், 'நிமித்தி', 'நிமித்தகர்', 'நிமித்தக்காரர்' என்றும் அழைக்கப்பட்டனர்.

''மந்திரத் தரசன் வல்லே நிமித்தகன்'' (சீவக.539:1)
''நிமித்திக னென்னும் அமைச்சன்'' (மேலது.204)
''நிகழ்வதை யுரைக்கு நிமித்திக்கு'' (பெருங்.1:36.120)
''சேனையிலுள்ள நிமித்தகன்'' (மேலது.3:22:185)

என்ற அடிகள் சோதிடர், நிமித்திகர் என்றும் கூறப்பட்டதைத் தெரிவுபடுத்துகிறது.

நச்சினார்க்கினியர் சோதிடரைக் கணக்கர் என்ற கருத்தில் குறிப்பிடுவதைப் போலவே, நிமித்திகர் என்பதற்குப் பொருள் கூறும்போது பிங்கல நிகண்டு, **'அரசர்க் குறுதிச் சுற்றத்தார் ஐவருள் வருவது கூறவல்ல சோதிடர்'** என்கின்றது. சோதிடம் என்பதற்குப் பொருள் கூறும் மதுரைத் தமிழ்ப் பேரகராதி (ப.1038) போன்றன *'நிமித்தம்'* என்ற பொருளையும் கூறுகின்றன.

தசரதன் நிமித்தங்களின் நன்மை, தீமைகளை அறிபவனாகிய ஓர் ஆராய்ச்சியாளனை அழைத்துத் தான் கண்ட நிமித்தங்களின் விளைவு நல்லதா கெட்டதா என வினவ அவன் இப்பொழுது தீங்கு நிகழும். அஃது முடிவில் இனிதாக முடியும் என்றான். இவ்விடங்களில் சுட்டப்படும் நிமித்திகன் சோதிடம் அறிந்த கணியாகவே இருக்கின்றான். இதனை,

"புள்ளின் குறி கொள்வான்
இன்றேவரு மிடையூறது
நன்றாய்விடு மென்றான்" (கம்ப.23:6)

என்ற அடிகள் காட்டுகின்றது.

எனவே, சங்க காலத்தில் சோதிடர் *'நிமித்திகர்'*, *'விரிச்சிகர்'* என்றழைக்கப்பட்டமைக்கான சான்றுகள் கிட்டவில்லையெனினும் அக்காலத்தில், சோதிடர் நிமித்தம், விரிச்சி போன்றவற்றில் வல்லவராக இருந்திருக்கின்றனர். சகுன நிலையில் தோன்றிப் பின்னர் கணித அடிப்படையில் அமைந்த வானியலறிவுடன் சோதிடம் வளர்ந்ததால் சோதிடர், சகுனம், நிமித்தம் போன்றவற்றில் பயிற்சியுடையவராகவே இருத்தல் வேண்டும்.

**அந்தணர்**

சோதிடரை அந்தணர் என்று கூறுகின்ற வழக்கும் காணப்படுகின்றது. காப்பியக் காலத்திலும், அதற்குப் பின்னரும் சோதிடத் தொழிலை மேற்கொண்டவருள் பெரும்பான்மையோர் அந்தணராகவே திகழ்ந்த காரணத்தால் இத்தகைய வழக்கு தோன்றியிருத்தல் வேண்டும். ஆயினும்

அந்தணர் அனைவரும் சோதிட அறிவைப் பெற்றவர் என்றோ, சோதிடத் தொழிலை மேற்கொண்டு ஒழுகினர் என்றோ கூறுதற்கியலாது.

நல்ல நாள் பார்க்கும் பொறுப்பு அந்தணருடையது என்பதை,

''அந்தணர்வாய்ச் சொற்கேட்டுச் செய்க அவர் வாய்ச்சொல்''
(ஆசா.93)

என்ற அடி உணர்த்துகின்றது. அந்தணர், வள்ளுவர் போன்ற குறிப்பிட்ட பிரிவினரிடமிருந்து சோதிடம் இன்று கல்விநிலை வளர்ச்சியால் சாதியடிப்படையின்றி அனைவருக்கும் உரிய தொழிலாக வளர்ச்சி மாற்றம் பெற்றதற்குக் காரணம் சோதிடத்திலுள்ள கணக்கிடும் முறையே. அம்முறை ஒரு நம்பகத்தன்மையை ஏற்படுத்துவதனால் படித்தவர்களும் இதில் ஈடுபடுகின்றனர்.

**காலக் கணிதர்**

சோதிடர் காலக் கணிதர் என்ற சொல்லாலும் குறிப்பிடப்படுகின்றனர். கணியர் காலத்தைக் கணித்தறியும் தகுதி பெற்றிருத்தலால் காலக் கணிதர் என்றழைக்கப் பட்டமையை,

''ஆயுள் வேதருங் காலக் கணிதரும்'' (சிலப்.5:44)
''மாலைக் காரருங் காலக் கணிதரும்'' (மணி.28:40)

என்ற அடிகள் காட்டுகின்றன. இங்ஙனம் காலத்தை உரைக்கக்கூடிய சோதிடரைக் 'காலமுணர் பழையார்' (68:4205) எனப் பெரியபுராணம் சுட்டுகின்றது.

இச்சோதிடர் கணித்தலை அடிப்படையாகக் கொண்டு தம்முடைய தொழிலை மேற்கொண்டதால் 'கணித நூலிற் பழகினார்' (கலிங்.280:49), 'கணித நூலுணர்ந்த மாந்தர்' (கம்ப.1661) என்ற சொற்களாலும் சிறப்பிக்கப் பெற்றனர்.

**குறிக்கோளாளர்**

சோதிடர்தம் கொள்கைமீது கொண்டுள்ள ஈடுபாட்டினைக் குறிக்கும் வகையில், குறிக்கோளாளன்

என்று குறிப்பிடப்படுவதைப் பெருங்கதைக் காப்பியத்தின் வாயிலாக அறியமுடிகிறது.

''குறிகோ ளாள னறிவிகழ்ந்த தெள்ளி
எல்லை ஞாயி றிரவெழு மெனினும்
பல்கதிர்த் திங்கள் பகல்படு மெனினுநின்
சொல்வரைத் தாயிற் சொல்லுவை நீயென'' (1:36.178-181).

**கோளர்**

சோதிடரைக் 'கோளர்' என்று கூறுகின்ற வழக்கும் காணப்படுகிறது. கனவிலும், மன்னர், அமைச்சர் முதலிய பதினைவருடன் பகைகொள்ளக் கூடாது என்று கூறும் அறப்பளீசுர சதகம் சோதிடரைக் 'கோளர்' என்று கூறுவதை,

''மன்னவர், அமைச்சர், துர்ச்சனர், கோளர் தூதரொடு
நன்நெறி அறிந்தபேர் பகைசெய்தி டார்கள்'' (92)

என்ற அடிகள் காட்டுகின்றன. கோள்களைப் பற்றி அறிந்து, அறிவிக்கும் திறம் படைத்தவர்களாய் சோதிடர் இருத்தலால் இங்ஙனம் சுட்டப்பட்டிருக்கின்றனர். சோதிடர் கூறுகின்ற சொற்கள் பலித்துவிடும் என்ற நம்பிக்கை நிலவிவருதலால் அவரிடம் பகைத்து வசைச் சொற்களைப் பெற்றுவிடக் கூடாது என்ற கருத்து மக்களிடம் தோன்றியிருத்தல் கூடும். சோதிடர் மேற்கூறிய சொற்களால் மட்டுமன்றித் 'தொன்னூலாளன்', 'புலவர், பேரியலாளன், விரிச்சிகன்' என்பன போன்ற சொற்களாலும் குறிக்கப் பெற்றுள்ளனர்.

''சோதி நூலறிஞருந் துணுக்க மெய்துவார்' (சேதுபு.கந்தமா.17)

என்பது சோதிடர், சோதி நூலறிஞர் எனச் சுட்டப்பட்ட மையைக் காட்டுகின்றது.

''தொன்னூலாளன் தோன்றக் கூற'' (பெருங்.1:47.15)

என்ற சொல்லாலும் சோதிடர் சுட்டப்படுகிறார்.

''நூலறி புலவர்'' (நெடு.76)
''மாண்ட சோதிட வாய்மைப் புலவரை'' (கம்ப.4097)

என்பனவற்றில் சோதிடர், புலவர் என்று சுட்டப்படுகிறார். இச்சொல் புறப்பொருள் வெண்பா மாலையிலும் (வெட்சி.14) இதே பொருளில் வழங்கப்படுகிறது.

பெருங்கதை 'பேரிய லாளர்' என்ற சொல்லாலும் பெருங்கணியைக் குறிப்பிடுகின்றது.

"ஒருயிர்க் கிழமை யோரை யளக்கும்
பேரிய லாளர் பிழைப்பிலர் நோக்கி
வழுவில் செந்தீப் பழுதில வேட்கும்
பொழுதுமற் றிதுவெனப் புரையோர்க் குரைப்ப" (2:3.5-8).

விரிச்சி என்னும் நற்சொல் கேட்டலில் திறம் பெற்றிருந்த சோதிடர் விரிச்சிகர் என்றழைக்கப்பட்டதை,

"பசுங்கதிர்க் கடவுள் யோகம் பழிப்புற நுனித்து வல்லான்
விசும்பிவர் கடவு ளொப்பான் விரிச்சிக வல்லான் அறிந்து கூற"
(சீவக.601.1-2)

என்ற அடிகள் காட்டுகின்றன.

நிமித்தம், விரிச்சி போன்றவற்றில் மட்டுமல்லாது சோதிடர் கூவற் கலையிலும், மனைநூல் கலையிலும், மந்திரத் தொழிலிலும் தேர்ச்சி பெற்றிருந்தனர். மனை நூல்களிலும், கூவநூல்களிலும் சோதிடம் முக்கியமான தொரு இடத்தைப் பெற்றிருப்பதனால் இதனை உணர முடிகிறது.

**கணியின் சிறப்பு**

வரலாற்றில் அரசர்கள் தமது அரசவையில் சோதிடருக்கு ஒரு முக்கியமான இடம் அளித்திருக்கின்றனர். கிடைக்கும் குறிப்புகளைக் கொண்டு பார்க்கும்போது அரசவைச் சோதிடரைப் பற்றிய குறிப்புகளே மிகுதியாகக் கிடைக்கிறது. திறமை வாய்ந்த சோதிடரைக் கொண்டு நல்லன, தீயனவற்றை அறிந்து அரசர்கள் வல்லமையுடன் செயல்பட்டிருக்கின்றனர். அரசவைச் சோதிடரைப் போன்றே ஆலயங்களுக்கென்று, தனியாகச் சோதிடர் இருந்தனர். அவர்கள் ஆலய நிகழ்வுகளை மட்டுமே கவனிப்பர். அவர்களுக்கென்று மானியங்கள், நிவந்தங்கள் உண்டு. ஆண்டுதோறும், அரசவையிலும் கோயில்களிலும் பஞ்சாங்கம் படிப்பது ஒரு பழக்கமாக அந்நாளில் இருந்துள்ளது.

முற்காலத்தில் அட்சரேகை, தீர்க்கரேகை முதலிய வற்றைச் சூரியனது நிழலைக் கொண்டு சோதிடரே கணித்தனர் என்பது 'ஜாதக சாகரம்' எனும் நூலினால் அறியலாகும் செய்திகளாகும். இக்காலத்தில் முக்கியமான ஊர்களுக்குக் கணிக்கப்பட்ட அட்சரேகை, தீர்க்கரேகை நூல்களைப் பூலோகவியலார் வெளியிட்டிருப்பதால் பழங்காலத்திய கணித விதிகள் வழக்கொழிந்து போயின. ஊர்களின் அட்சரேகை, தீர்க்கரேகை, காலநிர்ணயம் முதலியவற்றை அறிந்திருத்தல், உத்தம குணம், பொறுமை, மனுநீதி, நூலறிவு, பெரியோர்க்கு இணக்கம் முதலியன சோதிடனுக்குரிய தகுதிகள் எனச் 'சாதக அலங்காரம்' கூறுகிறது.

இலக்கியங்களில் பலவிடங்களில் சோதிடர் சுட்டப்பெறும் நிலையில் அவர்களது நுண்ணறிவாற்றலின் சிறப்பு முதலியன கூறப்படுகிறது.

வானத்தில் வாழும் வாழ்க்கையுடையவராகிய சோதிடத் தேவர் ஐந்து வகைப்படுவர். இவர் மந்திரமென்னும் பெரிய மலையை வலமுறையாகச் சுற்றித் திரிபவரும் தத்தமிடத்தே நிலைத்து நின்று ஒளிசிந்தி விளங்கும் ஆற்றலுடையவரும் என இருவகைப்படுவர் என்று கூறும் ஒரு பாடல் காணப்படுகிறது.

''அந்தர வாழ்க்கையர் சோதிடர் தாங்களு மைவகையர்
சந்திர சூரியர் கோளவர் நாளவ ரல்லவராய்
மந்தர மாமலை தன்னை வலமுறை சூழ்பவருஞ்
சிந்துபு நின்றுசெல் லாதே விளங்குநீ திறல்வருமே'' (நீல.1:89)

எனவே சோதிடரின் ஆற்றலும், அவர்கள் தேவர்களுக்கு ஒப்பாக மதிக்கப்பட்டமையும் தெரிகிறது. உறுதிப்பொருள் நான்கினையும், உணர்ந்து கலைத்துறையிற் பயின்று முதிர்ந்து, வானத்தின் அகன்ற இடத்தின்கண் பொருந்துதலை யுடையவாய் அழகுபெற மிக்கு விளங்காநின்ற மேம் பாடுடைய நோக்கத்தின் கண்ணவாய்க் கணிதக் கூற்றிற் பட்ட நாளும் கோளுமாகிய பொருள்களை ஆராய்ந்து அவற்றிற்குரிய நூல்களையும் கற்றுத் தெரிந்து அவற்றின் இயக்கத்தாலே நிகழும் நன்மை தீமைகளை உணர்ந்து, தீயவற்றை ஒழித்து, வேந்தனுக்குரிய ஒழுக்கத்தோடே கருதிய

பொருள்கள் கவிதை முறைமையாலே நன்மை தரும் காலத்தைப் புணர்க்கும் இயல்பினையுடைய மெய்க் காட்சியாளன் சோதிடன் என்பதை,

"எண்டரும் பெருங்கலை யொண்டுறை போகிக்
கண்ணகன் புணர்ப்பிற் கவின்பெற நந்தி
விண்ணகம் விளங்கு மேதகு நாட்டத்த
நாற்பொரு ளுனித்துத் தீப்பொரு ளொரீஇ
அலகை வேந்தற் குலகங் கொண்ட
ஒழுக்க நுனித்த வழுக்கா மரபின்
புணர்ப்பியல் காட்சியன் புரையோர் புகழ
நிழற்பெருங் குடையு நேரா சனமும்
செருப்போடு புகுதலுஞ் சேனை யெழுச்சியும்" (பெருங்.2:2.10-24)

என்ற பாடல் உணர்த்துகிறது. நீலகேசி கணியின் சிறப்பை,

"இக்கோட்க ளெழனோக்கி
யிவையிவையே யாமென்றா
லக்கோட்க ளெழனோக்கி
யவையவையாக் கண்டிருந்
தெக்கோளு மில்லென்பா
யாண்டெண்ணி யேற்றுதியான்
மெய்க்கோளா லென்றியான்
மிகைதெருட்டுத் திறங்காணேன்" (298)

என்ற பாடலில் வெளிப்படுகின்றது. இப்பாடலில் கணி மாக்கள் முன்னரே இந்தக் கோள்கள் தோன்றுதலை ஆராய்ந்து பார்த்து, இவற்றின் தோற்றத்தாலே இன்னின்ன பயன்கள் உண்டாகும் என்று கூறினால் அந்தக் கோள்கள் அவ்வாறே தோன்றும். அவற்றின் தோற்றத்தாலே நிகழும் பயனும் அவர்கள் கூறிய விதமாகவே இருக்கும் என்று சோதிடரின் திறமை காட்டப்படுகின்றது.

புறப்பொருள் வெண்பாமாலையில் 'கணிவன் முல்லை' என்னும் துறை சோதிடரின் பெருமையைக் கூறுகின்றது. நிச்சயித்துப் பலவுமறியும் பழைய கேள்வி ஞானத் தினையுடைய சோதிடநூல் வல்லவனது கீர்த்தியைச் சொல்வது என்பதை,

"துணிபுணருந் தொல்கேள்விக்
கணிவனது புகழ்கிளந்தன்று"

என்ற பாடலடி காட்டுகின்றது.

தப்பாத தன் உடம்பு போலே பரிகரிக்க, கடவ நூல்களைப் பலகாலுங் கற்று துன்பமின்றி உண்மை யுணரத் தப்பின்றிச் சுவர்க்கம் இப்புவி உண்டாக்கும் நிகழ்ச்சியுரை தப்பின்றி யெல்லாம் கருதிச் சொல்லுமவன் சோதிடவன் என்பதை,

"புரிவின்றி யாக்கைபோற் போற்றுவ போற்றிப்
பரிவின்றிப் பட்டாங் கறியத் - திரிவின்றி
விண்ணில் வுலகம் விளைக்கு விளைவெல்லாம்
கண்ணி யுரைப்பான் கணி"[28]

என்ற பாடல் கூறுகின்றது.

இங்ஙனம் அரசவையில் சிறப்பிடம் பெற்றுச் சோதிடர் விளங்கியமையால் அரசரால் அவ்வப்போது சிறப்பிக்கப் பெற்றனர். கணியின் பெருமையையும் அவன் யானையும் சிவிகையும் பரிசாகப் பெற்றமையையும்,

"ஆழி மால்கட லகன்பெருங் கேள்விக டுறைபோய்
ஊழி னன்றியு முறுவினை யோரையின் முடிப்பான்
சூழி யானையுந் துளங்குபொற் சிவிகையு முடையான்
வேழ வேந்தற்கு விழுப்பெருங் கணிவிரித் துரைத்தான்" (சீவக.2386)

என்ற பாடல் காட்டுகின்றது. கரையையுடைய பெரிய கடல் போன்ற நூல்களை முற்றக் கற்று யானையும், சிவிகையும் பெற்றானாகிய கணி, விதியால் தானே முடிதலே யன்றி இந்நல்வினையை ஓரையானும் முடித்தற்குப் பொருந்திய நாள்களை அரசனுக்கு விரித்துரைத்தான் என்பது இதன் பொருள். மேலும், இந்நூலில் சோதிடருக்கு இறையிலி நிலம் வழங்கப்பட்ட செய்தியும் இடம் பெற்றிருக்கின்றது.

"கடவுள ரிடனுங் காசில் கணிபெறு நிலனுங் காமர்
தடவளர் முழங்குஞ் செந்தீ நான்மறை யாளர் தங்கள்
இடவிய நிலத்தோ டெல்லா மிழந்தவர்க் கிரட்டியாக
உடனவை விடுமி னென்றா னொளிநிலா வுமிழும் பூணான்" (373)

சோதிடர் பரிசாகப் பொற்பூவைப் பெற்றமையை,

"நிகழ்வதை யுரைக்கு நிமித்திக் கஞரறப்
புகழ்வினை யாகிப் பூக்கொண் டெறிந்தபின்" (பெருங்.1:36.192-93)

என்ற அடிகள் காட்டுகின்றன.

---

28. தொல். புறத்.16, இளம்.உரை. மேற்கோள்.ப.114

சங்கப் புலவர் தொட்டுப் பின்வந்தோர் பலரும் வானியலறிவு, சோதிட ஞானம் உடையவர்களாய் இருத்தலை இலக்கியங்களில் காணமுடிகிறது. திருமழிசையாழ்வார் சோதிடராகவும் இருந்திருத்தல் வேண்டும் என்ற கருத்தும் உண்டு.

இராகவையங்கார், திருமழிசையாழ்வார் சோதிட நூலையும் இயற்றி இருக்கின்றார் என்று கூறுகின்றார். அதற்கு அவர் கூறும் சான்றாவது,

"தாரா கணப்பேர் விரித்து ரைத்த வெந்நாகத் துன்னை"
(திரு.ச.விருத்தம், செய்.63)

என்ற அடியை,

"தாரா கணப்பேர் விரித்துரைத்த என் ஆகத் துன்னை"

எனத் திருத்தி ஆழ்வார் செய்த தாராகண (அதாவது நட்சத்திரங்கள் பற்றிய சோதிட நூல் ஒன்றும் இருந்தது என்பதாகும். இக்கருத்தினை ஏற்கும் எஸ். குலசேகரன் திருமழிசையாழ்வாருக்கு வேத சாத்திர ஞானம் ஆழமாக இருந்ததை ஒரு வரலாற்றுக் கதையின் வழி எடுத்துக்காட்டி இந்த வரலாற்றில் இருந்து வேதங்களில் ஒன்றாகிய சோதிடத்திலும் ஆழ்வாருக்கு நல்ல பயிற்சி இருக்கக் கூடும்[29] என நிறுவுகிறார். மகாகவி காளிதாசர் சிறந்த சோதிடராகவும் இருந்திருக்கிறார். இயற்கையில் சோதிட ஞானம் தன்னகத்தே கொண்டு விளங்க கோள்நிலை அமைப்பும் காரணமா கின்றன. சிறப்புமிகு சோதிடர் உருவாக வேண்டுமானால் அவர்களது கோள்நிலை எங்ஙனம் அமைய வேண்டும் எனச் சோதிட நூல்கள் கூறுகின்றன.

(1) முதல் நிலைத் தகுதி: சந்திரன், சுக்கிரன், சனி ஆகிய கலைஞானம் கொண்ட கோள்களின் ஆட்சி வீடுகளான கடகம், துலாம், மகரம் ஆகிய சர இலக்னங்கள் அமைதல்.

(2) இரண்டாம் நிலைத் தகுதி: மேடம், இடபம், சிம்மம், விருச்சிகம், கும்பம் ஆகியவற்றுள் ஒன்று இலக்னமாக அமைதல்.

(3) சந்திர கேந்திரத்தில் புதன் இருத்தல்; இரண்டில் செவ்வாயின் ஆதிபத்தியம் இருத்தல்.

---

29. வைணவத்தின் ஆழ்வார்கள் கால நிலை, பக்.87, 88.

(4) புதன் ஆட்சி, உச்சம் பெற்று அல்லது இலக்னத்திற்குக் கேந்திரத்திலோ, திரிகோணத்திலோ இருத்தல்; புதன் நீச்ச பங்க ராஜயோகம் பெற்றிருத்தல்.

(5) இரண்டில் சூரியன் அல்லது செவ்வாய் இருந்து நற்கோளின் பார்வை அல்லது சேர்க்கை இருத்தல்.

(6) பத்தாமிடத்தில் குரு, இராகு, கேது இவற்றிலொன்று இருத்தல் அல்லது பார்த்தல்.

(7) 3,12க்கு உடையவர் ஒருவரோ அல்லது இருவரோ ஆகி அவ்விருவரும் இலக்னத்திற்கு ஒன்று, ஐந்து, ஒன்பதாமிடங்களில் இருத்தல்.

(8) கேந்திர, திரிகோணத்தில் புதன் இருந்து, இலக்னத்திற்கு இரண்டாம் அதிபதி உச்சம் பெற்றிருந் தாலும், உபயராசியில் சுக்கிரன் இருந்தாலும், மூன்றாம் வீட்டில் நன்மை தரும் கோள் இருந்தாலும் சாதகர் முழுத்தகுதியுடைய சோதிடர் ஆவார்.

இன்றும் வட மாநிலங்களில் சோதிடர்களுக்கு மதிப்பு மிகுதி. தமிழ்நாட்டிலுள்ள சோதிடர்களைக் காட்டிலும் கேரளச் சோதிடர் வானியலறிவு, ஆழ்ந்த அறிவாற்றல் ஆகியன உடையவர்களாய் உள்ளனர்.

தொல்காப்பியம் சோதிடரை அறிவன் என்கிறது. கணி என்ற சொல்லாட்சி, சங்க காலத்திலேயே இருந்திருக்கின்றது. இருப்பினும் சோதிடர் கணி என்ற சொல்லால் பெருவழக்காய் அழைக்கப்பட்டமை, சிலப்பதிகாரம் முதலாகப் பிற காப்பியங்களிலும் தொடர்கிறது. சோதிடர் என்ற சொல்லாட்சியும் பின்வரும் காப்பியங்களில் மிகுதியும் சுட்டப்பெறுகின்றது. நாழிகைக் கணக்கர், நிமித்திகன், விருச்சிகன் என்ற பெயர்களைச் சோதிடர் அத்தொழில்களையும் சிறப்புறச் செய்திருப்பதனால் பெற்று இருக்கின்றனர். கணியின் சிறப்பை வெளிக்காட்டும் முகத்தான் வேறு பல சொற்களால் சோதிடர் இலக்கியங்களில் குறிக்கப் பெற்றிருக்கின்றனர்.

★ ★ ★

## இயல் நான்கு

# இலக்கியத்தில் சாதகமும் பலனும்

தமிழ்நாடு பல கலைகளையும், நுண்கலைகளையும் தன்னகத்தே கொண்டு இலங்குகிறது. அத்தகைய கலைகளுள் ஒன்று சோதிடம். இச்சோதிடம் சங்ககாலந் தொட்டே தமிழகத்தில் வழங்கி வருவதைத் தமிழ் இலக்கியங்கள் எடுத்தியம்புகின்றன.

பிறந்த குழந்தைக்குச் சாதகம் எழுதும் வழக்கம் பண்டைக்காலம் தொட்டு இன்று வரை நடைமுறையில் இடம் பெற்றுள்ளது. ஆண், பெண் இருவருக்கும் சாதகம் இருப்பின் மட்டுமே திருமண முயற்சியை மேற்கொள்ளும் நிலையும் பரவலாகக் காணப்படுகின்றது. மக்களிடையே இச்சாதகம் வலுவாக ஆட்சி பெற்று விளங்குதலால் இலக்கியங்களிலும் சாதகம் எழுதுதல், பலனறிதல் என்ற நிலைகள் காணப்படுகின்றன. சோதிடத்தில் சாதகப் பலன் அமையும் வகைக்கு முன்வினை காரணமாக்கப்படுகிறது. எனவே இலக்கியங்களில் இடம் பெற்றுள்ள இத்தகைய செய்திகளுள் சில இவண் இடம் பெற்றுள்ளன.

**சாதகம்**

குழந்தை பிறந்தபோது வானமண்டலத்தில் அந்தக் குறிப்பிட்ட நேரத்தில் சந்திரன் இருக்கும் அடிப்படையில் உதய இலக்னத்தை அமைத்துக் கொண்டு, அதே குறிப்பிட்ட நேரத்தில் மற்ற கோள்களின் பெயர்ச்சி எவ்வாறு உள்ளது என்பதை அறிந்து இராசி, நவாம்சம், பாதசாரங்களின் உதவியால் அந்தக் குழந்தையின் ஆயுள்நிலை, தாய், தந்தை, குடும்பம் மற்றும் அக்குழந்தையின் எதிர்காலம், எப்படி அமையும் என்பதை அறியப் பயன்படும் வழிமுறைக்குச் சாதகம் என்று பெயர். எனவே வாழ்நாள் முழுவதற்கும் வரையப்படும் சோதிடத்துக்கே சாதகம் என்று பெயர்.

சாதகமாவது ஒருவர் நடந்தொழுக வேண்டிய ஒழுங்கைக் காண்பிக்கும் பாடம் என்றும் கூறலாம். பின்னாளில் இச்சொல் பிறந்த நேரத்தில் காணப்படும் கோள்களின் நிலையைக் கூறும் 'குறிப்பு' என்று பொருள் கொண்டதாயிற்று. எனவே சாதகம் என்பதற்குப் பிறந்த காலத்தில் கோள்களின் அமைப்பைக் கூறும் குறிப்பு என்பதே பொருள். சாதகத்திற்கு மற்றுமொரு பெயர் 'நாள்ஓலை' (யாழ்.அக.) என்பதாகும். சாதகம் என்ற சொல்லிற்கு வழிமுறை என்றும் பொருள் கொள்ளலாம்.

எந்தச் சாதகத்திலும் பிறப்புக் காலத்திய கோள் நிலைகள் மாறாமல் ஆயுள் வரையில் அப்படியே இருக்கும். இந்து சோதிட முறைப்படி ஒருவரின் சாதகம் இரண்டு வழிகளில் கணிக்கப்படுகிறது. ஒன்று, தமிழ் மொழியிலுள்ள 'பஞ்சாங்கத்தின் உதவியால் கணிப்பது. மற்றொன்று, ஆங்கில மொழியிலுள்ள 'டேபிள்ஸ் ஆஃப் அஸெண்டண்டு' என்ற நூலையும் எபிமெரிஸ் (பிறந்த ஆண்டிற்கு) என்ற நூலையும் பயன்படுத்திக் கணிப்பது.

வடமொழியில் சாதகக் குறிப்பு எழுதும் முன்னர், 'ஜனனீ ஜன்ம செளக்யானம் வர்தனி குலஸம்பதாம் பதவீ பூர்வ புண்யாணாம் லிக்யதே ஜன்ம பத்ரிகா' என்ற சுலோகத்தை முதலில் எழுதிய பின்னரே சாதகக் குறிப்பை எழுதுவது வழக்கமாக உள்ளது. இதன் பொருள்: பெற்றவள், பிறப்பு, சுகம், குலம், செல்வம், பதவி முன் நல்வினை முதலியவற்றினை வளரச் செய்தலின் பொருட்டுச் சாதகக் குறிப்பு எழுதப்படுகிறது என்பதே. சாதகமானது இந்தப் பிறவியில் ஏற்படும் சுகங்களைக் கொடுப்பதாயும் குலப் பரம்பரையை விருத்தி செய்வதாயும், முற்பிறவியில் செய்த புண்ணியங்களை அடிப்படையாகக் கொண்டதாகவும் விளங்குகிறது. தமிழ்நாட்டுச் சோதிடரும் இச்சுலோகத்தை எழுதுகின்ற வழக்கினை மேற்கொண்டுள்ளனர்.

பாட்டுடைத் தலைவனின் பிறந்த நாளையொட்டி அமைந்த நாண்மீன், கோள்கள் ஆகியவற்றை நிலைக் களனாகக் கொண்டு எதிர்காலத்தில் அவன் வாழ்வில் நிகழவிருக்கும் நன்மையும் தீமையும் கணிக்கப்படுதல் உண்டு என்பதை;

''அச்சமும் உவகையும் எச்சமின்றி
நாளும் புள்ளும் பிறவற்றின் நிமித்தமும்
காலம் கண்ணிய ஓம்படை உளப்பட'' (தொல்.புற.30)

என்ற நூற்பா சுட்டுகின்றது.

அச்சமாவது தீமை வரும் என்று அஞ்சுதல், உவகையாவது நன்மை வரும் என்று மகிழ்தல்; நாளாவது நன்னாள் தீயநாள், காலம் கண்ணுதலாவது வருங்காலம் குறித்தல் என இளம்பூரணர் இப்பகுதிக்குச் சிறப்புற விளக்கம் அளித்துள்ளார். அதாவது, பாட்டுடைத் தலைவன் பரிசு வழங்கும் இயல்பினை உடையவன் என்பதால் அத் தலைவன் உயிர் வாழும் காலத்தைக் கருதிய பாதுகாவலாக இப்பகுதி அமைகிறது.

பிறந்த கிழமை, பிறந்த நாண்மீன், ஏனைக்கோள்கள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு, பாட்டுடைத் தலைவனுக்கு நன்மையும் தீமையும் கண்டறிதல் பற்றிய இக்குறிப்புக்களால் பாட்டுடைத் தலைவனுக்குச் சாதகம் கணித்துப் பார்க்கும் பழக்கம் பண்டைக் காலத்தில் நிலவியதை அறிய முடிகிறது. இதனை வலியுறுத்தும் வகையில் 'ஆடியல் அழல் குட்டத்து' எனத் தொடங்கும் (229) புறநானூற்றுப் பாடல் அமைந்துள்ளது.

உலகியல் வழக்கில் சாதகம் கணித்தலுக்கு முதன்மை வழங்கப்பட்டிருத்தல் போல, சிற்றிலக்கிய வகைகட்கு இலக்கணம் கூறும் இயல்பிலும், பாட்டியல் நூலாசிரியர்கள் சாதக இலக்கிய வகைக்கு இலக்கணம் கூறுவதை முதன்மையாகக் கருதியமை இவ்விலக்கியத்திற்கு வழங்கி யிருந்த சிறப்பை வெளிக்காட்டுகிறது.

'மேதகு சாதகம்' முதல் கையறுநிலை ஈறாகப் பன்னிரு பாட்டியல் இலக்கிய வகைகளைக் குறிப்பிடுகிறது. பிரபந்த தீபிகை என்ற பாட்டியலும், சாதகம் முதலாக இலக்கிய வகைகளை எண்ணியே இலக்கணம் கூறத் தொடங்குகின்றது. பின்வந்த பாட்டியல் நூல்கள் பிள்ளைத் தமிழை முதலாகக் கொண்டு இலக்கியங்களுக்கு இலக்கணம் வகுத்துள்ளன. பாட்டியல் நூல்களில் காலத்தால் முதன்மை பெற்று விளங்கும் பன்னிருபாட்டியலில்,

''போற்றிய சாதகம் சாற்றும் காலை
பற்றிய கலியுகத்து உற்ற ஆண்டில்
திருந்திய சகாத்தமும் ஆண்டுப் பொருந்திய
ஞாயிறு பக்கமும் மேய வாரமும்
இராசியும் மன்னுற மொழிதற்கு உரிய'' (16)

என்ற நூற்பாவில் சாதக இலக்கிய வகையின் இலக்கணம் கூறப்பட்டுள்ளது. 'மேதகு சாதகம்', 'போற்றிய சாதகம்' எனப் பாட்டியல் நூல்களில் வரும் அடைச்சிறப்புகளால் இந்த வகைப்பாட்டியலாரிடை நிலவிய சிறப்பினை அறிய முடிகிறது. பாட்டுடைத் தலைமகன் பிறந்த வேளையை ஒட்டி அமைந்த யுகம், சகாப்தம், ஆண்டு, ஞாயிறு, பக்கம், வாரம், இராசி முதலிய ஏழு நிலைகள் குறித்துக் கூறுவதாக இந்த இலக்கியவகை அமையப்பெறும் என்கிறது பன்னிரு பாட்டியல்.

சாதக இலக்கியத்தின் இலக்கணத்தை 'முத்துவீரியம்' வகுக்கும்போது,

''ஓரை திதிநிலை யோகம் நாண்மீன்நிலை
வாரங் கரண நிலைவரு கிரக
நிலைஏழு அவயவ நிலையையும் உணர்வுற்று
அவற்றை அமைத்து அவற்றால் தலைமகனுக்கு
அடைவன அறைதல் சாதகமென மொழிப'' (77)

என்ற நூற்பாவில் ஓரை, திதி, யோகம், நட்சத்திரம், வாரம், கரணம், கிரகம் எனவரும் ஏழு உறுப்புகளின் நிலையையும் கணித்து அவற்றின் அமைப்பால் தலைமகன் அடையவிருக்கும் பலன்களை உரைப்பது சாதகம் என்னும் இலக்கிய வகையின் இலக்கணம் என்று கூறியுள்ளது. பிரபந்த தீபிகை என்னும் பாட்டியல் நூல் சகாப்தம், ஆண்டு, தேதி, நட்சத்திரம், ஓரை, திங்கள், திசை ஆகிய இவற்றைக் கொண்டு சாதகரின் நன்மை, தீமைகளை அறிந்து சொல்வது சாதகம் என்னும் இலக்கிய வகை என்று கூறுவதை,

''அலகுறு சகாப்த மாண்டு
தேதியுடு வோரையும் திங்களும் சாதகன்
திசை சித்ர மபகாரமும்
திரமான கிரக நிலை அறிந்துசொல் சாதகம்'' (5)

என்ற நூற்பாவால் அறியலாம்.

இங்ஙனமான சாதக இலக்கிய வகையின் உறுப்புக்களைச் சதுரகராதி, வாரம், ஒரை, திதி, யோகம், நட்சத்திரம், கரணம், கிரகம் என்று ஏழாகக் கூறுகிறது. பாட்டியல் நூல்கள் உறுப்புகளின் எண்ணிக்கையை ஏழு என ஒருமித்துக் கூறுகின்றன. ஆனால் ஏழு உறுப்புகள் யாவை என்று கூறுவதில் வேறுபடுகின்றன. இக்கருத்து வேறுபாட்டால் சாதகம் என்னும் இலக்கிய வகை உறுப்புகளின் பெயர்கள் ஏழிலிருந்து பதினாறாக உயர்கின்றன. திதி, வாரம், நட்சத்திரம், யோகம், கரணம் எனவரும் ஐந்து அங்கங்களைக் கொண்டு கணித்தறியப்படும் 'பஞ்சாங்கம்' தோன்ற, சாதக இலக்கிய வகையின் அங்கங்கள் துணையாக இருந்திருக்கலாம்.[1]

சாதகம் என்னும் இலக்கிய வகையில் மிகுதியாக நூல்கள் எழவில்லை. கி.பி.18ஆம் நூற்றாண்டு வாழ்ந்த குமாரதேவர் என்பார் 'சுத்த சாதகம்' என்ற நூலொன்று எழுதியுள்ளார். சேஷசாத்திரியாரின் 'ஸ்ரீராம சாதகம்' என்னும் நூல் கி.பி.19ஆம் நூற்றாண்டில் பதிப்பிக்கப் பெற்றுள்ளது என்றும் அறியமுடிகிறது.

நட்பு, ஆட்சி, உச்சம், பகை, நீசக்கோள் என்பன கோள்களின் நிலைகளை உணர்த்துதலே சாதகம் என்று சீவகசிந்தாமணி எடுத்தியம்புகிறது.

"தத்தம் நிலனும், உயர்வும் இழிவும்
பகையும் நட்பும் தம்தசையும்
வைத்து வழுஇல் சாதகமும்
வகுத்த பின்னர்த் தொகுத்தநட்
சச்சந்தணனே சுதஞ்சணனே
தரணி கந்துக்கடன் விசயன்
தத்தன் பரதன் கோவிந்தன்
என்று நாமம் தரித்தாரே" (13:107)

பாட்டுடைத் தலைமக்களுக்குச் சாதகம் பார்த்துக் கூறுதல் என்னும் வழக்கையொட்டி, சீவகசிந்தாமணியில் சீவகனுக்கும் தத்தைக்கும் சாதகம் கணிக்கப்பட்டுள்ள செய்தி காணப்படுகிறது.

"அரும்பொற் பூணுமாரமு மிமைப்பக் கணிகளகன் கோயில்,
ஒருங்கு கூடிச் சாதகஞ் செய்து" (308)

1. பாட்டியலும் இலக்கிய வகைகளும் பக்.44-50

என்ற அடிகள் நாளும், ஓரையும் கணிக்கின்ற நிமித்திகர் அனைவரும் ஒன்றுகூடிச் சீவகனின் சாதகத்தைக் கணித்தனர் என்பதைக் காட்டுகின்றது.

"காவியங் கண்ணி வந்து பிறத்தலுங் கணிகளீண்டி
மூவிய திரித லின்றிச் சாதக முறையிற் செய்தார்" (1686-31)

என்ற அடிகளில் கண்ணி பிறந்த அளவிலே சோதிடர் உதயாருடக் கவிப்புக்ளில் தப்பின்றாகச் சாதகத்தை நினக்கேயுரிய முறைமையாற் செய்தாராதலின் நினக்கே இவளுரியளென்று கூற, அவனும் ஒப்புக் கொண்டான் என்று கூறுவதன் வழி தந்தைக்குச் சாதகம் எழுதிய செய்தி பெறப்படுகின்றது. இச்செய்தியினை,

"மந்திரத் தரசன் வல்லே நிமித்திகன் வருக வென்றாற்
கந்தரத் தோடு கோளிற் சாதக மவனுஞ் செய்தான்
இந்திர திருவி லேய்ப்பக் குலவிய புருவத் தாட்டு
வந்தடை பான்மை மண்மே லிராசமா புரத்த தென்றான்"
(சீவக.539-47)

என்ற பாடல் மெய்ப்பிக்கின்றது. விச்சாதரலோகத்தின் கண் அரசன், கடுகச் சாதகம் செய்து வருக என்று கூறியதற்கேற்பக் கணியும் கோள்களை அடிப்படையாக வைத்துச் சாதகம் எழுதினான் என்பது சாதகம் எழுதுவதில் மன்னர் செலுத்திய ஆர்வத்தினைக் காட்டுகின்றது. திருமணம் நிகழ்ந்த நாள் பார்த்து மட்டுமன்றி, மணமக்களின் சாதகங்களைக் கொண்டு பலனறிந்து திருமணம் முடிவு செய்யப்பட்டிருக்கிறது என்பதும் தெரிகிறது.

இராமாயணத்தில் இராமன் முதலிய தலைமக்களுக்குச் சாதகம் எழுதப்பட்டு அதன்வழி பலனறியப்பட்டிருக்கிறது.

"வேய்புனர் பூசமும் விண்ணு ளோர்புகழ்
தூயகர்க் கடகமு மெழுந்து துள்ளவே"
"பூசமும் மீனமும் பொலிய, நல்கினாள்
மாசுஅறு கேகயன் மாது மைந்தனை"
"அளைபுகும் அரவினோடு அலவன் வாழ்வுற
இளையவற் பயந்தனள், இளைய மென்கொடி"
"மடங்கலும் மகமுமே வாழ்வின் ஓங்கிட
விடம்கிளர் விழியினாள், மீட்டும்" (பால.281, 284, 285, 286)

என்பன முறையே இராமன், பரதன், இலக்குவன், சத்ருக்கன் (சிம்மராசி) ஆகியோர் பிறப்பிற்கு எடுத்துக்காட்டப் பெறும் குறிப்புகளாகும். இதன்வழி கம்பர், இராமன் முதலிய தலைமக்களுக்குச் சாதகம் கூறும் பாடல்களை இயற்றியுள்ளார் என்பதை அறிய முடிகிறது. இந்தச் சோதிடக் குறிப்புகளின் அடிப்படையிலேயே தசரத குமாரர்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகள் நடைபெற்றுள்ளன என்பதை இக்கால சோதிடர் பலரும் சான்றாக எடுத்துக் காட்டுவர்.

பாரதத்தில் காணப்படும் சில பாத்திரங்களுக்குச் சாதகக் குறிப்புகள் காணப்படுகின்றன. முகூர்த்தம், வாரம், நட்சத்திரம், திதி, கரணம், யோகம், ஒன்பது கோள்கள் ஆகியன மங்களகரமாய் அமைந்திருக்கத் தருமர் பிறந்தார் என்பதை,

"சிவமுற முகூர்த்தம் வாரந் தினந்திதி கரணம் யோகம்
நவமென வழங்கு கோளும் நன்னிலை நின்ற போதில்
அவனியை யொருகோ லோச்சி யாளுமென் றறிவின் மிக்க
தவநெறி முனிவர்கூறப் பிறந்தனன் றருமன் மைந்தன்" (1:2.67)

என்ற பாடல் உணர்த்துகிறது.

பகலிலோ, இரவிலோ பதினைந்து இருபது நாழிகைக்குள் பிறப்பவர் உலகில் பிரகாசிப்பர் என்று 'சோதிடவிதி' கூறும். அதற்கொப்பத் துரியோதனன் சூரியன் உச்சியை அடைந்ததால் சிறந்ததாகிய ஒரு நல்ல வேளையில், வியாசர் சொன்ன நாள் தவறாமல் தோன்றினான் (1:276, 78).

பங்குனி மாதத்தில் பௌர்ணமியில் பங்குனி உத்தர நாளில் அருச்சுனன் பிறந்தான் என்பதை,

"எங்குநன் நிமித்தஞ் செல்ல வருநில மகிழ்ச்சி கூரப்
பங்குனி நிறைந்த திங்க ளாதபன் பயிலு நாளில்
வெங்குனி விரிவில் வாகை விசயனும் பிறந்தான் வென்றிப்
பங்குன னென்று நாமம் பகுதியாற் படைத்திட் டானே" (1:2.83)

என்ற பாடல் காட்டுகிறது. துரியோதனனுடைய தம்பிமார்கள் 99 பேரும் கோள்கள் சரியாக அமையாத நேரத்தில் பிறந்தனர் என்பதை,

''கோள்களி னிலையாற் றீமை கொண்டன முகூர்த்தம் தன்னில்
தேள்களிற் கொடிய மற்றை சிறுவருஞ்சேர வோரோர்'' (1:2.80)

என்ற அடிகள் காட்டுகின்றன. வியாசர் முன்பே குறித்துத் தந்த நாட்களில் இவர்கள் பிறந்துள்ளனர் என்பது சோதிடத்தின் துல்லியத் தன்மையைக் காட்டுகிறது. பின் இவர்களுக்குச் சாதகம் கணிக்கப்பட்டு பலன்களும் பார்க்கப் பெற்றமைக்கான குறிப்புகளை நூலின்வழி உய்த்துணர முடிகின்றது. 'தாக்குகின்ற சாதகந்தா னேணி யாகும்' என்ற சித்தர் பாடலடி 'சாதகம்' பற்றிக் குறிப்பிடுகிறது.

கர்ப்பதான முதலிய பதினாறு கர்மங்களால் ஒருவன் சுத்தமடைகிறான். தருமங்களை ஒருவன் கைவிடாமல் கடைப்பிடித்தால் முக்தி இன்பம் கைகூடும். இக்கருமங்கள் 16 பற்றியும் திருவானைக்கா புராணம் கூறுகிறது.

''பூண்இருது சங்கமனம் கருப்பா தானம்
புஞ்சவனம் சீமந்தம் சாத கன்மம்''

இக்கருமங்கள் பதினாறுள் சாதகக் கர்மமே முதன்மை பெற்றது. இந்தப் பதினாறு கர்மங்களைக் கைவிட்டார் அளவில், காலம், கொடிய நரகங்கள் சென்று இடர்ப்படுவர் எனச் சூதசம்மிதை கூறுகிறது.

இதனை யுணர்ந்தே முன்னோர் சாதகக் கன்மத்தைச் செய்து வந்தனர் என்பதைப் புராண இதிகாசங்கள் காட்டுகின்றன.

''தென்னவன் பெருமாள் சேய்க்குச்
சாதகச் செய்தி யாதி''
''மன்னவர்க்கு இயன்ற வேத
மரபினால் வயங்க ஆற்றி''
''அவ்வண்ணஞ் சாதமுதல் வினைநிரைப்பித்
தடாதகை யென்று அழைத்துத் தேவி''
(திருவிளையாடற் புராணம்)
''சூதநிகழ் மங்கல வினைத்துழனி பொங்க
சாதக முறைப்பல சடங்கு வினை செய்தார்''
(சம்பந்தமூர்த்தி சுவாமிகள் புராணம்)
''காதலனார் உதித்தற்பின்
கடன் முறைமை மங்கலங்கள்
(வாகீச பெருந்தகையார் புராணம்)

''சாற்றிய விதிமுறைச் சாத நல்வினை
ஆற்றினர் புவிமிசையங் களிக்கவே'' (மகாபாரதம்)

புராணங்களில் ஆழ்வார், நாயன்மார் முதலிய பெரியோர்களின் அவதாரக் காலங்கள் கோள் அமைப் புடனும், சாதகத்துடனும் இடம் பெற்றிருக்கின்றன.

திருப்புல்லாணி எம்பெருமான் மீதும் பதுமாசனித் தாயார் மீதும் பாடிய கிளைப்பாட்டு என்ற சிற்றிலக்கிய நூலில் சாதகம் எழுதப்பட்டதை, 'நினைவின்படி சாதகர்மம் செய்யத் தொடுத்தாள்' (20) என்ற அடி காட்டுகின்றது

இங்ஙனம் சாதகம் கணிக்கப்பெற்றதோடு மட்டுமல்லாமல் அதனைக் கொண்டு வாழ்நாட் பலன்கள் சிறப்புற இயம்பப்பட்டு மக்கள் அதன்வழி ஒழுகியும் இருக்கின்றனர். இப்பலன் முற்பிறப்பில் செய்த வினைக்கேற்ப அமைகிறது என்பதாகவே மக்கள் பலர் நம்புகின்றனர்.

**விதி**

ஒருவர் முற்பிறப்பில் செய்த நல்வினை, தீவினை இவற்றின் அடிப்படையில் இப்பிறப்பில் அவனது சாதகப் பலன் அமைகிறது என்ற நிலையில் அதுபற்றிய சிந்தனை இவண் முன்வைக்கப்படுகிறது. 'இவன் ஏன் இப்படி இருக்கிறான்' என்று கேட்டால் 'அது அவன் செய்த வினை' என்ற விடையும், 'ஏனப்பா உனக்கு வேலை கிடைக்க வில்லை' என்று வினவினால் 'என்ன செய்வது என் விதி அப்படி' என்பதான விடையும் நடைமுறை வாழ்க்கையில் அன்றாடம் செவியில் படும் செய்திகளாகவே உள்ளன. விதி, ஊழ் ஆகியவற்றின் அடிப்படையில் மக்களது செயல்பாடுகள் அமைகின்றன என்ற கருத்தும் பரவலாகக் காணப்படுகிறது.

முற்பிறப்பின் நல்வினை, தீயவினைகளுக்கேற்ப இப்பிறப்பில் அவர்களுடைய பிறவி அமைகிறது எனச் சோதிடம் கூறுகின்றது. கரு உருவாகின்ற நேரமே இந்த அடிப்படையில்தான் அமைகின்றது. எனவே ஒருவனது நல்வினை, தீவினைகளுக்கு ஏற்ப அவன் உருவாகும் நேரம் நல்லதாகவோ, கெட்டதாகவோ அமைகின்றது. 'கருவில் திருவுடையார்' என்பதன் பொருளே அவர்கள் முற்பிறப்பில் நல்வினை செய்தார் என்பதை அடிப்படையாகக் கொண்டு எழுந்ததே.

இலக்கியங்களில் சோதிடஞ் சார்ந்த செய்திகள் மக்களது வாழ்க்கையில் காணப்படுகின்ற அளவிற்குத் தென்படவில்லை யென்றாலும் சிற்சில இடங்களில் இடம்பெற்றே வந்துள்ளன. ஒருசில இடங்களில் சோதிடச் செய்திகள் நேரடியாகக் காணப்படவில்லை யென்றாலும் அதன் உட்பொருளாகிய 'முன்வினைப்பயன்' 'ஊழ்' முதலான தன்மைகளைத் தன்னுள் அடக்கிக் கொண்டுள்ள பல நிகழ்வுகளைக் காணமுடிகிறது.

வினைக்குத் தகுந்த பலனை அடைவதே ஊழ். ஒருவர் இப்பிறப்பில் செய்த வினை அல்லது முன்னோர் செய்த வினை மட்டுமல்லாது முற்பிறப்பில் செய்த வினைகளும் இப்பிறப்பில் வந்து பலனாக விளையுமென்பதே 'ஊழ்' எனப்படுகிறது. எனவே ஒருவனது நல்வினை, தீவினை என்பது அவனது ஊழ்வினையின் பாற்பட்டதே. 'கேடு வரும் பின்னே மதி கெட்டுவரும் முன்னே' என்ற பழமொழிப்படி துன்பம் வருவதற்கு முன் அறிவு கெடக் காரணம் ஊழே.

மக்கள் வாழ்வின் காலக்கண்ணாடியாக விளங்கும் சங்ககாலம் முதல் இன்று வரையிலான இலக்கியங்கள் ஊழ், விதி, வினை என்பனவற்றைப் பேசாமல் விட்டதில்லை. 'தீதும் நன்றும் பிறர் தர வாரா' (புற.192) என்று புறநானூறு தொடங்கி, 'வழி அடைக்கும் கல்லாகத்தான் முந்துறும்' என்பதாகத் தமிழ்மறையான குறளால் வரையறுக்கப்பட்டு 'விதியின் பிழை' என்ற கம்பன், பின்னும், 'விதிபிடர் பிடித்து உந்துகின்றது' என்பதாகக் காட்டி வாழ்வோட்டத்தின் வழிநெடுக இது விரவிக் காணப்படுவதைப் படித்தறிய முடிகின்றது.

ஊழினைப் பற்றிக் குறிப்பிடுகின்றபோது 'பால்வரைத் தெய்வம்' என்று தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார். முறை, பால், உண்மை, தெய்வம், நியதி, விதி என்ற வேறு சொற்களாலும் ஊழ் என்பது குறிப்பிடப்படுகிறது. ஊழ் என்பதற்கு, 'பழைமையும் மரபும், பகையும் ஊழ் எனல்' (3218) என்று பிங்கல நிகண்டு பொருள் கூறுகிறது. சைவம், வைணவம், பௌத்தம், சாங்கியம், யோகம், மீமாம்சம், வேதாந்தம் ஆகியவை ஊழ்வினைக் கோட்பாட்டு அடிப் படையிலான மறுபிறப்பு உண்மையை ஒத்துக் கொள்கின்றன.

தொட்டதும் பட்டதும் எல்லாம் விதிவினை என்பதாக மனித வாழ்வில் ஒரு கூறாக, நீக்கமற நிறைந்த ஒன்றாக விளங்கும் இப்பண்பினை வள்ளுவர் 'ஊழ்' என்று குறிக்கின்றார். ஒருவன் வாழ்க்கையில் எதிர்பாராது ஏற்படும் உயர்வினை 'ஆகூழ்' எனவும், தாழ்வினைப் 'போகூழ்' எனவும் சுட்டிச்செல்லும் பொய்யிற்புலவர், தான் சூழினும் முந்தூறும் என ஊழினைப் பலமாகக் கூறியுள்ளார். இவர் 'ஊழிற் பெருவலி யாவுள' என்று கூறுவது ஊழின் ஆற்றல் அளவிடற்கரியது என்பதைக் காட்டுகிறது.

ஊழின் ஆற்றலை எடுத்தியம்பும் வகையில் அமைந்த பாடல்களை இலக்கியங்களில் காணமுடிகிறது.

> ''நாழிலும் இழுக்கும் ஊழ்அடி முட்டமும்'' (குறி.258)
> ''நுண்ணிதின் உணர நாடி நண்ணார்
> செறிவுடைத் திண்காப் பேறிவாள் கழித்து
> உருகெழு தாயம் ஊழின் எய்தி'' (பட்.227)

ஊழின் ஆற்றலை எண்ணி, தீவினையால் உண்டாகும் பழிக்கு அஞ்சி வாழ்க்கையில் நல்வினைகளையே செய்து ஒழுக வேண்டும் என்ற எண்ணப் போக்கினை,

> ''ஊழ்வலி யுண்ணிப் பழிநாணி யுள்ளுடைவார்
> தீய செயினுஞ் சில'' (நீதி.விள.75)

என்ற அடி காட்டுகிறது.

ஊழின் ஆற்றலால் அறிவும் செயல் இழந்து போகும் என்பதை 'அறிவினை ஊழே அடும்' (பழ.228) என்பதால் அறிய முடிகிறது. அதனால்தான் சிறந்த அறிவுடையோரும் சில நேரங்களில் தம் நிலையிலிருந்து தாழ்ந்து தரங் குன்றிய செயல்களைச் செய்து விடுகின்றனர்.

அரிய முயற்சிகள் பலவற்றில் ஈடுபட்டு ஒய்வின்றி உழைத்து, செல்வங்களை ஈட்டினாலும் ஊழின் அருள் கிட்டாமல் போனால் அவன் அடையக்கூடியவை யாவும் பயன்பாடில்லாதவையாக மாறும் என்பதை,

> ''என்செய்து ஆங்கு என்பெறினும்
> ஆகாதார்க்கு ஆகுவதுஇல்'' (பழ.237)

என்ற அடிகளாலும், நம் மனம் விரும்பினாலும் வெறுத்தாலும் அதற்காக ஊழ் தன் செயற்பாடுகளிலிருந்து ஒரு சிறிதும் மாறுபாடு அடைவதில்லை என்பதை,

''வேண்டினும் வேண்டாவிடினும் உறற்பால
தீண்டா விடுதல் அரிது'' (பழ.230)

என்ற அடிகளாலும் அறிய முடிகிறது.

ஊழினால் செலுத்தப்படுகின்ற அம்புகள் தம் இலக்கினை நோக்கிச் சென்று தாக்கி நிற்கின்றதே ஒழிய திசைமாறி நிலத்தில் விழுந்துவிடுவதில்லை. ஆதலால் அவரவர் செய்த வினைக்குத் தக்க பலன்களை அவரவர் அனுபவித்தே ஆக வேண்டும் என்ற கருத்தினை,

''ஊழ்அம்பு வீழா நிலத்து'' (பழ.204)

என்ற அடியில் காண முடிகிறது.

மனிதனின் வாழ்நாள் நிகழ்வுகள் யாவும் விதியின் அடிப்படையில்தான் நிகழ்கின்றன என்ற நம்பிக்கை நிலவி வந்ததை,

''ஊழிவலஞ் செய்தங்கு ஓரும்ஒருவற்கு என்றும்
வீழித் தலைநீர் விதித்தது தாவென
ஊழிக் கதிரோன் ஒளியை வென்றானே'' (திரு.380)

என்ற அடி உணர்த்துகிறது.

ஊழ் என்பது இருவினைகளை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது என்பதை,

''இருவினை நாடி உயிர்தொறும் அமைந்த
ஊழையும் கடந்ததுன் வாய்மையின் மதனே'' (கல்.67)

என வரும் அடிகளின்வழி அறிய முடிகிறது.

''தான்முன்னஞ் செய்த விதிவழி தானல்லால்
வான்முன்னஞ் செய்தங்கு வைத்ததோர் மாட்டில்லை
கோண்முன்னஞ் சென்னி குறிவழியே சென்று
நாண்முன்னஞ் செய்ததே நன்னில மானதே'' (2848)

என்ற திருமந்திரப் பாடலின்வழியே ஒவ்வொருவரின் சாதக அமைப்பும் அவரவர் செய்த வினைகளின் அடிப் படையிலேயே அமையும் என்பதை அறிய முடிகிறது.

மக்களின் கர்மவினைக்கு ஏற்றபடி நன்மை தீமைகள் ஏற்படுகின்றன என்பதனை,

"பரிதிமுத லாங்கோ ளனைத்தும் மாயன் முதலாம் பலதேவும்
புரியுங்கரும மெவையு நமது ஏவல்தலை யின்மிசைப் பூண்டு
மருவி யியற்றா நிற்குமென மனத்தின் உணர வேண்டுமால்"[1]

என்ற பாடலில் இலிங்கபுராணம் உணர்த்துகிறது. நல்வினை செய்தவர்களுக்கு நல்ல கோள்கள் நல்ல இடங்களிலும், தீவினை செய்தவர்களுக்குக் கெட்ட இடங்களிலும் நின்று அவரவர் வினைக்கேற்ப நன்மை தீமைகளாகிய இன்ப துன்பங்களைக் கொடுக்கும். சோதிடத்தில் இச்செய்தி, 'நின்ற கிரகத்தால் நிகழ்த்து பலன்புகலும்'[2] என்ற அடியால் உணர்த்தப்பெறுகின்றன.

"சீராரும் சன்மசுகம் செய்குவ துங்குலத்தின்
ஏராரும் செல்வவளம் ஏற்றுவதுநீ தேரா
முனஞ்செய்த நல்வினையின் மூன்றுவழி யும்மாஞ்
சனன பத்தி ரம்எழுதுதல்" (ஐயாசுவாமீயம்)

என்ற இப்பாடலைச் சேதுபரியந்தமுள்ள அழிந்துபோன தனுஷ்கோடி முதல் இமயம் வரை நமது பாரத ஆண்டில் அவரவர் சாதகங்களில் முதல் மங்களச் சுலோகமாகச் சோதிடர் எழுதி வருகின்றனர். இப்பிறப்பில் அனுபவிக்கக் கூடிய இன்பதுன்பங்களாகிய பலாபலன்கள் இன்ன தென்பதை நல்வினை தீவினைகளென்னும் சுபாசுப கர்மங்களைத் 'தீபம்' என்னும் சோதிட சாஸ்திரம் தெரியப்படுத்துகின்றது.[3] எனவே இருவினைகளின் அடிப்படையிலேயே ஒவ்வொரு மனிதனுக்கும் சாதகம் அமைகிறது என்பதைச் சோதிட நூல்கள் தெளிவாக வெளிக்காட்டுகின்றன.

மக்கள் அனுபவிக்கும்படியான நன்மை தீமைகள் முற்பிறப்பில் செய்த வினைக்கேற்ப கரு உருவானபோதே தலையெழுத்தாக பிரம்ம தேவனால் எழுதப்பட்ட ஒன்று என்பதை இலக்கியங்களில் பரவலாகக் காணமுடிகின்றது.

"அவரவர் தமக்கும் உள்ள ஆயுசும் தொழிலும் பொன்னும்
இவர்களின் வித்தை செல்வம் எழில்மர ணங்கள் ஏழும்
தவமுடைப் பிரம தேவன் தனதுகைத் தொடங்கி முன்னர்
சிவனுடை அருளினாலே கர்ப்பத்தில் நிச்ச யிப்பான்" (நீதிசாரம்)

2. சாதக அலங்காரம், ப.19. 3. மேலது. ப.34.

''அயனார் எழுத்தளவு அன்றியே அதிகங்கணப் பொழுது ஆயினும்
பயனாய் இருப்பவர் இல்லை இப்படி மீதில அப்படி அன்றியே
வியனாய் உனைத்தொழு வார்கள் அவ்விதி வெல்வர் ஆய்மறை
நயநார தன்புகழ் சோதியே நாராயணா நாராயணா சொல்லுமே''
(வடவேங்.சத.)

''வேண்டிமுற் பிறப்பில் செய்த வினைகளின் காண்தரும்
இந்நூல் கொண்டு பயனை எல்லாம் காணலாம் தீபம் ஏத்தே''
(சரசோதி மாலை)

''அழுதாற்பயன் என்ன நன்மையும் தீமையும் பங்க யத்தோன்
எழுதாப்படி வருமோ சலியாதிரு என்ஏழை நெஞ்சே''
(பட்டினத்தார் பாடல்கள், 37)

''போமோ தலையில் பொறித்தான் பிறழ்ந்து நினைப்பினுமே''
(விநாயக புராணம்)

''அவரவர் தீட்டி வைத்த ஆயுளின் அளவை காறும்''
(குசேலர் உபாக்கியானம்)

''இருவினை யகற்று மந்தமலை'' (9:28)

என்ற பகுதியில் அருணாசல புராணம் நல்வினை தீவினை பற்றிக் கூறி, தீவினை அகல இறைவழிபாட்டை வற்புறுத்துகின்றது.

''மறவினையின் வித்திட்டால் வன்றுண் புறுமா
லறவினையின் வித்திட் டாலரின் புறமிந்
நியதிநிகழ் வூழிநாண் நீக்க முடியாதென்
றியலறிந்தார் சொன்னாரிவன்'' (மெய்யறிவு, விதியியல் அறிதல்)

என்ற வ.உ.சி. தம் பாடலில் மறவினை புரிபவர்க்குத் துன்பம் வந்து சேரும்; அறவினை புரிபவர்க்கு இன்பம் வந்துசேரும். ஆதலால் விரும்பும் நிகழ்வுக்குத் தக்க வகையில் செயல்புரிக என்று மானிடர்க்கு அறிவுறுத்து கிறார். மானிடன் ஆசையின் காரணமாகத் தவறு செய்கின்ற போது அத்தவறு பின்னால் துன்பத்தைத் தரும். நன்மை செய்தால் இப்பிறவியிலும் மறுபிறவியிலும் நன்மை வந்து அடையும் என்று கூறுகிறார்.

முற்பிறப்புப் பற்றிய நம்பிக்கை சங்க காலத்திலிருந்து தொடர்ந்து இருக்கிறது. 'சாதல் அஞ்சேல்' என்பன போன்ற வற்றில் மறுபிறப்புப் பற்றிய நம்பிக்கை இருந்தாலும்கூட

முற்பிறப்பில் கணவன் மனைவியராக வாழ்ந்தவர் மறுபிறவியிலும் இவ்வாறே வாழ்வர் என்ற நம்பிக்கை காணப்பட்டதாகத் தெரியவில்லை. முற்பிறவியில் கணவன் மனைவியாக வாழ்ந்தவர் மறுபிறவியில் அதே உறவுநிலை தொடர்ச்சியுள்ளவர்களாக நிலவுவதை மணிமேகலையில் காணமுடிகிறது. உதயணன் மணிமேகலையை விரும்பி யதற்கு இவ்வுறவு நிலைத் தொடர்ச்சியே காரணமாக அமைகிறது.

ஊழ் பற்றிய நம்பிக்கைகள் மக்களது வாழ்வியலில் பின்னிப் பிணைந்து காணப்படுவதைப் போலவே கதைப் போக்குகளிலும் கலந்து நின்று சுவைத் தன்மைக்கும், கதைத் தொடர்ச்சிக்கும் துணையாக அமைகிறது.

சிலம்பின் இன்றியமையாத மூன்று கருப்பொருள்களுள் ஒன்றாக ஊழ் காணப்படுகிறது.

''ஊழ்வினை உறுத்து வந்தூட்டும்'' (பதிகம்.57)

கோவலன் முற்பிறப்பில் செய்த தீவினையே இப்பிறப்பில் அவன் கொலை செய்யப்பட்டான் என்று சிலம்பு கூறுகிறது. பாண்டிய வேந்தன் தவறாகத் தீர்ப்புக் கூறியதற்கும் அவனது ஊழ்வினையே காரணம் என்பதை,

''பண்டுதான் கொண்ட சில்லரிச் சிலம்பினைக்
கண்டனன் பிறனோர் கள்வன் கையென
வினைவிளை காலம் ஆதலின் யாவதும்
சினையவர் வேம்பன் தேரா னாகி'' (மேலது.22-28)

என்ற அடிகள் காட்டுகின்றன. மாதவி யாழ் கொண்டு இசைக்கும்போது உட்பொருள் வைத்துப் பாடியதற்குக் காரணமும் ஊழ்வினையே என்பதை,

''யாழிசைமேல் வைத்துத்தன்
ஊழ்வினை வந்துறத்தாகலின்'' (7:52)

என்ற அடி புலப்படுத்துகின்றது. அஃதோடன்றியும்,

''ஊழ்வினை கடைஇ உள்ளந் துரப்ப'' (10:4)
''ஒய்யா வினைப்பயன் உண்ணுங் காலை'' (14:33)
''இம்மைச் செய்தன யானறி நல்வினை'' (15:90-92)

என்பன போன்று அமைந்த அடிகள் ஊழின் அடிப்படையிலேயே வாழ்வியல் நிகழ்வுகள் நிகழ்கின்றன என்று கருதும் வகையில் அமைந்துள்ளன.

மணிமேகலை தவம் இயற்றும் தன்மை உடையவளாகக் காணப்படுவதற்கு ஊழே காரணமாக அமைகிறது என்பதை, *'ஊழ்தரு தவத்தள்'* (மணி.5:16) என்ற அடி புலப்படுத்துகிறது.

சமண சமய இலக்கியம் தனது கோட்பாட்டின் மிக இன்றியமையாத ஒரு கூறாக விதியை முதன்மைப் படுத்துகிறது. நல்வினை, தீவினையை இம்மதம் முழுமையாக ஏற்று வாழ்வின் முதல் கூறாகக் கொண்டுவிட்டது. ஆகவே சமணம் சார்ந்த காப்பியங்களான சீவகசிந்தாமணியும், சிலப்பதிகாரமும் கதைப் போக்கில் நேரிடும் மாற்றங் களுக்கும், திருப்புமுனைகளுக்கும் விதி, வினையே உற்ற காரணி என்பதாகக் காட்டுகின்றன.

இராமன் அரச குலத்தில் பிறந்து செல்வச் செழிப்புடன் வளர்ந்து முடி சூடுகின்ற நேரத்தில் காட்டிற்குச் செல்ல வேண்டிய சூழல் ஏற்படுவதற்கு விதியே காரணம் என்பதை, 'விதிவழியே அவன் நடந்தான்' என்னும் கருத்துடன் அமைந்த வரிகள் புலப்படுத்துகின்றன.

> ''குழைகின்ற கவரி இன்றி கொற்றவெண் குடையும் இன்றி
> இழைக்கின்ற விதிமுன் செல்ல தருமம்பின் இரங்கி ஏக
> மழைக்குன்றம் அனையான் மௌலி கவித்தனன் வரும்என்று
> தழைக்கின்ற உள்ளத்து அன்னாள் முன்ஒரு தமியன் சென்றான்''
> (கம்ப.நகர்.1)

தொடக்கம் முதல் இறுதிவரை நளவெண்பாவின் கதைப்போக்கும், அக்கதையின் தோற்றக் காரணமும் சோதிடஞ் சார்ந்தே கூறப்படுகிறது. பஞ்சபாண்டவர் வனவாசக் காலத்தின்போது மனத்துயர் மிக அடைந்து சோர்வுற்றிருந்த வேளையில் அவர்தம் மனத்துயர் நீங்கி தெளிவு பெறும் வகையில் நளன் கதையைக் கூறத் தொடங்குவதாகக் குறிப்பு காணப்படுகின்றது. நளன் தன் அரச போகத்தை இழத்தல், மனைவி மக்களைப் பிரிதல், உடல்நிறங் கறுத்தல் முதலான துன்பங்களுக்கு ஆளாவதும், பின்பு அவற்றிலிருந்து மீள்வதும் கலியின் காரணமாகவே என்று கூறப்படுகிறது.

பெரியபுராணத்தில் ஊழ் பற்றிய செய்திகள் பரவலாகக் காணப்படுகின்றன. சுந்தரர் பரவை நாச்சியாரையும், சங்கிலி நாச்சியாரையும் விரும்பி மணம் செய்து கொள்வதற்கு முற்பிறவியில் நிகழ்ந்த நிகழ்வுகளே காரணம் என்று சுட்டப்படுகிறது. சுந்தரர் பேரின்பப் பெருவாழ்வை அடைந்து ஈசனுடன் இருக்கின்ற நேரத்தில் பார்வதியின் தோழிகளாக இருந்த இரு பெண்களிடம் மையல் கொள்வதாக, அதனைக் கண்ணுற்ற ஈசன் அவரைப் பூவுலகிற்கு அனுப்பி அவ்விருவரையும் மனைவியராக அளித்ததாகக் கதைப்போக்கு செல்கிறது. மேலும் சுந்தரர் அத்தகைய முன்வினைப் பயனிலிருந்து திசைமாறித் தான் வேறு ஒரு பெண்ணைத் திருமணம் செய்துகொள்ள இருந்த நேரத்தில் அவரது முன்வினைப் பயனின் காரணமாக ஈசன் அவர்முன் தோன்றி தடுத்தாட்கொண்டு அவர்தம் வாழ்வு திசைமாறிச் செல்வதற்குத் துணைபுரிந்தார் என்பதும் ஊழின் அடிப்படையை நிறுவுவதாகக் காணப்படுகிறது.

ஊழ் பற்றிய செய்திகள் வெளிப்படையாகக் காணப் படுவதோடு மட்டுமன்றி, வினையடிப்படையில் அமைந்து ஆனால் வெளிப்படையாகக் கூறாத வகையிலும் இலக்கியங்களில் இடம் பெறுகின்றன.

சிலப்பதிகாரத்தில் திருமணமான சில நாட்களிலேயே கோவலன் மாதவியின் மேல் மையல் கொண்டதால் கண்ணகி அவனைப் பிரிந்து வாழ்கின்ற சூழலுக்கு உள்ளாகிறாள். அவன் மாதவியிடமிருந்து மீண்டு வந்த பிறகும் அவனோடு அதிக நாட்கள் வாழமுடியாத நிலையை அடைகிறாள். இத்தகைய நிகழ்விற்கு அவளது ஊழே காரணமாக இருக்கலாம்.

கம்பராமாயணத்தில் அரச குடும்பத்தில் பிறந்த சீதை கண்ணகியைப் போன்றே திருமணமான காலந்தொட்டு இறப்பு எய்துகின்ற காலம் வரை பெருந்துன்பத்திற்கு உள்ளாக்கப்படுகின்றாள். கணவனைப் பிரிந்து அயலான் ஒருவனின் சிறைக் காவலில் இருந்ததுடன் மீண்டு வந்த நாளில் கணவனின் ஐயுறவிற்கு ஆளாகித் தீயில் இறங்கித் தன் கற்பை நிரூபிக்கின்றாள். அதன் பின்னரும் கர்ப்பிணியான நிலையில் தனிமையில் வாழ்ந்து

குழந்தையைப் பெற்று, வளர்த்து வருகின்ற நாளில் எதிர்பாராத விதமாகக் கணவனைச் சந்தித்து மீண்டும் சந்தேகத்திற்கு ஆளாக்கப்படுகிறாள். வாழ்வின் மேல் இருந்த பற்றுகள் அத்தனையும் நீங்கப்பெற்று பூமியினுள் புதைந்து போகிறாள். இங்ஙனம் சீதை தொடக்க காலம் முதல் இறுதிவரை போராட்டத்திலும் மனத்துன்பத்திலும் வாழ்ந்து வந்ததற்குக் காரணம் ஊழாக இருந்திருக்கலாம்.

பாரதத்தில் தர்மன் நியாய உணர்வு நிரம்பியவனாக, மனக்கட்டுப்பாட்டினின்று எந்நிலையிலும் நீங்காதவனாகத் திகழ்கின்றான். ஆயின் அவன் சூதாடி நாட்டினை இழப்பதுடன், சகோதரர்களையும், நாட்டு மக்களையும் துன்பத்தில் ஆழ்த்தி விடுகிறோம் என்ற சிந்தனையின்றிச் செயல்படுகின்றான். தன் மனைவியை வைத்துச் சூதாடி அவளையும் இக்கட்டில் ஆழ்த்துகிறான். அதன்பின் காடுகளில் அலைந்து பெருந்துன்பமுற்றுப் போராடித் தன் நாட்டை மீட்கிறான். இடையில் அவன் இழந்த இன்பங்கள் எண்ணற்றவை. துன்பங்களோ கற்பனைக்கு எட்டாதவை. நீதிமானாக, நிலைப்பாடுடைய தர்ம குணங்களைக் கொண்டவனாகத் திகழ்ந்த தர்மனின் நிலை அவன் முன்வினை காரணமாக இவ்வாறு இருந்திருக்கலாம்.

அதேபோன்று துரோபதி அரசனுக்கு மகளாகப் பிறந்தும், மிகச்சிறந்த வீரர்களாகிய பஞ்சபாண்டவர்களை மணந்தும் காடுகளில் அலைந்து துன்புறுகின்ற நிலையினையும், காப்பதற்கு ஒருவருமின்றி துரியோதனன், துச்சாதனன் ஆகியோரால் துன்புறுத்தப்படுவதனையும் நோக்குகின்ற பொழுது இதுவும் முன்வினை காரணமாக இருந்திருக்கலாம் என்று கருத இடமுள்ளது.

ஆசிய சோதியில் விதிக்குத் தக்க வகையிலேயே இறப்பு நிகழும் என்ற கருத்து, மரத்தில் என்றோ வேடனால் எய்யப்பட்ட அம்பு மரத்தில் தங்கியிருந்து தன்கீழ் களைப்பாற வந்து தங்கிய பார்ப்பனக் கர்ப்பிணியின் மீது விழுந்து அவளைக் கொல்வதன் வழியாகவும், மேள வாத்தியத்தின் ஒலி கேட்டு மிரண்டு கயிற்றை அறுத்துக் கொண்டு ஓடிவந்த மாடு மணவறையில் அமர்ந்திருந்த மணமகனைக் கொம்பால் குத்திக் கொல்வதன் வழியாகவும் நிறுவப்படுகிறது.

மக்கள் இலக்கியங்களிலும் விதியின் காரணமாக முற்பிறவியின் செயல்பாடுகளுக்குத் தக்க வகையில் மறுபிறவியில் நிகழ்வுகள் நிகழும் என்ற அடிப்படையில் அமைந்த கதைப்போக்குகளைப் பரவலாகக் காணமுடிகிறது. சாரங்கதாரன் கதைப்பாடலில் சாரங்கதாரன் முற்பிறவியில் செய்த தீங்கின் காரணமாக இப்பிறவியில் கைகளும் கால்களும் வெட்டப்பட்டு கழுவில் ஏற்றப்படுவதாகக் கூறப்படுகிறது. இங்ஙனம் ஏட்டிலக்கியங்களில் மட்டுமன்றி மக்கள் இலககியங்களிலும் இவற்றின் தாக்கம் பெரிதும் காணப்படுகிறது. இவை யாவும் மக்களது விதி பற்றிய நம்பிக்கை அவர்தம் இலக்கியங்களில் புலனாவதைக் காட்டுகிறது.

இங்ஙனம் இலக்கியங்களில் படைக்கப்பட்ட பாத்திரங் களின் வாழ்வியலைப் பற்றி ஆய்வு செய்கின்றபோது அவற்றிலுள்ள நிகழ்வுகள் பலவும் விதி என்பதை அடியொற்றி நிகழ்ந்தது என்று கருதும் வகையில் அமைந்துள்ளது.

கோள்கள் தத்தம் ஆட்சிவீடுகளில் இருந்தாலும் மேடம், இடபம், கன்னி, கடகம், துலாம் உச்சமுற்றாலும், 1, 4, 7, 10 ஆகிய இராசிகளில் கோள்கள் கேந்திரம் பெற்றாலும், ஒன்பது கோள்களும் நல்ல பார்வை பார்த்தாலும்கூடத் தலையெழுத்தை மாற்ற முடியாது என்று விதியின் வலிமையை விளக்குகிறது இலட்சுமிகாந்த சதகம். மேலுமிது எந்தெந்த இராசிகளுக்கு எந்தெந்தக் கோள் உரியது என்பதையும், கோள்களின் வேறு பெயர்களையும் தெளிவுபடுத்துகின்றது. இதில் இரவி சூரியனையும், திங்கள் சந்திரனையும், பவுமன் செவ்வாயையும், சவுமன் புதனையும், சுக்கிரன் வெள்ளியையும் குறிப்பதாக அமைகிறது.

இரவிசிங்கம் திங்கள்கற் கடகமாம் பவுமன்
    இயல்மேட மேவி ருச்சிகம்
இனியசவு மன்கன்னி மிதுனமாங் குருவென்னில்
    இலங்கு தனுமீ னமாகும்
மருவுசுக் கிரன்இடப மொடுதுலாஞ் சனிகும்ப
    மகரமிணை யிடைசேரி டினுமா
மாமேட மிடபகம் கன்னி கடக
    மின்வரு துலாமுச்ச முறினும்

தருமுதைய னாலெழு பத்தெனுங் கேந்திரன்
தன்னில னியொடு மேவினுஞ்
சாற்றுமே காதேசந் தனிநவக் கிரகமும்
சார்த்து நல்பார்வை செயினும்
திருமருவு விதிவிகித மதைவிலக்கா தென்பர்
சீனுவா சய்ய தீரன்
சிந்தையுற வாசனே நாமகிரி நரசிங்க
தேவ லட்சுமி காந்தனே (36)

மேற்கூறியவற்றின் வழி நல்வினை தீவினைகளுக்குக் காரணம் முற்பிறப்பே என்ற சோதிடக் கருத்தை இலக்கியங்களும் வலியுறுத்தக் காண்கிறோம். இவ்விலக்கியப் படைப்பாளர்கள் நடைமுறை வாழ்க்கையை வைத்து விதியைத் தங்கள் படைப்புகளுக்குள் ஒரு பகுதியாக அமைத்திருப்பினும் அவர்கள் காலத்திலே, சோதிடம் குறித்த நூல்களைப் படித்தறிந்ததன் பொருட்டு இக்கருத்து அவர்களைப் பாதித்து படைப்புகளிலும் பதிக்கச் செய்துவிட்டது என்றும் கருதலாம்.

சோதிட நூல்களும் இலக்கியங்களும் கூறும் முற்பிறவியில் செய்ததற்கேற்ப மறு பிறவி என்பது பலரால் ஆய்வுக்குட்படுத்தப்பட்டு பல தெளிவுகளை, விளக்கங்களைப் பெற்றபோதும் முற்பிறப்பு, மறுபிறவி உண்டா இல்லையா என்பது இன்றுவரை அறுதியிட்டு நிறுவப்படாத உண்மையாகவே இருக்கிறது.

மனிதன் தான் செய்யும் தவறுகளுக்குத் தெய்வம் தன்னையோ தன் குடும்பத்தையோ பாதித்து விடுமெனவும், தன் தவறுகள் தன் குழந்தைகளை, எதிர்காலச் சந்ததியினரைப் பாதித்து விடுமெனவும் அஞ்சும் மனப்பான்மையை உடையவன். மனிதனுக்கு இயல்பாக உள்ள இவ்வச்ச உணர்வை தனக்குச் சாதகமாக எடுத்துக்கொண்டு சான்றோர் ஊழ், விதி, முற்பிறப்பு என்ற எண்ணங்களை மக்களிடையே பரப்பியிருக்கலாம். நாம் தவறு செய்தால் இப்பிறப்பில் மட்டுமன்றி அடுத்த பிறவியிலும் துன்பம் தொடரக்கூடிய அபாயம் இருக்கின்றதே என்று அஞ்சியாவது மனிதன் தன் தவறுகளைக் குறைத்துக்கொள்ள முயற்சிக்க மாட்டானா என்ற ஆதங்கத்தின் காரணமாகவும் இத்தகைய நம்பிக்கைகளை ஏற்படுத்தச் சான்றோர் முற்பட்டிருக்கலாம். ‘மக்களின் எண்ணம், செயல், குறியீடு முதலியவற்றுள் அடங்காமல் இவற்றிற்கும் அப்பாற்பட்டு இயற்கையாக நிகழும்

முறைமையே ஊழ்'[4] என்று கு.ச. ஆனந்தன் கூறும் கருத்தும், 'நாம் நினைக்கும் ஒவ்வோர் எண்ணமும், நாம் செய்யும் ஒவ்வோர் காரியமும், குறிப்பிட்ட ஒரு காலத்திற்குப் பிறகு சூட்சமத் தன்மையை அடைகிறது. பின்பு அது, வித்து வடிவத்தைப் பெற்று மறைந்திருக்கும் நிலையில் நமது சூட்சுமச் சரீரத்தில் வாழ்கிறது. மீண்டும் சிறிது காலத்திற்குப் பிறகு அது வெளிப்பட்டு வந்து தனக்குரிய பலன்களைத் தருகிறது. இந்தப் பலன்களே மனிதனுடைய வாழ்க்கையை நிர்ணயிக்கின்றன. இவ்விதம் மனிதன் தன் வாழ்க்கையைத் தானே உருவாக்கிக் கொள்கிறான். தனக்குத் தானே அமைத்துக்கொள்ளும் விதிகளைத் தவிர, வேறு எதற்கும் மனிதன் கட்டுப்பட்டவன் அல்ல'[5] என்று கூறும் சுவாமி விவேகானந்தர் கருத்தும் இங்கு ஒப்புநோக்கத்தக்கது.

இலக்கியங்களிலும், மக்களிடையேயும் ஆளுமை பெற்று விளங்கும் இவ்வூழிற்கு முன்வினையே காரணம் என்று சோதிட நூல்கள் கூறுவதை ஏற்றுக்கொள்வது பகுத்தறிவிற்கு ஒவ்வாததாக இருப்பினும் முன்வினையே சோதிடப் பலன் கூறும் முறைமைகளுக்கு அடிப்படையாக விளங்குகிறது. முன்வினை எப்படி இருக்கிறது, அதனால் இப்போதைய வினை எப்படி அமைகின்றது என்பது ஒருவனது சாதகத்தைக் கொண்டு பலனறியும்போது கண்டறியப்படுகிறது.

இலக்கியங்களிலே வெளிப்படையாக இன்ப துன்பங் களுக்குக் காரணம் பலவாறாக அமையினும் அவற்றிற்குக் கோள்நிலை அமைப்புகளே காரணம் என்கிறது சோதிடம். கோள்நிலை அமைப்புகள் அப்படி அமையக் காரணம் முன்வினை என்றும் கூறுகிறது. இங்ஙனம் பார்க்கும்போது படைக்கப்பட்ட பெரும்பான்மையான இலக்கியங்களின் அமைப்பு முறைக்கும், இன்ப துன்பச் சூழ்நிலை களையுடைய நடைமுறை வாழ்க்கைக்கும், சாதகமும் முன்வினையுமே காரணமாவது போல் தோற்றமளிக்கிறது. முற்பிறப்பு என்பது தெளிவு பெறுவது இயலா நிலையில், முயல்வது நடக்காத, முயலாதது நடக்கும் நிலையில் அனைத்தின் செயற்பாடுகளையும் சோதிடம், விதி என்பன

---

4. ஊழ் ஓர் ஆய்வு, ப.67. 5. மேலது. ப.71.

வற்றுள் அடக்கிவிடக் கூடிய நிலை தவிர்த்தற்கியலாதது. ஒருவர் விதியை மதியால் வெல்லலாம் என்றால் அங்ஙனம் வெல்லக்கூடிய ஆற்றல் உடையவன் அவன் என்பதையும் சோதிடம் காட்டுகின்றது. இங்ஙனம் வாழ்வோடு பின்னிப் பிணைந்த பிரிக்கவியலா சோதிடத்தின் பால் ஆய்வு என்பது பெரிதும் வேண்டற்பாலது.

## பலன்

கலைகள் பலவற்றுள்ளும் சிறந்த கலை சோதிடக் கலையே. ஏனெனில் பிற கலைகள் வாழ்க்கைக்குப் பயன்படுவன. சோதிடக் கலையோ வாழ்க்கையை நிர்ணயிக்கின்ற கலை. ஒருவனது வாழ்க்கை இப்படித்தான் இருக்கும் என்பதை முன்கூட்டியே அறிவிக்கின்றது. வருவதை முன்னரே தெரிந்து கொள்வதால் வாழ்க்கையை எச்சரிக்கையுடன் அமைத்துக்கொள்ள முடிகிறது. எனவே, சாதகம் கணித்துப் பலனறிந்து அதன்வழி பண்டைத் தமிழர் செயல்பட்டிருக்கின்றனர். இச்சாதகப்பலன் சாதகமாய்ப் பலன் கூறுவது என்ற பொருளையும் உள்ளடக்கியதுபோல் தோன்றுகிறது.

சோதிட சாஸ்திரிகள் கீழ்த்திசையினின்று எருசலேம் நகருக்குச் சென்றனர். எருசலேம் நகருக்கு வந்து (லூக்.2:7) யூதருடைய இராஜாவாகப் பிறந்திருக்கின்றவர் எங்கே? ஏனெனில் கீழ்த்திசையில் அவருடைய நட்சத்திரத்தைக் கண்டு அவரை ஆராதிக்க வந்தோம் என்றனர் (24:17: இசை.60:3). ஏரோதன் சோதிட சாஸ்திரிகளிடம் நட்சத்திரந் தோன்றின காலத்தைப் பற்றி விசாரித்து அறிந்தான். பிறகு அவர்களைப் பெத்லகேம் ஊருக்கு அனுப்பி நீங்கள் போய் பிள்ளைகளைப் பற்றி கவனமுடன் விசாரியுங்கள். அவரை நீங்கள் கண்டபின், நானும் வந்து அவரை ஆராதிக்கும்படி எனக்கு அறிவியுங்கள் என்றான். அரசன் சொன்னதைக் கேட்டபின் அவர்கள் புறப்பட்டனர். அப்போது இதோ, கீழ்த்திசையில் அவர்கள் கண்ட நட்சத்திரம். பிள்ளை இருந்த இடத்தில் நிற்கும் வரை அவர்களுக்கு முன் சென்றது. அவர்கள் நட்சத்திரத்தைப் பார்த்து மகிழ்ச்சியுற்றனர். பின்னர் வீட்டில் நுழைந்து பாலனை அவர் தாயான மரியம்மாவோடு கண்டு வணங்கி ஆராதித்தனர். அவர்கள் நித்திரையில் ஏரோதனிடம் திரும்பிப் போகாதபடி உத்தரவு பெற்றதால் வேறுவழியாய்த் தங்கள் நாடு திரும்பினர்.[6]

6. மத்தேயு இரண்டாம் அதிகாரம், பக்.2, 3

இதன்வழி ஆயிரம் மைல்களுக்கு அப்பாற்பட்ட செருசலம் என்னும் நாட்டில் பிறக்கப் போகும் ஏசுகிறித்து நாதரை இந்த நாளில் இந்த இடத்தில் அவர் பிறவி எடுப்பார் எனச் சோதிடத்தின் வழி அறிந்து செருசலம் எனும் இடத்திற்குச் சோதிடர் பயணம் செய்து அப்பெரும் ஆன்மாவை அவர்கள் வரவழைத்து வாழ்த்துக் கூறி வந்தனர். இந்நிகழ்ச்சி சோதிடம் என்பதற்கு எவ்வளவு உயர்ந்த அடிப்படை ஒரு காலத்தில் இருந்தது என்பதைக் காட்டுகிறது.

ஏசுகிறிஸ்து அவதரிப்பதற்கு முன்பாகவே, அவர் பிறப்பதைப் பற்றியும், அவர் மனித குலத்திற்குச் செய்யப் போகும் தொண்டுகள் பற்றியும், அறியாமை என்னும் இருளில் இருந்து மக்களை விடுவித்து அன்பு வழியை அவர் வலியுறுத்தப் போகும் நிகழ்ச்சிகள் பற்றியும் சோதிடர் வரையறை செய்து கூறியுள்ளனர். இப்படி ஏசுவின் தோற்றப் பெருமைகளையும், அவர் பிறக்கப் போவது பற்றியும் உலகுக்கு முன்கூட்டியே அறிவித்த சோதிடர்களில் முக்கியமானவர் பாரசீகத்தைச் சேர்ந்த 'அல்ஹாகீம்' என்பவர். இவர் ஏசுபிரான் பற்றி மட்டுமல்லாது நபிகள் நாயகம் பற்றியும், அவர் நிறுவ இருக்கும் மதம் பற்றியும், அவரது இணையற்ற பெருமை ஆகியன பற்றியும் எழுதி வைத்திருந்தார்.சங்ககாலக் கணியப்புலவர்களால் கணித்துக் கூறப்பட்ட பலன்கள் மிகப்பல. அவற்றுள் நமக்குக் கிட்டியுள்ள இலக்கியங்கள் வாயிலாகச் சிலவற்றையே அறிய முடிகின்றன.

'புலவர்கள் மட்டுமன்றி பலநாட்டு மன்னர்களும் சோதிடத்தில் விரிந்த ஞானம் பெற்றிருந்தனர். அவர்களுள் எழுத்தாற்றல் மிக்க பலர், பல கிரந்தங்களை எழுதி வைத்தனர். பல மன்னர்கள் பூகம்பம் முதலிய காலங்களை முன்னதாகவே சோதிடத்தின் உதவியாலறிந்து, அதற்குரிய பரிகாரங்களைத் தக்க பண்டிதர் மூலம் செய்வித்து நாடுகளைக் காத்தனர்.[7]

7. ஜோதிட ரஸார்ணவம், பக். 23, 24

நன்மை விளையும் காலத்தைக் கணித்தறிந்து அந்நல்ல வேளையில் வினைகளைச் செய்யத் தொடங்குவது அக்காலத்தில் பெருவழக்கமாக இருந்தது. நல்ல நாளும் வேளையும் பார்த்துச் செய்வதில் அவர்கள் பெருநம்பிக்கை உடையவர்களாக இருந்தனர். குடை நாட்கோள், வாள்நாட்கோள் என்பன இவற்றைத் தெரிவிக்கின்றன. விழாக்களும் நாள் பார்த்தே நடத்தப் பெற்றிருக்கின்றன.

பங்குனி மாதம் முதற் பதினைந்தில், கார்த்திகை நாளில், உத்திரம் உச்சியிலிருந்து சாய, மூலம் எழ, மிருகசீரிடம் மறைய ஒரு மீன் வடக்கும் கிழக்கும் போகாமல் இடைநடுவே தீப்பரக்க விழுந்ததன் விளைவாக விழுந்த ஏழாம் நாள் அப்போது மன்னாக இருந்த யானைகட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை இறப்பான் என்று கூடலூர் கிழார் கூற, கூறியவாறே அம்மன்னன் இறந்தான் என்ற செய்தி புறநானூற்றுப் பாடல் ஒன்றில் (229) காணப்படுகிறது. இங்ஙனம் கோள்நிலை உணர்ந்த சங்கத்துச் சான்றோர் இராசிச் சக்கர அடிப்படையில் கணக்கிட்டு மன்னர்க்கிறுதியாகும் என்று துணிந்திருக் கின்றனர். 'ஆடுகயல் தேன்தனுச் சிங்கத்தெழுமீன் விழுமேல் அரசழிவாம்' என்பது சோதிட நூல் குறிப்பு. தனிமனிதனுடைய சாதகம் பார்க்கப்படாமல் மன்னனுக்கு அழிவு என்று அறியப்பட்டமை தெரிகிறது.

விண்மீன்கள் நிலையினையும் அவற்றால் உலகில் ஏற்படும் நிகழ்வுகளையும், உலகம் நிலைபெறுவதற்குக் காரணம் மழை என்பதையும், அம்மழை வரவினை அறிவிக்கின்ற வெள்ளி தென்திசை நோக்கிச் செல்லுமானால் மழைவளம் குன்றும் என்பதையும் பட்டினப்பாலை தெரிவிக்கின்றது.

> "இருதின வேனலில் எரிகதிர் இடபத்
> தொருபதின் மேலும் ஒருமூன்று சென்ற" (மணி.11:4.41)

என்ற பாடல் வைகாசித் திங்கள் 14ஆம் நாள் சித்திரை நட்சத்திரமும் முழுமதியும் கூடிய நாளன்று அமுதசுரபி தோன்றும் என்று சோதிடக் குறிப்புகளைக் கொண்டு பலனறிந்தமையைக் காட்டுகின்றது. பீலிவளை தோன்றிய நாளில் வாழ்வின் பின் நிகழ்ச்சியும் மணிமேகலையில் (24:56-59) கூறப்படுகிறது.

தத்தைக்கு வந்து சேரும் நல்வினைப் பயனெல்லாம் மண்மேல் இராசமாபுரத்தே வந்து சேரும் என்று தத்தைக்குச்

சாதகம் எழுதிய சோதிடர் சாதகத்தைப் பார்த்துப் பலனும் கூறியிருக்கின்றனர் (சீவக.539-47). கிரகணத்தன்று பாம்பு ஒருவனைக் கடித்தால் தெய்வத்தால்கூட அவனைக் காப்பது கடினம் என்பதை,

''பாம்பெழப் பாம்பு கொண்டாற் பகவற்கு மரிது தீர்த்தல்
தேம்பிழி கோதைக் கின்று பிறந்தநா டெளிமி னென்று
காம்பழி பிச்ச மாகக் கணியெடுத் துரைப்பக் கல்லென்
தூம்பழி குளத்திற் கண்ணீர் துகணிலத்திழிந்த தன்றே'' (மேலது.1280)

என்ற அடி காட்டுகின்றது.

கிரகணத்தன்று பாம்பு கடித்தால் பிழைப்பது அரிது என்ற கருத்தை நோக்கும்போது வைத்தியர் தம் அனு பவத்தில் பாம்புக் கடிக்கு மருத்துவம் செய்து வந்தபோது மற்ற நேரங்களில் பாம்பு கடித்தவர் இறப்பதைக் காட்டிலும் கிரகணத்தன்று இறத்தல் என்பது பலமுறை நிகழ்ந்திருக்க வேண்டும். அந்நாளில் பாம்புக் கடிபட்டவர் எவரும் பிழைத்திருத்தல் இயலாது. வழக்கில் பலகாலும் நடைபெற்று வந்த இந்த நிகழ்வுதான் இலக்கியச் செய்தியாகவும் இடம் பெற்றுள்ளது. இந்நிகழ்வை அறிவியல் முறையில் அணுகி உண்மை அறிதல் கோள்களின் தாக்கம் உயிரினங்களைப் பாதிக்கிறது என்ற ஆய்வுக்குப் பயனுடைத்தாய் அமையும்.

''பிள்ளை யுள்புகுந் தழித்த தாதலால்
எள்ளன் மின்னிரை யின்று நீரென
வெள்ளி வள்ளியின் விளங்கு தோணலார்
